November 2017

# தமிழ்

8-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products


**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡളി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

November 2017 சுவடி — 7 ஓலை — 9


## வணக்கம் பல

‘இவ்வுலகம் மனிதர்களுக்கானது மட்டுமல்ல!’ என்றவொரு முழக்கம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகை நேசிக்கும் மகோன்னதமானவர்களால் முழங்கப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது சங்கப் பாடல்களும் இக்கருத்தை உயர்த்திப் பிடித்திருக்கின்றன.

தன் காதலனிடம் உரையாடும் ஒரு தலைவி, ‘என் சகோதரி நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்’ என்று ஒரு மரத்தைக் கைகாட்டுகிறாள். அம்மரம் ‘உனக்கு முன் பிறந்த உன் சகோதரி’ என்று அவளது தாய் கூறியதை வேதவாக்காகக் கருதுகிறாள் தலைவி என்று சங்ககாலத் தமிழ்ப் பாடல்கள் இவ்வுலகின் எல்லா உயிர்க்கும் உயர்வைத் தருகின்றன. வான்புகழ் வள்ளுவம் கூட, ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்றே பிரகடனப்படுத்துகிறது.

ஆனால் இன்றும் மனிதன் பெண்ணை அடிமைபோல நடத்துகிறான் என்பதைப் பரவலாகக் காணமுடிகிறது. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவது உலகெங்கும் வெவ்வேறு வடிவங்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

பெண்கள் தங்களைச் சுற்றியுள்ள கண்ணாடிச் சுவர்களை உடைத்து வெளிவரும் போராட்டத்தில் ஓயாத அலைகளாக மாய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது நாம் கண்டு வரும் வெற்றிகளில், ஒரு அரசு சமீபத்தில் பெண்களுக்கு வாகனம் ஓட்டவும், விளையாட்டுப் போட்டிகளை அரங்கம் வந்து காணவும் இருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளன. இது ஒருபுறம் மகிழ்வைத் தந்தாலும், உரிமைப் போரில் இப்படி ஒவ்வொரு அங்குலமாகப் பெண்கள் நகர்ந்து, முழு வெற்றியை ஈட்டுவதற்கு எக்காலம் ஆகுமோ என்ற ஆதங்கமும் எழுகிறது. ஆனால் அக்காலம் வெகுதொலைவில் இல்லை எனும் நம்பிக்கைக் கீற்று, முண்டாசுக் கவிஞனின் “மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்” என்ற பாடல் வரிகளாய் வெளிப்படுகிறது.


‘அறிவு ஜோதி’ பெண்களின் கைகளில் என்றும் பிரகாசிக்கட்டும்! அந்த விழைவுடன் அமைந்திருக்கின்ற முகப்புக் கட்டுரைகளுடன், பயனுள்ள பல படைப்புகளைச் சுமந்தபடி மலர்கின்ற இம்மாத ‘அய் தமிழ்’ இதழைக் கண்டு ரசித்து, வாசித்து வரவேற்று மகிழுங்கள்!

வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...




வளரும்! திண்ணம்!!!
உழைப்பால் உயர்வோம்
காந்தியின் விழியில் மதங்கள்
எங்கே திராவிடம்
அழிப்பின் விளிம்பில் மத வெறி
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
வாசிப்பில் வசிப்பு
ஆயுதம் செய்யோம்!
மருத்துவ தமிழ்
கதைகளில் வளரும் குணநலம்



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar
Vijayarajah

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam



**Contact us:**
editor@ithamil.com



# வளரும்!

2018—ஆம் ஆண்டு முதல், முதல்முறையாக, விளையாட்டு அரங்குகளில் பெண்கள் பார்வையாளர்களாக அமர, சௌதி அரேபிய அரசு அனுமதித்துள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரியாட், ஜெட்டா மற்றும் டமாம் ஆகிய நகரங்களில் உள்ள அரங்கினுள் குடும்பமாக அவர்களால் நுழைய முடியும். ஓட்டுநர் தடை நீக்கப்பட்ட பிறகு, சவுதி பெண்களுக்கு அதிக சுதந்திரம் அளிக்கும் வழியாக இந்த நகர்வு உள்ளது.

என அது தெரிவித்துள்ளது. தற்போது வரை, இந்த அரங்கங்கள் ஆண்கள் மட்டுமே செல்லக்கூடிய இடங்களாக உள்ளன.

`விஷன் 2030` என்ற பெயரின் கீழ், நாட்டில் சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களை கொண்டு வருவதற்காக இளவரசர் முகமது அறிவித்த பல சீர்திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன. `நவீன இஸ்லாமே` தனது நாட்டை நவீனமயமாக்க கடவுச்சாவி என்றார் இளவரசர் முகமது



சௌதியின் இளவரசரான முகமது பின் சல்மான், பொருளாதாரத்தை உயர்த்தவும், சௌதி சமூகத்தை நவீனமாக்கும் வகையில் சென்றுகொண்டு இருக்கிறார். சௌதி அரேபியாவின் விளையாட்டுத்துறை அதிகாரம், இந்த மூன்று அரங்கங்களிலும், `2018இன் துவக்கம் முதல், குடும்பங்களை அனுமதிக்க தயாராகும் வகையில்` ஆயத்தப்பணிகள் நடப்பதாக தெரிவித்துள்ளது.

உணவகங்கள், தேநீர் விடுதிகள் மற்றும் விளையாட்டை பார்க்க பெரிய திரை உள்ளிட்டவை அரங்கினுள் வைக்கப்பட உள்ளது

வரும் ஜூன் மாதம் முதல், பெண்கள் கார் ஓட்ட அனுமதிக்கப்படுகின்றனர் என்று, கடந்த மாதம் அரசு ஆணை பிறப்பித்தது. மீண்டும் இசைநிகழ்ச்சிகள் நடக்க உள்ளதோடு, திரைப்படங்களும் மீண்டும் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

70 சதவிகித சவுதி மக்கள் 30 வயதுகுட்பட்டவர்கள் என்றும், அவர்கள், `தங்களின் மதம், சகிப்புத்தன்மை என குறிப்பிடுதையே வாழ்க்கையாக` வேண்டும் என விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய நாளன்று, ரியாட்டில் உள்ள அரசர்




ஃபாட் அரங்கில், நடந்த நிகழ்ச்சியில் பெண்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட்டது. இதற்காக, சமூக வலைதளங்களில், பல பழமைவாதிகள் மூலம், அரசு பின்னடைவை சந்தித்தது.

சமீபத்திய மாற்றங்களையும் தாண்டி, வஹாபிசம் என்ற பெயரில், சுன்னி முஸ்லிம்கள் முறைப்படி, பெண்கள் இருக்கவேண்டும் என்பதால் பெண்களால் பல விஷயங்களில் சுயமாக முடிவெடுக்க முடியாது.

தந்தை, சகோதரன், மகன் உள்ளிட்ட ஆண்கள் அனுமதி அளித்தால் மட்டுமே பெண்கள் முடிவெடுக்க முடியும். அந்த நடைமுறைக்கு



பெண்கள் பல தடைகளை சந்திக்கின்றனர்.

பெண்கள் மிகவும் கடுமையான ஆடைக்கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும். தங்களுக்கு சம்மந்தமில்லாத ஆண்களோடு பழக கூடாது. பயணிக்க, வேலைபார்க்க, உடல் நலத்தை பரிசோதிக்க வேண்டும் என்றால், தங்களுக்கு சம்மந்தப்பட்ட ஒரு ஆணின் எழுத்துப்பூர்வமான அனுமதி கடிதம் தேவை.

சவுதியில், பெண்ணாக இருப்பதில் ஏராளமான கட்டுப்பாடுகள். ஆண்களின் பாதுகாப்பிலேயே முடிவு கட்டவேண்டும் என்று ஆயிரக்கணக்கான பெண்கள் கோரத்துவங்கியுள்ளனர்.

டுவிட்டர் மூலமும் இணையம் வாயிலாகவும் அவர்கள் தமது உரிமைகளுக்காக போராடிவருகிறார்கள். தனது எதிர்கால கனவை தொடர முடியாமல் தடுக்கப்பட்டதாக கூறுகிறார் தனது உண்மையான அடையாளத்தை வெளியிட விரும்பாத சாரா. “வெளிநாட்டில் சட்டம் படிக்க விரும்பினேன். ஆனால் அப்பா அனுமதிக்கவில்லை. அதற்காக இன்றுவரை வருந்துகிறேன்”.

பெண்களுக்கு ஆண்கள் பாதுகாவலர்களாக



அமெரிக்க வரலாற்றில் முதல் பெண் அதிபராக அவரது வெற்றிப் பயணத்தைத் தொடங்க அவருக்கு அந்த இடம் மிகவும் பொருத்தமானதாக இருந்திருக்கும்.

ஆனால், ஹிலாரியின் தோல்வி தற்போதைய போக்குடன் ஒத்துப்போகவில்லை. ஏனெனில், உலக அளவில் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பெண் தலைவர்களின் எண்ணிக்கை கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் இரண்டு மடங்கு ஆகியுள்ளது.

உலகின் 15 நாடுகளுக்கு தற்போது பெண்கள் தலைமை பொறுப்பு வகிக்கின்றனர். அவர்களில் எட்டுப் பேர் தங்கள் நாட்டின் முதல் பெண் தலைவர்கள் ஆவார்கள் என்று பியூ ரிசர்ச் சென்டர் என்னும் அமைப்பின் ஆய்வு கூறுகிறது. எனினும், ஐ.நா அவையில் உறுப்பினர்களாக உள்ள 193 நாடுகளில் 10% நாடுகளுக்குக் கூட பெண்கள் தலைமைப் பொறுப்பில் இல்லை. பெண் தலைவர்களுக்கு அதிக இலக்குகள் இருப்பதாக ஒரு ஆய்வு கூறுகிறது

பெண் தலைவர்கள் நிச்சயமாக தடைகளைத் தகர்க்கிறார்கள். ஆனால், தங்கள் நாட்டின் பெண்களையும் தங்கள் வெற்றிப் பயணத்தில் உடன் அழைத்துச் செல்கிறார்களா? இந்தியாவின் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீடு இதில் ஒரு பார்வையைத் தரும்.


1993—ஆம் ஆண்டு முதல் மூன்றில் ஒரு பங்கு


இருப்பதை மதத்தலைவர்கள் சிலர் ஆதரிக்கிறார்கள். மதத்தலைவர்கள் மட்டுமல்ல பெண்கள் சிலரும் கூட, ஆண் பாதுகாப்பு பெண்களுக்கு நல்லதே என்று நம்புகிறார்கள். “மரியாதையிழந்த மேற்குலக பெண்களைப் போல எங்களையும் மாற்ற இந்த பிரச்சாரம் முயல்கிறது” என்கிறார், ஆண்களின் பாதுகாப்பை ஆதரிக்கும் பெண்ணான ரத்வா அல் யூசுப்.

ஆண் அனுமதி அல்லது துணையின்றி சவுதி அரேபியாவில் பெண்கள் பல்கலைக்கழகத்தில் படிக்கவோ, வாகனம் ஓட்டவோ, வெளிநாடு செல்லவோ முடியாது. அதற்கெல்லாம் அங்கே தடை இருக்கிறது.

“கண்ணாடிக் கூரையின் மீது மிகப்பெரிய விரிசலை நாம் ஏற்படுத்தியுள்ளோம் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. இங்கு பெண்கள் யாராவது இருந்தால் தொடர்ந்து கவனித்துக்கொண்டே இருங்கள். நான் ஒரு வேளை அடுத்த பெண் அதிபர் ஆகலாம். அதற்கு அடுத்தது உங்களில் ஒருவர்தான்.” இந்த வாசகங்கள், ஜூலை 2016—இல் ஜனநாயக கட்சியின் அமெரிக்க அதிபர் பதவிக்கான வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டபின், ஹிலாரி கிளிண்டன் கூறியவை. ஆனால், இறுதியில் அந்தக் கண்ணாடிக் கூரையை நொறுக்க அவர் தவறிவிட்டார். தேர்தல் நடந்த தினதந்தன்று அவர் உரையாற்ற தேர்வு செய்த இடம் தற்செயலானது அல்ல.

நியூ யார்க் நகரிலேயே மிக பெரிய கண்ணாடிக் கூரையைக் கொண்ட கட்டடமாக ‘ஜேவிட்ஸ் சென்டர்’ கருதப்படுகிறது. ஒரு வேளை அந்தத் தேர்தலில் அவர் வெற்றி பெற்றிருந்தால்,






இந்திய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதியாக பெண்களே தேர்வு செய்யப்பட வேண்டும் என்று சட்டம் உள்ளது. இதன் மூலம் ஒரு இயல்பான சமூக பரிசோதனை நிகழ்த்தப்படுகிறது.

2012—இல் ஆயிரக்கணக்கான இந்திய வளர் இளம் பருவத்தினர் மற்றும் அவர்களின் பெற்றோரிடம் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், தங்கள் பகுதியில் பெண் தலைவரைக் கொண்டிருக்கும் கிராமப்புறப் பெண்களிடையே அதிகமான இலட்சியங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.


தங்கள் குழந்தையின் கல்வி எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு பெரும்பாலான பெற்றோர்கள், பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளுக்கென்றே உயர்ந்த கனவுகளைக் கொண்டிருந்தனர். ஆனால், தொடர்ந்து இரு முறைக்கும் மேலாக பெண் தலைவர்கள் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில், ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் எதிர்காலம் மீது பெற்றோர் கொண்டிருக்கும் ‘கனவுகளின் இடைவெளி,’ பெண்கள் தேர்வு செய்யப்படாத கிராமங்களைவிட 25% குறைவாக இருந்தது.

பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு செய்யப்பட்ட மற்றும் தேர்வு செய்யப்படாத கிராமங்களைச் சேர்ந்த வளர் இளம் பருவத்தினரிடையே இந்த இடைவெளி 32% ஆக இருந்தது. பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் ஆண் குழந்தைகளின் எதிர்பார்ப்புகள் குறையவில்லை. ஆனால், பெண் குழந்தைகளுக்கு தங்கள் எதிர்காலம் பற்றிய கனவுகள் அதிகரித்து இருந்தது.

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் நிலையை கொள்கை முடிவுகள் மூலம் மாற்றுவதில் பெண் தலைவர்களுக்கு குறைவான வாய்ப்புகளே இருந்தன என்று அந்த ஆய்வை நடத்தியவர்கள் கண்டறிந்தனர். ஆனால், ஒரு நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முன்மாதிரியாக, அவர்களை சுற்றியுள்ள பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் கனவுகள் மற்றும் கல்வியை வளர்க்க, அவர்களின் இருப்பே போதுமானதாக இருந்தது.

தலைமைப் பொறுப்புகளில் இருக்கும் சூழ்நிலைகளில் தொலை தூரத்தில் இருந்தாலும், முன் மாதிரியாக இருக்கும் பெண் தலைவர்களால் பெண்களின் அணுகுமுறையை ஊக்குவிக்க முடியும் என்று 2012—இல் சுவிட்சர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வின்போது மெய்நிகர் சூழலில் ஆண் மற்றும் பெண் மாணவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒரு குழு இருந்த அறையில் ஜெர்மன் அதிபர் ஏங்கலா மெர்கலின் படம் இருந்தது. இன்னொரு குழு இருந்த அறையின் சுவரில், அப்போது அமெரிக்க வெளியுறவு செயலராக இருந்த ஹிலாரி கிளிண்டனின் படம் இருந்தது. மற்ற இரண்டு குழுக்களில், ஒரு குழுவின் அறையில் பில் கிளிண்டனின் படம் இருந்தது. இன்னொரு குழுவின் அறையில் படம் ஏதும் இல்லை.







பெண் தலைவர்களின் படம் இருந்த அறையில் இருந்த குழுக்களில் இருந்த பெண்கள், ஆண் தலைவரின் படம் பார்த்த மற்றும் படம் எதுவும் பார்க்காத குழுக்களில் இருந்த பெண்களைவிடவும் தங்களை அதிகமாக சுயமதிப்பீடு செய்தனர். அதிகம் பேசினர்.

"பெண் அரசியல் தலைவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டும் சமத்துவத்துவத்தின் நோக்கம் மட்டுமல்ல, அதை இயக்கம் உந்து சக்தியாகவும் அந்த எண்ணிக்கை அதிகரிப்பு இருக்கும்," என்று அந்த ஆய்வாளர்கள் தங்கள் முடிவில் தெரிவித்துள்ளனர். பெண்கள் அரசியலின் தலைமை பொறுப்புகளில் இருப்பது மட்டுமே, அன்றாட வாழ்வில் சமத்துவத்தை அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என்னும் கருத்தை நிலை நாட்டுவதற்கான ஆதாரங்கள் உள்ளன.

வோர்ல்டு எக்கனாமிக் ஃபோரம் அமைப்பு உடல்நலம், ஆயுள், கல்வி மற்றும் அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்பு ஆகிய காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கும் சர்வதேச பாலின இடைவெளி அறிக்கையில் நாடுகளை மதிப்பிடுகிறது.


2016—இல் பாலின இடைவெளி குறைவாக இருந்த, ஐஸ்லாந்து, பின்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளில் பெண்கள் அரசியலில் இருப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமாக இருந்தன. பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் அதிகமாக இருக்கும் நாடுகளில் பெண்களின் முன்னேற்றமும் நல்ல நிலையில் இருப்பதை இது உணர்த்துகிறது.

அரசியலில் தலைமை பொறுப்புகளில் இருக்கும் பெண்களுக்கும் அவர்கள் நாட்டிலுள்ள பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதற்கும் தொடர்பு இருப்பதாக உறுதிபடக் கூற முடியவில்லை.


பெண் தலைவர்கள் இல்லாத நாடுகளிலில் கூட பாலின சமத்துவம் அதிகரித்துள்ளதும் இதற்கு ஒரு காரணமாகும். மிக சமீப காலத்திலேயே பெண்கள் அரசியல் பொறுப்புகளுக்கு தேர்வாகி இருப்பதும், தேர்வு செய்யப்பட்ட பெண்கள் குறைந்த காலமே பொறுப்பில் இருப்பதும் இன்னொரு காரணம் ஆகும்.

எது எப்படியோ, பொது வாழ்வில் பெண்கள் பெரும் வெற்றி அந்நாட்டில் உள்ள பெண்களின் கனவுகளைத் தூண்டும் வகையில் இருப்பதும், பெண் தலைவர்களைக் கொண்டுள்ள நாடுகள், அங்குள்ள பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதும் திண்ணம்!

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



*“விமர்சனங்களை அடக்காதீர்கள். விமர்சனங்கள் இருந்தாலே இந்தியா ஒளிரும்!”*

*— கமல்ஹாசன்*

*(உண்மைதான்! ஆனால் விமர்சனங்களாலே வாழ்க்கையை ஓட்டிவிடக் கூடாது!)*



*“என்னுடைய மொபைல் எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்க முடியாது. முடிந்தால் எனது தொலைப்பேசி இணைப்பை துண்டிக்கட்டும்”*

*—மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி*

*(வங்க புயல் சும்மா அதிருதில்ல!)*



*“மிஸ்டர் மோடி, திரைப்படம் என்பது தமிழ் கலாசாரம் மற்றும் மொழியின் பெருமையைப் பிரதிபலிப்பதாகும். தமிழர்களின் பெருமையை மதிப்பிழக்கச் செய்ய முயல வேண்டாம்!”*

*—ராகுல் காந்தி.*

*(பாருய்யா, பச்சை மண்ணு கூட பொங்கி எழுகுதுய்யா! இப்படி பண்ணிட்டியேயா!?)*



*“தனது அரசியல் பிரவேசம் குறித்த நோக்கத்திற்காக தவறான கருத்துகளை நடிகர் விஜய் பரப்புகிறார்!”*

*—தமிழிசை சவுந்தரராஜன்*


*( உங்களுக்கு பேசவும் தெரியாது! பேசறவங்களைக் கண்டாலும் பிடிக்காது! )*



# உழைப்பால்

## ஐரோப்பாவை வியக்கவைக்கும் ரொமேனியாவின் பொருளாதார வளர்ச்சி

கிழக்கு ஐரோப்பாவின் ஏழை நாடு என்று ஒரு காலத்தில் அனுதாபப்பட வைத்த ரொமேனியா இப்போது வேகமான பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது. கம்யூனிஸ்ட் நாடாக இருந்தபோது கல்விக்காகச் செலவிடப்பட்ட தொகையும் காட்டப்பட்ட அக்கறையும்தான் நாட்டின் வளர்ச்சிக்குத் தற்போது பெரிதும் கைகொடுக்கின்றன.




ரொமேனியா, ஐரோப்பாவின் தென் கிழக்கில் உள்ளது. தலைநகரம் புகாரெஸ்ட். மொத்த மக்கள் தொகை 2 கோடிக்கும் மேல். கருங்கடல், பல்கேரியா, உக்ரைன், ஹங்கேரி, செர்பியா, மால்டோவா ஆகியவை இந்நாட்டைச் சுற்றி உள்ளன. பரப்பளவு 2,38,397 சதுர கிலோ மீட்டர். ஜெர்மனியில் பிறக்கும் டான்யூபே நதி பல நாடுகள் வழியாக ஓடிவந்து இறுதியில் ரொமேனியாவில்தான் வடிகிறது. கார்பேத்தியன் மலைத்தொடர்கள் இந்நாட்டின் வடக்கிலிருந்து தென்கிழக்காகக் கடக்கின்றன.

நவீன ரொமேனியா 1859—ல் உருவானது. மால்டோவியா, வலாச்சியா பகுதிகள் இதில் இணைந்தன. ஆட்டோமான் பேரரசிலிருந்து 1877—ல் இது விடுதலை பெற்றது. முதல் உலகப் போருக்குப் பிறகு டிரான்சில்வேனியா, புகோவினா, பெசராபியா ஆகியவை ரொமேனியாவில் இணைந்தன. இரண்டாவது உலகப் போரின்போது முதலில் நாஜி ஜெர்மனியுடன் இணைந்திருந்த ரொமேனியா 1944—ல் நேச நாடுகளின் அணியில் சேர்ந்தது. சில காலம் சோவியத் படைகள் இதைத் தங்களுடைய ஆக்கிரமிப்பில் வைத்திருந்தன. போருக்குப் பிறகு சோஷலிசக் குடியரசானது. பிறகு வார்சா ஒப்பந்த நாடானது. 1989 மக்கள் புரட்சிக்குப் பிறகு ஜனநாயக நாடானது. அதிலிருந்து முதலாளித்துவமும் சந்தைப் பொருளாதாரமும்தான் கோலோச்சுகின்றன.

ரொமேனியாவில் தற்போது நாட்டின் வருமானத்தில் பெரும் பகுதி சேவைத் துறையிலிருந்துதான் கிடைக்கிறது. வேலைவாய்ப்பும் அப்படியே. இயந்திரங்கள் உற்பத்தி, ஏற்றுமதியில் நாடு சிறந்து விளங்குகிறது.



# உயர்வோம்

வ. ரங்காசாரி

துணிகள், அறைக்கலன்கள், கார்கள் இதர நுகர்பொருள்கள் என்று அனைத்தையும் வாங்கி நுகர்வதில் 8% வளர்ச்சி இந்த ஆண்டின் முதல் பாதியிலேயே ஏற்பட்டிருக்கிறது.

வாய்ப்புகளை அள்ளித் தந்த பன்மொழிப் பயிற்சி

இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.7% என்ற அளவில் வளர்ந்திருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு வேகமான வளர்ச்சி ஏற்படவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் சராசரி வளர்ச்சி அளவு 2.4%தான். 2015—ல் 3.9% ஆக இருந்த ஜிடிபி 2016—ல் 4.8% ஆனது. இதே காலத்தில் பிரிட்டனின் வளர்ச்சி 1.8%, 2.2% ஆக இருந்தது. 2017—ம் ஆண்டு முழுக்க ரொமேனியாவின் சராசரி வளர்ச்சி 5.5% ஆக இருக்கும் என்று பன்னாட்டுச் செலாவணி நிதியம் (ஐஎம்எஃப்) கணக்கிட்டுள்ளது.



தொழில்நுட்பத் துறையில் ஆழமாகவும் விரிவாகவும் வளர்ச்சி ஏற்பட்டுவருகிறது. கம்யூனிஸ நாடாக இருந்தபோது அறிவியல், கணிதம், தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் ரொமானியர்களுக்குப் பல்வேறு மொழிகளைக் கற்பதில் ஆர்வமும் திறமையும் அதிகம். இதனால் தகவல் தொழில்நுட்பத் துறை உருவாகி வளர்ந்தபோது இந்நாட்டு மக்கள் அதில் ஏராளமான வேலைவாய்ப்புகளை அயல்பணி ஒப்படைப்பாகவே பெற்றனர்.

ரொமானிய மொழிக்கு லத்தீன் அடிப்படை. எனவே இவர்களால் பிற மொழிகளை எளிதில் கற்க முடிந்திருக்கிறது. தொழில்நுட்பத் துறையில் 1,50,000 பேர் பணிபுரிகின்றனர். ஜிடிபிக்கு அது அளித்து வரும் பங்களிப்பு 2025—ல் இரட்டிப்பாகிவிடும் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகிறது. சிங்கப்பூர், ஹாங்காங், தென் கொரியா, ஐஸ்லாந்துக்குப் பிறகு அதிவேக பிராட்பேண்ட் இணையதள சேவைக் கட்டமைப்பு ரொமேனியாவில்தான் இருக்கிறது.

நாடு தேடிவரும் வேலைவாய்ப்பு

அமெரிக்க மோட்டார் கார் நிறுவனம் ஃபோர்டு, ஃபிட்பிட் நிறுவனம், ஸ்மார்ட் வாட்ச், சீமென்ஸ், பாஷ் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் இந் நாட்டில் புதிய ஆலைகளையும்



விற்பனையகங்களையும் திறந்துள்ளன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதனால் நேரடி வேலைவாய்ப்புகளைப் பெற்றுவருகின்றனர். ரொமேனியர்கள் வேலைதேடிப் பிற நாடுகளுக்குச் செல்வதுதான் வழக்கம். இப்போது அவர்களில் பலர் உள் நாட்டிலேயே நல்ல ஊதியம் கிடைப்பதால் நாடு திரும்பவும் தொடங்கியுள்ளனர்.

ரொமேனிய அரசு நுகர்வை ஊக்குவிக்க வரி விகிதத்தை 2015—ல் குறைத்தது. மதிப்புக்கூட்டப்பட்ட வரியும் 24%—லிருந்து 20%, 19% என்று படிப்படியாகக் குறைக்கப்பட்டது. இது நுகர்வை அதிகப்படுத்தப் பெரிதும் உதவியிருக்கிறது. தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. குறைந்தபட்ச ஊதியம் மட்டுமல்ல அரசுத்துறை நிறுவனங்களிலும் ஊதியம் உயர்த்தப்பட்டது. அப்படியிருந்தும் ஐரோப்பிய நாடுகளிலேயே ரொமேனியாவில்தான் ஊதியம் மிகக் குறைவு. 2016—ல் வேலைவாய்ப்பு அற்றவர்களின் எண்ணிக்கை 8.6%—லிருந்து 5.9% ஆகக் குறைந்தது.

பிரெக்ஸிட் ஆதரவு வாக்களிப்புக்குப் பிறகு ஐரோப்பியச் சந்தையில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டது. பிரிட்டனில் உள்ள பல பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்சாலைகளை ரொமானியாவில் நிறுவ பேச்சுகளைத் தொடங்கிவிட்டன.

ரொமேனியாவில் பிரச்சினைகளும் இல்லாமல் இல்லை. ஊழல் மிகுந்த நாடு என்ற அவப் பெயர் இப்போதும் நீடிக்கிறது. அரசாங்கத்தில் கீழ் நிலையில் இருப்பவர்கள் லஞ்சம் வாங்கினால் அதைக் குற்றச்செயலாகக் கருதக் கூடாது என்றொரு சட்டம் இயற்றப்பட்டது! மக்கள் கடுமையாக அதை எதிர்த்தனர். அரசு அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றது. ஆனாலும் அரசு மக்களுடைய நம்பிக்கையை முழுதாகப் பெறவில்லை. போக்குவரத்துத்துறையில் அடித்தளக் கட்டமைப்புகள் மிக மோசமாகவே இருக்கின்றன. மொத்தம் 747 கிலோ மீட்டர் நீளத்துக்கு மட்டுமே மோட்டார் வாகனங்களுக்கான சாலை இருக்கிறது. ரயில்வே துறை அதைவிடப் பரவாயில்லை என்றாலும் பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கியிருக்கிறது.

அரசின் நிதி பற்றாக்குறையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அரசின் செலவுக்கும் வரவுக்கும் இடையிலான பற்றாக்குறை — ஜிடிபியுடன் ஒப்பிடுகையில் 2015—ல் 0.8% ஆக இருந்தது 2016—ல் 3% ஆக உயர்ந்துவிட்டது. இதனால் பொருளாதார வளர்ச்சி வீதத்தை 5% ஆகப் பராமரிக்க முடியாது, 4% ஆகக் குறையும் என்றும் கணிக்கப்படுகிறது. எனினும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி எப்படி அடிப்படைக் காரணமாகவும் உந்துசக்தியாகவும் இருக்க முடியும் என்பதற்கு நவீன ரொமேனியாவின் பொருளாதார நிலை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

# தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

# indian express foods

## இட்லி / தோசை மா

## இலண்டனில் மட்டுமே கிடைக்கும்



indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

# தமிழே

## கோயில்கள் தமிழ்நாட்டின் கலைக் கருவூலங்கள்

அக்டோபர் மாதத்தில் அடுத்தடுத்து வெளியான மூன்று செய்திகள் தமிழ்நாட்டு மக்களை அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியிருக்கின்றன.

'அக்டோபர் 3—ஆம் தேதி இராமேசுவரம், இராமநாதசுவாமி கோயிலில் அம்மனுக்கு அணிவிக்கப்படும் வைரத்தாலி, வைரப் புல்லாக்கு,



வைர மூக்குத்தி, வைர கழுத்தணி, வைர நெத்திச்சுட்டி, தங்கத் தாழம்பூ, மரகதத் திலகம், நீலக்கல் திலகம், வைர மார்புக்கவசம் உள்பட விலை மதிக்க முடியாத ஏராளமான வைரம், வைடூரிய நகைகளைக் காணவில்லை.

மேலும், மூலஸ்தானத்தில் இருந்த 22 கிலோ தங்கத்தாலான மணி, விலை மதிக்க முடியாத வலம்புரி சங்கு ஆகியவையும் காணவில்லை. 1972—ஆம் ஆண்டு கோயில் சொத்துப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த நகைகள் 1995—ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட பட்டியலில் இடம்பெறவில்லை' என பக்தர் ஒருவர் அளித்த முறையீடு குறித்து விசாரித்த உயர்நீதிமன்றம் இது குறித்துப் பதில் அளிக்குமாறு அறநிலையத்துறைக்கு ஆணைப் பிறப்பித்துள்ளது.

இரண்டு நாள்கள் கழித்து அக்டோபர் 6—ஆம் தேதியன்று புதுக்கோட்டை மாவட்டம், விராலி மலை அருகே அரசு பஸ்சுடன் நேருக்கு நேராக கார் ஒன்று மோதியது. இந்தக் காரிலிருந்த நான்கு பேர் பலத்த காயத்துடன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

இந்தக் காரை காவல்துறையினர் சோதனையிட்டபோது 8 கிலோ எடையுள்ள மரகத லிங்கம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். இந்த லிங்கம் எந்தக் கோயிலைச் சேர்ந்தது என்பதைக் குறித்து காரில் வந்தவர்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்ற அதிர்ச்சி தரும் செய்தி வெளியானது.

அதே நாளில் சிலை கடத்தல் வழக்கில்




பழ. நெடுமாறன்

காவல்துறையில் துணைக் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த காதர் பாட்சா என்பவர் பறிமுதல் செய்த சிலையை அரசிடம் ஒப்படைக்காமல் விற்பனை செய்ததாகக் கைது செய்யப்பட்ட செய்தி வெளியானது. தமிழ்நாட்டில் பெரிதும் சிறிதுமான 31,423 கோயில்களும் மற்றும் மடங்கள், மடங்களைச் சேர்ந்த கோயில்கள் மற்றும் அறநிலையங்கள் என சுமார் 2,000 உள்ளன.

இந்தக் கோயில்களை மன்னர்களும்,




மன்னர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், சிற்றரசர்களும், பெரும் செல்வந்தர்களும் கட்டி எழுப்பியதோடு அக்கோயில்களுக்குரிய சிலைகள், நகைகள், ஆபரணங்கள் ஆகியவற்றையும் அளித்துள்ளார்கள்.

மேலும், இக்கோயில்களில் வழிபாடுகள் முறையாக நடைபெற நில மானியங்களையும் அளித்துள்ளார்கள். கோயிலில் வழிபாடு நடத்துபவர்களுக்கும், தேவாரங்கள், பாசுரங்கள் ஆகியவற்றைப் பாடுபவர்களுக்கும் நில மானியங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

கோயில் வாகனங்கள், நகைகள், ஆபரணங்கள் ஆகியவற்றில் பழுது ஏற்பட்டால் அவற்றை பராமரிக்கும் சிற்பிகளுக்கும் நில மானியங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

ஏறத்தாழ ஐந்து இலட்சம் ஏக்கர் நிலங்கள் இவ்வாறு அளிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான நகைகளும், ஆபரணங்களும், ஐம்பொன் சிலைகளும் மன்னர்களாலும் மற்றவர்களாலும் அப்போது அளிக்கப்பட்டுள்ளன.

மன்னர்கள் தாங்கள் கட்டிய கோயில்களை நிருவகிப்பதற்கு தக்கவர்களை நியமித்ததோடு வழிபாடு, திருவிழாக்கள் முதலியவை எவ்விதத் தங்கு தடையுமின்றி நடைபெறவும், கோயில் சொத்துகளைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உரிய



கொண்டுவரப்பட்டாலும் 1981—ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படிதான் தற்போது கோயில்கள் நிருவகிக்கப்படுகின்றன. இவ்வளவு திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் ஆலய நிருவாகம் செம்மையாக இல்லை.

ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களும் கட்டடங்களும் இதர சொத்துகளும், அரசியல் ரீதியாக வேண்டியவர்களுக்கு மிகக் குறைந்த குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடப்படுகின்றன. கோயில் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் குறைந்துகொண்டே போகிறது. நிலங்கள் யார் யார் பெயருக்கோ மாற்றப்படுகின்றன.

இராசராசசோழன் காலத்தில் அவன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலுக்கு 18 ஆயிரம் வேலி நிலத்தை இறையிலியாக அளித்தான் என அக்கோயிலின் கல்வெட்டு கூறுகிறது. ஆனால், இப்போது ஒரு வேலி நிலம்கூட அக்கோயிலுக்குச் சொந்தமாக இல்லை.

கோயில் உண்டியல்கள் உடைக்கப்படுவதும், காசுகள் திருடப்படுவதும், விலை மதிப்பற்ற சிலைகளும், நகைகளும், ஆபரணங்களும் மிக எளிதாக கொள்ளையடிக்கப்படுவதும் தொடர்கின்றன.

அன்னியர்களான ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில்கூட கோயில் சொத்துகள் பாதுகாப்பாக இருந்தன என்பதற்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.

விக்டோரியா பேரரசியின் ஆட்சி காலத்தில் வேல்ஸ் இளவரசர் மதுரைக் கோயிலைப் பார்ப்பதற்கு வந்தார். கோயிலில் உள்ள நகைகளையும் ஆபரணங்களையும் குறிப்பாக நீலநாயகப் பதக்கம் என்று சொல்லப்படும் அபூர்வமான ஒரு நகையைப் பார்த்து அவர் வியந்துபோனார். இதுபோன்ற அழகிய நகை தனது மன்னர் குடும்பத்தில்கூட இல்லை என பாராட்டினார்.

தனது தாயான விக்டோரியா பேரரசியிடம் இதைக்காட்டி விட்டு, பத்திரமாகத் திருப்பி அனுப்பிவைப்பதாக அவர் வேண்டிக்கொண்டபோது அதை ஏற்பதற்குக் கோயில் அர்ச்சகர்களும் அதிகாரிகளும் மறுத்துவிட்டனர். கேட்டவர் பிரிட்டிசு பேரரசின் இளவரசர்.

எதிர்காலத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னராக முடிசூட்டிக்கொண்டவர். அவர் நினைத்திருந்தால் அந்தப் பதக்கத்தை எடுத்துச்

ஏற்பாடுகளையும் அவர்கள் செய்திருந்தார்கள்.

மன்னர்கள் ஆட்சி மறைந்து, ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆட்சி ஏற்பட்டதோடு மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடி பொறுப்பில் கோயில் நிருவாகம் கொண்டுவரப்பட்டது. இந்துக் கோயில்களை ஆங்கிலேயர்கள் நிருவகிக்கக் கூடாது என்ற கிளர்ச்சி எழுந்தது.

இதன் விளைவாக 1863—ஆம் ஆண்டில் ஆங்கிலேய அரசு ஒரு சட்டம் இயற்றி, அறநிலையங்களின் சொத்துப் பராமரிப்பு பணியை அதிகார சார்பற்றவர்களைக் கொண்ட குழுக்களிடம் ஒப்படைத்தது. இச்சட்டத்தில் இருந்த பல குறைகளை அகற்றும் முயற்சியில் பல சட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இயற்றப்பட்டன.

1925—ஆம் ஆண்டில் சென்னை மாநகரத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அறநிலையங்கள் பாதுகாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1925—ஆம் ஆண்டு சட்டத்திற்குப் பின் 1954—ஆம் ஆண்டு வரை 10 சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

இவற்றைத் தொடர்ந்து பல சட்டங்கள்

சென்றிருக்க முடியும். யாராலும் தடுத்திருக்க முடியாது. ஆனாலும் அவர் அப்பதக்கத்தைப் புகைப்படம் மட்டும் எடுத்துக்கொண்டு சென்றார்.

1981—ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து சட்டப்பேரவையிலும் வெளியிலும் கீழ்க்கண்டவற்றை வலியுறுத்தினேன்.

'கோயில்களில் உள்ள நகைகள், ஆபரணங்கள் ஆகியவற்றின் தற்போதைய மதிப்பு என்ன? அவற்றின் பழமை மதிப்பு என்ன? என்பதைத் தக்க நிபுணர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு பதிவேடுகளில் பதியப்பட வேண்டும்.

அத்துடன் அவைகள் அனைத்தும் பல கோணங்களில் வண்ணப்படங்களாக எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட கோயில்களில் ஒரு பிரதியும், அறநிலைய ஆணையாளரிடம் ஒரு பிரதியும் அளிக்கப்பட வேண்டும்.

பல கோயில்களில் நகைகளும், சிலைகளும், ஆபரணங்களும் களவு போனபோது அவற்றின் மதிப்பீடுகள் சரியான முறையில் பதிவு செய்யப்படாத காரணத்தினால் திருடுபோன பொருட்களை திரும்பப் பெறுவதில் பல இடையூறுகள் ஏற்பட்டன.

1980—ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக் கோயில்களில் உள்ள ஐம்பொன் சிலைகளைப் பாதுகாப்புத் துறையின் துணையுடன் அடையாளப் பதிவு செய்யும்படி இந்திய அரசு ஆணையிட்டது. ஆனால், அவ்வாறு செய்ய தமிழக அரசு முன்வரவில்லை. இதன் விளைவாக ஆயிரக்கணக்கான சிலைகள் தமிழ்நாட்டுக் கோயில்களில் களவுபோயுள்ளன.

இந்து அறநிலையச் சட்டத்தின் 33—ஆவது பிரிவு 3—இன் படி கோயில்களுக்குச் சொந்தமான பணமோ, நகைகளோ, சிலைகளோ திருடப்பட்டிருந்தால் தொடர்பான அறங்காவலர்களிடமிருந்து அவற்றைத் தண்டும் அதிகாரம் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை எந்த அறங்காவலரின் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.



கோயில்கள் உள்பட இந்து அறநிலையங்கள் நிருவகிக்கப்படும் முறை குறித்து ஆராய்வதற்காக 1960—ஆம் ஆண்டு இந்திய அரசு சி.பி. இராமசாமி ஐயர் தலைமையில் ஆணையம் ஒன்றை அமைத்தது.

திருச்செந்தூர் கோயில் தணிக்கை அதிகாரி படுகொலை செய்யப்பட்டபோது தமிழக அரசினால் அமைக்கப்பட்ட நீதியரசர் பால் ஆணையம், கோயில் நகைகள் ஆபரணங்கள் சிலைகள் ஆகியவற்றின் பாதுகாப்பு குறித்து ஆராய அமைக்கப்பட்ட நீதியரசர் கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆணையம் ஆகிய ஆணையங்கள் கோயில் சொத்துகளைப் பாதுகாப்பது குறித்து மிக விரிவாகவும் தெளிவாகவும் பல பரிந்துரைகளை அளித்துள்ளன. ஆனால், இவற்றில் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.

தமிழ்நாட்டுக் கோயில்கள் வழிபடும் தலங்கள் மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கேயுரிய விலை மதிப்பற்ற கலைக் கருவூலங்களாகும். அவற்றைப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கு உள்ளது




# காந்தியின் விழியில்

## மத அடிப்படைவாதக் காலத்தில் காந்தி

அப்போது விடுதலைத் திருநாளாகக் கொண்டாடப்பட்ட 1946—ம் ஆண்டு ஜனவரி 26 அன்று காங்கிரஸ் சார்பாக காந்தி ஓர் உறுதிமொழியை முன்மொழிந்தார். காந்தியுடன் நெருக்கமாக இருந்த தீவிர நாத்திகரான கோரா எனும் கோபராஜு ராமச்சந்திர ராவ் அதிலுள்ள கடவுளைப் பற்றிய குறிப்பை அகற்ற வேண்டும் என்று கோரினார். கோரா விரும்பினால் ஏதோ ஒரு சக்தி என்று அதை மாற்றிகொள்ளலாம் என்று காந்தி செய்தி அனுப்புகிறார். கோரா தனது நூலில் இது குறித்து எழுதுகிறார்: “உறுதிமொழியை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக—கடவுள் எனும் நிலையிலிருந்து ஏதோ ஒரு சக்தி, அதைக் கடவுள் என்றும் அழைக்கலாம் இல்லையென்றும் சொல்லலாம் எனும் புள்ளியை நோக்கி அவர் நகர்ந்துள்ளார். என்னைப் பொறுத்தவரை —கடவுள் கோட்பாடு அவருக்கு முக்கியமில்லை, மாறாக எத்தனை தூரம் கடவுள் நம்பிக்கையோ நாத்திகமோ பொதுநலனில் பங்காற்றுகிறது என்பதே அவருக்கு முக்கியமாகும்.” (காந்தியுடன் ஒரு நாத்திகன் — கோரா)

அமெரிக்க மெய்யியலாளர் க்வாமி அந்தோணி அப்பையா சென்ற ஆண்டு ‘பிழையான அடையாளங்கள்’ எனும் தலைப்பில் ஆற்றிய ரெய்த் உரைத்தொடரில் முதல் உரையின் பேசுபொருள் மதம். மதம் நம்பிக்கைகளின் பாற்பட்டது என்பதே நமது பொதுப்புரிதல். அப்பையா இந்தப் புரிதலைக் கேள்விக்குட்படுத்துகிறார். “ஒவ்வொரு மதத்திலும் மூன்று பரிமாணங்கள் உள்ளன. நாம் செய்வது, அதாவது சடங்கு—செயல்கள்—நடைமுறை போன்றவை; அடுத்து, யாருடன் செய்கிறோம் — சமூகம் அல்லது குழு, மூன்றாவதாக நம்பிக்கைகள். இம்முன்றிலும் நமக்கு மிக முக்கியமான சிக்கல் என்பது செயல்பாடுகளுக்கும் குழுவுக்கும் அளிக்காத முக்கியத்துவத்தை அதீதமாக நம்பிக்கைக்கு நாமளிப்பதே” என்கிறார் அப்பையா. மதம் அளிக்கும் ஆன்மிக அனுபவத்துக்கு நாம் இணைந்து நிகழ்த்தும் சடங்குகள் முக்கியமான காரணம் என்கிறார்.





நம்பிக்கைகள் அன்றாட வாழ்வை



# மதங்கள்


**சுனில் கிருஷ்ணன்**


வழிநடத்துகின்றன என்பது நமது பொதுப் பார்வை. அப்பையாவோ நமது நடத்தை மாற்றமும் நம்பிக்கைகளின்மீது தாக்கம் செலுத்துகின்றன என்கிறார். விளைவாக "மறைநூல்களின் வரிகளுக்கு நவீன விளக்கங்கள் உதிக்கின்றன. ஒருவேளை அவை காலத்துக்கேற்பத் தகவமைத்துக்கொள்ளவில்லையெனில் வழக்கொழிந்துபோகின்றன… மறைநூல்கள் காலந்தோறும் புதிய முறையில் விளக்கமும் மறு விளக்கமும் அளிக்கப்படவில்லையென்றால் இத்தனை நூற்றாண்டுகளாக அவற்றால் மக்களை வழிநடத்தியிருக்க இயலாது. அவற்றின் திறந்த தன்மை என்பது இடையில் தொற்றிக்கொண்ட ஒரு கோளாறு அல்ல, மாறாக அதன் முக்கியமான அம்சம்" என்கிறார் அப்பையா.




### மறைவிளக்கத்தைவிட பகுத்தறிவேஞ்

காந்தி தீண்டாமையை எதிர்கொண்ட விதத்தை எடுத்துகொண்டால், முதலில் அதற்கு மத நூல்களில் சான்று இருக்கிறதா என்று கேட்கிறார். சனாதனிகளின் எதிர்ப்பைச் சந்திக்கிறார். காந்தி ஒரு எல்லையில் மத நூல்களில் சொல்லப்பட்டவை அனைத்தையும் அப்படியே ஏற்றுகொள்ள வேண்டியதில்லை என்கிறார். அவற்றைத் தனது அனுபவ வட்டத்துக்குள் கொண்டுவந்து , பகுத்தறிவைப் பிரயோகித்து உள்வாங்கிக்கொள்வதாகவே அவருடைய வழிமுறை எப்போதும் இருந்தது. பழமையானது என்பதற்காகத் தவறான எதையும் கடைப்பிடிக்க கூடாது என்பதில் அவர் திட்டவட்டமாக இருந்தார். "கீதை உட்பட எந்த ஒரு திருமறையையும்விட உயர்வானதாக எனது மதிப்பீட்டைப் பயன்படுத்துகிறேன். எனது பகுத்தறிவைவிட எந்தவொரு மறை விளக்கமும் மேலோங்கியிருக்க நான் அனுமதிக்க மாட்டேன்" என்று டிசம்பர் 1936—ல் எழுதினார் காந்தி. கடந்த நூற்றாண்டின் வெவ்வேறு சீர்திருத்தவாதிகளைப் போல் காந்தியும் தன் பங்குக்கு மறுவரையறை செய்ய முயன்றிருக்கிறார்.





போருக்குச் சுணங்கும் அர்ஜுனனை ஊக்குவிக்கும் பகவத் கீதையைச் செயலின்மைக்கும் செயலுக்குமான முரணாக, தனது அகிம்சைக் கோட்பாட்டுக்கான அடித்தளமாக அவரால் மாற்ற முடிந்தது. பிறப்பின் அடிப்படையில் நால் வருணப் பகுப்பை வலியுறுத்தும் இதே மதத்தில்தான் வசுதைவ குடும்பகம் (உலகமே ஓர் குடும்பம்) எனும் அறைகூவலும் இருக்கிறது. ஆகவே, நாம் எதைத் தேர்வு செய்கிறோம் என்பதே முக்கியமாகிறது. இஸ்லாமிய தேசமாக அறிவித்துக்கொண்ட பாகிஸ்தானிலும் வங்கதேசத்திலும் பெண் பிரதமர்கள் உண்டு. தாராளவாத மக்களாட்சி அளிக்கும் தேசமாகத் தன்னைப் பறைசாற்றிக்கொள்ளும் அமெரிக்காவில் இதுவரை ஒரு பெண் அதிபர்கூட இல்லை எனும் முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறார் அப்பையா.


### நவீன உலகுக்கான எதிர்வினை

“புனித மறைநூல்களை மையமாகக் கருதுபவர்களில் முக்கியமான தரப்பினர் அடிப்படைவாதிகள், அவர்கள் பரந்துபட்ட மத மரபுகளை அவர்களுக்கு உகந்த ஒற்றைப்படைத்தன்மையை நோக்கி அனைவரையும் வலுக்கட்டாயமாக இழுத்து வருகிறார்கள். கிறித்தவம், பவுத்தம், இந்து, யூதம், இஸ்லாம் என எந்த மதமாக இருந்தாலும் ‘ஓர் உண்மைப் பாதையை’ பாதுகாப்பதிலும் பிரச்சாரம் செய்வதிலும் முழு வீச்சாக முனைகிறார்கள்.

இதுவே முதன்முதலாகத் தோன்றிய பாதை, தூய பாதை என கற்பனை செய்துகொள்கிறார்கள். மதங்களுக்கு அப்பால், அடிப்படைவாதிகளின் மற்றொரு பொதுக் குணம் என்பது அவர்கள் பழமையைக் கொண்டாடினாலும், அவர்கள் மிக சமீபத்தில், நவீன உலகுக்கு எதிர்வினையாக உருவாகிவந்தவர்கள். அடிப்படைவாதத்தின் முக்கியமான முரண்பாடு என்னவென்றால், வெவ்வேறு விளக்கங்களையும் சாத்தியங்களையும் ஒரு பக்கம் மறுதலித்தாலும் அந்த சாத்தியத்தைக் கொண்டே அதுவும் காலூன்ற இயலும்” என்கிறார் அப்பையா.

அடிப்படைவாதம் என்பது நவீன உலகுக்கு எதிர்வினையாக உருவானது எனும் அப்பையாவின் பார்வை மிக முக்கியமான ஒன்று. காலனியம், ஏகாதிபத்தியம், தொழில்மயமாதல் ஆகியவற்றுடன் சேர்த்தே அடிப்படைவாதத்தின், தூய்மைவாதத்தின் எழுச்சியையும் புரிந்துகொள்ள வேண்டும். அடிப்படைவாதங்களுக்கு எதிரான வலுவான தரப்பு அந்தந்த மதங்களின் உள்ளிருந்தே எழ வேண்டியது காலத்தின் கட்டாயம். ‘இதுவல்ல எங்கள் மதம்’ என உரக்க சொல்ல வேண்டும். அடிப்படைவாதத்துக்கு உகந்த வகையில் புனித மறை நூல்களைப் பொருள் கொள்ளச் செய்ய முடியும் எனில் அதற்கு மாற்றாக மானுட நேயத்துக்குச் சார்பாகவும் சர்வ நிச்சயமாகப் புனித நூல்களை விளக்கிக்கொள்ள முடியும். “மரபு, நாம் புதிய திசை நோக்கிச் செல்லும் வகையிலான விளக்கங்களை ஒருபோதும் முற்றிலும் மறுக்காது” என்கிறார் அப்பையா. அப்பையா மதத்தையோ பிற அடையாளங்களையோ நிராகரிக்கவில்லை. அவற்றை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்கிறார்.




## மதத்துக்கான மறுவரையறை

காந்தியும் அப்பையாவும் வெவ்வேறு நூற்றாண்டுகளில் புழங்குபவர்கள். ஆனால், இருவருமே அடையாளங்கள் நம்மைச் சிறைப்படுத்துபவை அல்ல என்பதில் தெளிவாக இருந்தார்கள். “நம்மிடம் எப்போதும் வாய்ப்புகள் உள்ளன, நமது அடையாளங்கள் நம் தலைவிதி அல்ல, அவற்றைக் கொண்டு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்... நமது புரிதலுக்கு ஏற்ப நமது அடையாளங்களின் ஆபத்தான அம்சங்களிலிருந்து சுதந்திரமாக விலகிச் செல்ல முடியும்” என்கிறார் அப்பையா. “நடைமுறைச் சிக்கல்களைக் கணக்கில் கொள்ளாத, அவற்றுக்குத் தீர்வளிக்காத மதம் என்பது மதமே அல்ல” என்கிறார் காந்தி. இறுதி வரை தனது மதத்தை ஆக்கபூர்வமாக மறுவரையறை செய்ய முயன்றார் காந்தி.

இந்து மதம் என்பதே ‘அகிம்சை வழியில் சத்தியத்துக்கான தேடல்’ என்றார். அனைத்து மதங்களும் சாரத்தில் ஒன்றே என நம்பினார். மத அடிப்படைவாதத்துக்கு எதிரான வலுவான குரல் வெளியிலிருந்து அல்ல சக மனிதர்களின்மீது அன்பும் நம்பிக்கையும் கொண்ட சாமனியரிடமிருந்தே வர முடியும். அவர்களே அடிப்படைவாதத்துக்கு எதிரான மிகப் பெரும் விசை என்பதை காந்தி நம் முன் நிறுவிவிட்டுச் சென்றிருக்கிறார்.

அடையாளங்களைத் துறக்காமலும், வலிந்து சுய இழிவைச் சூடிகொள்ளாமலும், தன்னிலிருந்து பிரித்து ‘பிறர்’ என்ற ஒரு தரப்பை உருவகிக்காமலும் வாழ முடியுமா எனும் சவாலுக்கு நம் முன் காந்தியே நிகரற்ற விடையாக நிற்கிறார்.



# எங்கே

## திராவிட இயக்கம் சாதித்தது என்ன?

பிராமணர் அல்லாதார் இயக்கமான திராவிட இயக்கம் தோன்றியதற்கு முக்கியக் காரணம், காங்கிரஸில் ஆதிக்கம் செலுத்திய பிராமண வழக்கறிஞர்கள்தான். அவர்கள் ஆதிக்கம் எங்கும் நிறைந்திருந்தது என்பதைத் தனது 'விடுதலைப் போரில் தமிழகம்' என்னும் நூலில் பதிவுசெய்திருக்கிறார் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்திவந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

### பிராமணர் அல்லாதோர் நிலை

அந்தக் காலகட்டத்தில் உத்தியோகத் துறையில் எங்கும் பிராமணர் ஆதிக்கம்; பிராமணர் அல்லாதாருக்கு முட்டுக்கட்டை என்ற நிலை இருந்தது. எடுத்துக்காட்டாக 1912—ல் சென்னை மாகாணத்தின் நிலை என்ன? துணை ஆட்சியர்களில் 55%, சார்பு நீதிபதி 82.5%, மாவட்ட முன்சீப்களில் 72.6% பிராமணர்கள். இந்தப் பதவிகளில் இந்து பிராமணர் அல்லாதார் முறையே 21.5%, 16.7%, 19.5%. கடப்பை மாவட்டத்தில் வருவாய்த் துறையில் உயர் பதவி வகித்த டி.கிருஷ்ணாராவ் (ஹுஸுர் செரஸ்தார் — மாவட்ட ஆட்சியர் பதவிக்கு நிகரானது) என்பவரின் உறவினர்கள் 116 பேர் அந்தத் துறையில் இருந்தனர். சென்னை சட்ட மன்றத்தில் 1914—ல் சட்ட மன்ற உறுப்பினர் குன்சிராமன் நாயர் எழுப்பிய வினாவுக்குக் கொடுக்கப்பட்ட பதில் என்ன? சென்னைப் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட 650 பட்டதாரிகளில் பிராமணர்கள் 452 பேர், பிராமணர் அல்லாத இந்துக்கள் 12 பேர், பிற இனத்தவர் 74 பேர்!

கல்வி, வேலைவாய்ப்பு நிலைதான் இப்படி என்றால் சமுதாய நிலை என்ன? உணவு விடுதிகளைப் பெரும்பாலும் பிராமணர்களே நடத்திவந்தனர். பிராமணர் அல்லாதார் உள்ளே சென்று உட்கார்ந்து சாப்பிட முடியாது. எடுப்புச்


Dravidian Movement History and milestones

1916
Birth of the Justice Party to take forward the **'Non-Brahmin Movement'** and the **'Non-Brahmin Manifesto'**. Soon Justice Party comes to power in the Legislative Council of the erstwhile Madras Presidency

1925
The blossoming of the **'Self-Respect Movement'** under the leadership of Periyar, to further social reforms and fight caste

1944
Birth of the **'Dravidar Kazhagam (DK)'** in Salem under Periyar's leadership when the Justice Party was renamed as DK

1949
**The Dravida Munnetra Kazhagam (DMK)** was launched, breaking away from the DK, under the leadership of C.N. Annadurai along with his key loyalists including V.R. Nedunchezhiyan, M. Karunanidhi, E.V.K. Sampath (left), K.A. Mathiazhagan, and others

1967
DMK comes to power in the old Madras State (later renamed as Tamil Nadu), defeating the Congress in the Assembly elections that year and C. N. Annadurai forms the first DMK Ministry

1969
After Annadurai's death, M. Karunanidhi takes over as Chief Minister of the State and later also elected DMK President. He holds the latter post to this day

1972
Second major split in the DMK. The charismatic actor and leader M.G. Ramachandran launches the Anna Dravida Munnetra Kazhagam (ADMK) after being expelled from the DMK. The ADMK was later called 'All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK)'

1993
Third major split in the DMK. Vaiko, after being expelled from the DMK starts the 'Marumalarchi Dravida Munnetra Kazhagam (MDMK)

KEY PHASES IN ALLIANCE POLITICS

1 The first phase in which Dravidian parties like the DMK grew on a strong anti-Congressism, having seat adjustments with an assortment of parties including 'Swatantra', Indian Union Muslim League, CPI(M) etc., until it captured power in 1967

2 Second phase from the early 1970s' when the DMK and AIADMK aligned with the Congress. The Dravidian parties were junior partners of the Congress in the Lok Sabha elections in return for taking two-third seats of the Assembly seats

3 Third phase when the Dravidian parties began taking a major part of the Lok Sabha seats since 1998, aligning with Congress or BJP, in the coalition era. The DMK and AIADMK hiked their stakes at the Centre, as tradeoffs for ensuring political stability in Delhi

4 The fourth phase is exemplified in the 2014 polls, when the two major regional parties, DMK and AIADMK are wanting the entire spoils for themselves by having no truck with any national party

# திராவிடம்

கலி.பூங்குன்றன்



சாப்பாடுதான் வாங்கிச் சென்று வெளியே சாப்பிட வேண்டும். சென்னையில் அன்றைய மவுன்ட் ரோடிலும், ஜார்ஜ் டவுனிலும் இருந்த உணவு விடுதிகளில், ‘பஞ்சமர்களும், நாய்களும், குஷ்டரோகிகளும் உள்ளே நுழையக் கூடாது’ என்று விளம்பரப் பலகைகளை வைத்திருந்தனர். ரயில்வே உணவு விடுதிகளில் பிராமணாள், இதராள் என்று விளம்பரப் பலகை வைக்கப்பட்டு இருந்தது. இது மட்டுமல்ல. இருப்புப் பாதைகள் போடப்பட்டு, ரயில் பயணம் தொடங்கிய காலத்தில், நான்கு வகைப் பெட்டிகள் இருந்தன. அவற்றை நான்கு வருணத்தாரும் தனித்தனியாகப் பயன்படுத்தும்படியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என இந்து மத வேதியக் கூட்டம் ரயில்வே நிர்வாகத்தைக் கேட்கும் அளவுக்குப் பேதங்கள் மோசமாக இருந்தன.

## இயக்கத்தின் தொடக்கம்

இப்படிப்பட்ட சூழலில்தான் 1912—ல் டாக்டர் சி.நடேசனாரின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டது ‘மெட்ராஸ் யுனைடெட் லீக்’. அதுவே 1913 முதல் பிராமணர் அல்லாதாரைக் குறிக்க ‘திராவிடர் சங்கம்’ என்று புதுப் பெயர் பெற்றது.

1916—ல் டி.எம்.நாயர், தியாகராயர் உள்ளிட்டோர் முன்னின்று தொடங்கிய தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், நீதிக் கட்சியாக அழைக்கப்பெற்றது. நீதிக் கட்சி திராவிடர் கழகம் ஆனது. திராவிடர் கழகத்திலிருந்து திமுகவும் அதிலிருந்து அதிமுகவும் உருவாயின. ஒட்டுமொத்தமாக இவற்றை ‘திராவிடர் இயக்கம்’ என்று ஒரு பொதுச் சொல்லால் குறிப்பதாகக் கொண்டால், இழிவுகள் பலவற்றிலிருந்து இந்தத் திராவிடர் இயக்கமே நம் மக்களை மீட்டெடுத்தது.

திராவிடர் என்ற பெயர் மாற்றமே திராவிட இயக்கத்தின் சாதனை என்று சொல்லலாம். ஏனென்றால், 1901—ல் எடுக்கப்பட்ட சென்னை மாகாணத்து மக்கள்தொகைக் கணக்கில் 'பிராமணர்கள் 3.4%, சூத்திரர்கள் 94.3%' என்று பிராமணர் அல்லாதாரை அரசாங்கமே சூத்திரர்கள் என்று குறிப்பிடும் இழிநிலைதான் அன்று இருந்தது. இந்த நிலையில்தான் பெரியார், 'சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டடி!' என்ற பெருமுழக்கத்தை வீதிகளில் எல்லாம் ஒலிக்கச் செய்தார். பின்னதாக, நீதிக் கட்சி ஆதரவு பெற்ற டாக்டர் சுப்பராயன் அமைச்சரவை 'சூத்திரன்' என்ற இழி பட்டத்தைப் பதிவேடுகளிலிருந்து ஒழித்தது.

ஆட்சியில் பங்கேற்று நேரடி மாற்றங்களைக் கொண்டுவந்தது மட்டும் அல்லாமல், எல்லாத் தளங்களிலும் மாற்றுகளை உருவாக்க முற்பட்டது திராவிட இயக்கம். டாக்டர் சி.நடேசன், பிராமணர் அல்லாத மாணவர்கள் தங்கிப் படிக்க சென்னையில் 1916—ல் உருவாக்கிய திராவிட சங்க விடுதியை (Dravidian Association Hostel) ஓர் உதாரணமாகச் சொல்லலாம். மாணவர் விடுதிகளில்கூடப் பாகுபாடுகள் நிறைந்திருந்த காலத்தில் மாற்றாகத் தொடங்கப்பட்ட மாணவர் விடுதி இது. பிற்காலத்தில் இந்திய நிதியமைச்சராக ஆகவிருந்த ஆர்.கே.சண்முகம், பாரிஸ்டர் ரங்கராமானுஜம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர்களாக விளங்கிய டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை, எஸ்.ஜி.மணவாள ராமானுஜம் மற்றும் சடகோப முதலியார், பிற்காலத்தில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக வந்த சுப்பிரமணிய நாடார் போன்றவர்களெல்லாம் இந்த விடுதியில் தங்கிப் படித்தவர்கள்தான்!

## திராவிட இயக்கம் கொண்டுவந்த மாற்றங்கள்

திராவிட இயக்கம் கொண்டுவந்த மாற்றங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. சுதந்திரத்துக்கு முன்பு சென்னை மாகாணத்தில் 1920—1937 காலகட்டத்தில் ஆட்சியிலிருந்து நீதிக் கட்சி ஆட்சி கொண்டுவந்த மாற்றங்கள். 2. ஆட்சியிலிருந்து இறங்கிய நீதிக் கட்சியின் தலைவராக 1938—ல் பெரியார் பொறுப்பேற்று, பிறகு 1944—ல் திராவிடர் கழகமாக அதை உருமாற்றிய பின்னர், தேர்தல் அரசியலிலிருந்து விலகி, பொதுத் தளத்திலிருந்து அது மேற்கொண்டுவரும் மாற்றங்கள். 3. 1967 முதலாகத் தமிழகத்தில் ஆட்சியில் இருந்துவரும் திமுக, அதிமுக இரு திராவிடக் கட்சிகள் தங்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த மாற்றங்கள்.

இவற்றில் தேர்தல் அரசியலில் பங்கேற்காமல், பொதுத் தளத்தில் நின்று அரசியல் கட்சிகளுக்கான சமூக நீதி அழுத்தங்களையும் கொடுத்துவரும் திராவிடர் கழகம் வெளியிலிருந்து உண்டாக்கிவரும் மாற்றங்கள் என்றால், இரு திராவிடக் கட்சிகளின் ஐம்பதாண்டு ஆட்சிக் காலம் மட்டுமின்றி காமராஜரின் ஆட்சிக் காலகட்டத்தையும்கூடச் சேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். பிராமணியத்துக்குத் துணை போகும் காங்கிரஸை ஒழிப்பதே என் கடமை என்று கூறி காங்கிரஸிலிருந்து வெளியேறி வந்த பெரியார், காமராஜரின் ஆட்சிக்காக அதே காங்கிரஸைத் தன் தோளில் தூக்கிச் சுமந்தார் என்பதும் பெரியார் முன்மொழிந்த பல திட்டங்களையும் யோசனைகளையும் நிறைவேற்றியவர் காமராஜர் என்பதும் வரலாறு. ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தைத் தந்தை பெரியார் தலைமை தாங்கி தடுத்து நிறுத்தியது முக்கியமான ஒன்று. எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சமூக நீதி, தமிழ், தமிழர் நலன் என்பதே எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு திராவிடர் கழகத்தின் உயிர்மூச்சாக இருந்திருக்கிறது. அதேபோல, பொதுத் தளத்தில் அது உருவாக்கிய கருத்துருவாக்கம், கட்சிக்கு அப்பாற்பட்டு ஆட்சியாளர்களைச் செயல்பட வைத்திருக்கிறது. ஆகையால், திராவிடர் கழகம் பொதுத் தளத்தில் செய்த காரியங்களை இந்தச் சின்ன கட்டுரைக்குள் கொண்டுவருவது சாத்தியமற்றது என்பதால், முன்னதாக நீதிக் கட்சி வடிவிலும் பின்னதாக திராவிடக் கட்சிகளுக்குப் பின்னின்றும் செய்த மிக முக்கியமான மாற்றங்களை மட்டும் இங்கே தருகிறேன்.

## நீதிக் கட்சி கொண்டுவந்த முக்கியமான 10 அரசாணைகள், சட்டங்கள்

.நாட்டிலேயே முன்னோடியாகப் பெண்களுக்கு வாக்குரிமை (10.05.1921).

.பஞ்சமர் என்ற சொல் நீக்கி ஆதிதிராவிடர் என்றழைக்கும் அரசாணை (25.3.1922).

.கல்லூரிகளில் எல்லாத் தரப்பு மாணவர்களையும் சேர்க்க குழுக்கள் அமைக்கும் அரசாணை (20.5.1922). கல்வி மறுக்கப்பட்ட பிராமணரல்லாத குழந்தைகளைத் தொடக்கப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கை (21.6.1923). புதிய பல்கலைக்கழகம் காண சட்டம் இயற்றப்பட்டது. பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக இது காரணமாயிற்று.

.தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் கல்வி நிலையங்களில் மிகுதியாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கை (24.9.1924).

.குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்டிவிட்டு, தேவரடியார் என்று முத்திரை குத்தும் முறைக்கு முடிவுகட்டும்

சட்டம் (1.1.1925).

.கோயில்களில் கொள்ளையை முடிவுக்குக் கொண்டுவர இந்து சமய அறநிலையச் சட்டம் (27.01.1925).

.சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் பிராமணரல்லாத மாணவர்களைச் சேர்ப்பதற்கான உத்தரவு (15.9.1928).

.எஸ்.முத்தையா முதலியாரின் முயற்சியால் முதல் இடஒதுக்கீட்டுச் சட்டம் (13.9.1928). வகுப்புவாரி ஒதுக்கீட்டுக்கான அரசாணை (27.2.1929).



## சமூக மாற்றத்துக்கு அடித்தளமிட்ட கல்வி, சமூக நலத் திட்டங்கள்

கல்லூரி முதல்வர்கள் எல்லாம் பிராமணர்களாகவே இருந்த நிலையில், பிராமணர் அல்லாத மாணவர் சேர்க்கைக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டிருந்த காலகட்டம் அது; பனகல் அரசர் என்ன செய்தார்? ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர் சேர்க்கைக்குக் குழுக்கள் அமைக்க உத்தரவிட்டார். மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு சம்ஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் எனும் நடைமுறையை நீக்கினார். ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்த மருத்துவத் துறையை இந்தியமயமாக்கிய பெருமையும் நீதிக் கட்சி முதலமைச்சர் பனகல் அரசரையே சேரும்.

சென்னை மாநிலக் கல்லூரி சம்ஸ்கிருதப் பேராசிரியர் குப்புசாமி சாஸ்திரிக்கு மாதச் சம்பளம் ரூ.300, தமிழ்ப் பேராசிரியர் கா.நமசிவாயனாருக்கு மாதச் சம்பளம் ரூ.81 என்றிருந்தது. இந்த பேதம் நீக்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதம் படிப்பதற்குத்தான் வழி இருந்ததே தவிர, தமிழ் படிக்கக் கதவு அடைக்கப்பட்டது. நீதிக் கட்சிப் பிரமுகர்கள் ஆர்.வெங்கடரத்தினம் நாயுடு, டி.என்.சிவஞானம் பிள்ளை, எஸ்.முத்தையா முதலியார், டாக்டர் ஏ.இலட்சுமணசாமி முதலியார் போன்ற தலைவர்கள் போராடிப் போராடிதான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி கற்பிக்கப்படுவதற்கு வழிவகுத்தனர்.

பிட்டி. தியாகராயர் சென்னை மாநகர மேயராக இருந்தபோதுதான், 1921—ல் பள்ளிகளில் இலவச நண்பகல் உணவு அளித்தார். இதற்காக சென்னை மாநகராட்சிப் பணம் செலவழிப்பதை நகராட்சி சட்டத்தைத் திருத்தி மாகாண அரசே ஏற்றுக்கொண்டது. இதன் காரணமாகப் பள்ளிகளுக்கு வரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இன்னும் ஒரு குறிப்பிடத் தகுந்த தகவல் உண்டு. இலவச இரவுப் பள்ளிகள் நடத்த முன்வந்தால், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிலைப்பாடுதான் அது. பகல் பொழுதில் பணியாற்றச் செல்வோர் இரவில் படிக்கும் ஒரு வாய்ப்புக்குத் கதவைத் திறந்துவிட்டவர் நீதிக் கட்சித் தலைவர் பிட்டி. தியாகராயர்தான்.

தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு அரசினர் கல்லூரி சம்ஸ்கிருதக் கல்வி நிலையமாக இருந்ததை மாற்றி, தமிழும் சொல்லிக்கொடுக்கப்பட ஆவன செய்தார் நீதிக் கட்சித் தலைவர் ஏ.டி.பன்னீர்செல்வம். பிராமண மாணவர்கள் மட்டும் பயன் கண்ட ராஜா மடம், ஒரத்தநாடு விடுதிகள் மற்றவருக்கும் திறந்துவிடப்பட்டன. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 10—ம் வகுப்புத் தேர்வுக்குப் பணம் கட்டத் தேவையில்லை என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதேபோல, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் அரைச் சம்பளம் கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டது. அரசுப் பள்ளிகளில் வகுப்புரிமையை நிலைநாட்ட ஆண்டுதோறும் அறிக்கைகள் வெளியிடப்பட உத்தரவிடப்பட்டது.

பேருந்துகளில் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்காவிட்டால் பேருந்துகளின் உரிமம் ரத்துசெய்யப்படும் என்று ஆணையிட்டு, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஊரிலிருந்து பள்ளிகளை நோக்கிச் செல்ல வழிவகுத்தவர் நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன். தாழ்த்தப்பட்டவர்களைச் சேர்க்காத பள்ளிகளுக்கு மானியம் நிறுத்தப்படும் என்று ஆணையிட்டவர் முன்னோடிகளில்



ஒருவரான சிவகங்கை எஸ்.இராமச்சந்திரன்.

தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றம் கருதித் தனி அலுவலர்கள் நியமனம். தனி அலுவலர் என்பது 'லேபர் கமிஷனர்' என்று மாற்றம். இம்மக்களுக்கு 7 லட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் வழங்கப்பட்டன. தாழ்த்தப்பட்ட வகுப்பாரில் என்னென்ன சாதிகள் உள்ளன என்பதைத் தொகுக்கும் பணி தொடங்கப்பட்டது. குறவர்கள் சீர்திருத்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக 2,776 கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. வலையர், குறவர் ஆகியோரைக் குற்றப் பரம்பரையிலிருந்து மீட்க அவர்களின் குழந்தைகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. துப்புரவு வகுப்பினர், தோடர்கள், கோடர்கள், படகர்கள் ஆகியோருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. மீனவர் நலன் காப்பதற்காக 'லேபர் கமிஷன்' நியமிக்கப்பட்டது. இதேபோல கள்ளர் சமுதாய முன்னேற்றத்துக்காகவும் 'லேபர் கமிஷன்' நியமிக்கப்பட்டது.

## திராவிடக் கட்சிகள் முன்னெடுத்த பெரும் மாற்றத்துக்கான நகர்வுகள்

திமுகவின் முதல் முதல்வரான அண்ணா மிக விரைவில் காலமாகிவிட்டதால், இரண்டாண்டுக்கும் குறைவாகவே ஆட்சியில் இருந்தார். எனினும், திராவிடக் கட்சிகள் செல்ல வேண்டிய திசையைச் சுட்டும் வகையில், நான்கு முக்கியமான முடிவுகளை அவர் முன்னெடுத்தார். 1. சடங்குகள், தாலி மறுத்து நடைபெறும் சுயமரியாதைத் திருமணங்களுக்கும் சட்ட அங்கீகாரம் அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம். 2. சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம். 3. தமிழ்நாட்டில் இந்திக்கு இடமில்லை; தமிழ், ஆங்கிலம் மட்டுமே பயிற்றுமொழி என்ற இருமொழிக் கொள்கை முடிவு. 4. அரசு அலுவலகங்களில் எந்த மதம் தொடர்பான கடவுள் படங்களும் உருவங்களும் இருக்கக் கூடாது என்ற ஆணை.

கருணாநிதி பொறுப்பேற்றார். கல்வி, வேலைவாய்ப்பில் அதுவரை 31% ஆக இருந்த இடஒதுக்கீடு 49% ஆக உயர்த்தப்பட்டது. அடுத்தடுத்து வந்த எம்ஜிஆர், ஜெயலலிதாவின் ஆட்சிகளும் சமூக நீதிப் பாதையிலேயே சென்றதன் விளைவாக இன்று நாட்டிலேயே முன்னோடியாக 69% இடஒதுக்கீடு தமிழ்நாட்டில் இருக்கிறது. அதற்கு அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பும் இருக்கிறது.

கிராம அலுவலர்கள் பதவிகள் பெரும்பாலும் பிராமணர்கள் கையில் இருந்ததை மாற்றி, அரசு அலுவலர்களாக மாநிலத் தேர்வு ஆணையத்தின் மூலம் தேர்வுசெய்யும் நடவடிக்கையைக் கொண்டுவந்தார் எம்ஜிஆர். தெருக்களில் சாதிப் பெயர்களை நீக்க உத்தரவிட்டார். சாதி ஒழிப்புப் பயணத்தில் முக்கிய மைல் கல்லாக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் எனும் சட்டத்தைக் கொண்டுவந்தார் கருணாநிதி. சுடுகாட்டில் — இடுகாட்டில் பணியாற்றியோரை, 'வெட்டியான்' என்று சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களை அரசுப் பணிச் சட்டகத்துக்குள் கொண்டுவந்தார். எல்லாச் சமூகத்தினரும் இணைந்து வாழும் சமத்துவபுரங்களைக் கொண்டுவந்தார். தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்குப் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டம் வரை கட்டணம் ரத்துசெய்யப்பட்டது.

நீதிக் கட்சித் தலைவர் பிட்டி. தியாகராயர் சென்னை மாநகர மேயராக இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட மதிய உணவுத் திட்டம் — காமராஜர் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டு, எம்ஜிஆர் காலத்தில் மேம்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டமானது. மதிய உணவோடு வாரம் முழுவதும் முட்டைகள் அளிக்கும் திட்டத்தைக் கருணாநிதி கொண்டுவந்தார். தமிழகத்தில் கல்விச் சூழலை வெகுவாக மேம்படுத்திய புரட்சித் திட்டம் இது.

மத்திய அரசிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கி, மாநிலங்களின் அதிகாரத்தை உயர்த்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தப் பரிந்துரைத்தது பி.வி. ராஜமன்னார் குழு.




நாட்டிலேயே இப்படி ஒரு குழுவை ஒரு மாநில அரசு அமைத்தது இதுவே முதல் முறை. மாநிலங்களுக்குத் தனிக் கொடி வேண்டும் என்று கருணாநிதி தொடங்கிய போராட்டமே, பிற்பாடு சுதந்திர நாளன்று தலைமைச் செயலகத்தில் தேசியக் கொடியேற்றும் உரிமையை மாநில முதல்வர்களுக்கு வாங்கித் தந்தது. மத்திய அரசு — மாநில அரசுப் பணியாளர்களுக்கு இடையேயான ஊதிய வேறுபாட்டையும் நீக்கினார்.

நில உச்ச வரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையறைக்குக் கொண்டுவந்தார் கருணாநிதி. பெரும் நிலச் சீர்திருத்த நடவடிக்கை இது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்பட்டது. விவசாயிகளின் உற்பத்தி விளைபொருட்கள் விற்பனைக்கு உழவர் சந்தைகள் திறக்கப்பட்டன. விவசாயிகளின் நலன் பேண ஒரே நேரத்தில் 40,433 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ. 7,000 கோடி கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடிசெய்யப்பட்டது. விவசாயத் தொழில் நலவாரியம் உட்பட 34 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. இந்தியாவிலேயே ஒரு புரட்சியாக, குடிசைகளிலும் நடைபாதைகளிலும் வாழ்ந்த மக்களுக்குக் குடிசை மாற்று வாரியம் கொண்டுவந்து குடியிருப்புகள் கட்டப்பட்டன. கைரிக்சாக்களை ஒழித்தார் கருணாநிதி.

## பெண்கள் உயர்வுக்கும் மறுமலர்ச்சிக்கும் அடுக்கடுக்கான திட்டங்கள்

ஈ.வெ.ரா.நாகம்மையார் நினைவு ஏழை மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம். ஈ.வெ.ரா.மணியம்மையார் விதவைத் தாய்மார்களின் மகள் திருமண நிதி உதவித் திட்டம். அன்னை தெரசா ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் சாதி மறுப்புத் திருமணம் செய்துகொள்ளும் ஆதரவற்ற பெண்களுக்குத் தங்கம் வழங்கும் திட்டம். இப்படி ஒரு பெண்ணின் படிப்பில் தொடங்கி திருமணம், மகப்பேறு வரை துணை நின்றது அரசு. அரசுப் பணிகளில் பெண்கள் பங்கேற்பை அதிகரிக்கும் வகையில் 30% இடஒதுக்கீட்டை அவர்களுக்குக் கொண்டுவந்தார் கருணாநிதி. அதேபோல, அரசியலில் பெண்கள் பங்கேற்பை அதிகரிக்கவும் உள்ளாட்சியில் 33% இடஒதுக்கீட்டைக் கொண்டுவந்தார் கருணாநிதி. பின்னாளில் இதை 50% ஆக உயர்த்தினார் ஜெயலலிதா. ‘அரவானிகள்’ என்று அதுவரை குறிப்பிடப்பட்டவர்கள் மூன்றாவது பாலினத்தவராக அறிவிக்கப்பட்டதோடு ‘திருநங்கைகள்’ என்று அழைக்கப்பட்டு, அவர்கள் நலனுக்காகத் தனி வாரியம் உருவாக்கப்பட்டது.

தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டவர்களுக்குப் பணி நியமனங்களில் 20% அளிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழுக்குச் செம்மொழி அங்கீகாரம் பெறப்பட்டது. செம்மொழித் தமிழ் ஆய்வுக்காக சென்னையில் மத்திய நிறுவனம் கொண்டுவரப்பட்டது. தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று சட்டம் பிறப்பித்தார் கருணாநிதி.

இவை எல்லாவற்றைக் காட்டிலும் பெரும் சாதனை ஒன்றுண்டு. இந்த மண்ணின் உணர்வில் அழியா சக்தியாக திராவிடர் எனும் உணர்வை விதைத்தது. மண்ணுள்ள வரை விதைக்கப்பட்ட விதைகள் துளிர்த்துக்கொண்டே இருக்கும். பெருமரங்கள் விழுது பரப்பிப் புது மரங்கள் காடாகப் பெருகிக்கொண்டே இருக்கும்!

கலி.பூங்குன்றன் துணைத் தலைவர், திராவிடர் கழகம்




## உலக அதிசயம் காப்போம்!

உலகம் முழுவதும் உள்ள சுற்றுலாப் பட்டியலில் இடம் பெற்றுள்ள, ஆண்டுதோறும் 20 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்ற தாஜ்மஹாலின் பெயர் உத்தரப் பிரதேச மாநில சுற்றுலா கையேட்டில் இடம் பெறவில்லை என்பது, நாடு முழுவதுமுள்ள மக்களை மட்டுமல்ல, உலக அளவில் உள்ள இந்தியர்களை, சுற்றுலா பயணிகளை, அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. இதற்கு, பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தும் வருகின்றனர்.




உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் 1983—லேயே யுனெஸ்கோவால் கலாசார பிரிவின் கீழ் பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்ட பகுதி. போர்க்காலங்களில் கூட பாதுகாக்கப்படும் பகுதி. ஐ.நா.வின் கண்காணிப்பில் உள்ள பகுதி. பல்வேறு பாரம்பரியங்களை உடைய ஓர் உலக அதிசயத்தை முடக்குவது வேதனையளிக்கிறது.

உலக வங்கியின் பரிந்துரைப்படி மாநில சுற்றுலா துறையை மேம்படுத்த 370 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை உத்தரப் பிரதேச அரசு தயாரித்துள்ளது. மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட இந்தத் திட்டங்களில், தாஜ்மஹால் மற்றும் அதன் சுற்றுப்புற மேம்பாட்டுக்கு மட்டும், 156 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்ததும் மூன்று மாதங்களில் திட்டப் பணிகள் தொடங்கும் என மாநில அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா கையேட்டில் இல்லாத இடத்திற்கு சுற்றுலாத்துறைக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 40 சதவீதம் ஒதுக்கியிருப்பது வியப்பாக உள்ளது.

இந்துக் கட்டடக்கலைக்கோர் தஞ்சை பெரிய கோவில், இஸ்லாமிய கட்டடக்கலைக்கோர் தாஜ்மஹால், பௌத்த கட்டடக்கலைக்கோர் புத்த கயா, சமணக் கட்டடக்கலைக்கோர் ஸ்ரவணபெலகோலா என சமயம் கடந்த கலாசாரப் பதிவுகளைப் பிரதிபலிக்கும் வானுயர்ந்த கட்டடங்களைக் கொண்டு விளங்குகிறது நம் பாரதம்.

எண்ணூறு ஆண்டுகள் இந்தியாவை ஆண்ட



# விளிம்பில்

## மத வெறி

**விமலா அண்ணாதுரை**

மொகலாயர்கள் இந்தியாவுக்கு பல்வேறு பெருமைகள் சேர்த்தனர். அதில் குறிப்பிடத்தக்கது கட்டடக்கலை. மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹான் கட்டிய தாஜ்மஹால், இந்திய கட்டடக்கலையின் உச்சம்.

உலக அதிசயங்களை மாற்றி வரையறுத்தபோது இந்தியாவின் பெருமை மிகு தாஜ்மஹால் முதலிடத்தைப் பிடித்து இந்தியர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி


யுள்ளது.


காண்போர் கண்களை பிரமிப்பில் ஆழ்த்தும் அதன் கம்பீரமான அழகு, கல்நெஞ்சத்திலும் காதலின் எல்லையை உணர்த்தும் காவியச் சின்னம். உலக நாடுகளின் அதிபர்கள், ஆட்சியாளர்கள் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் வரும் போது தாஜ்மஹாலின் அழகை கண்டு வியந்து போகிறார்கள்.



சுவாமி விவேகானந்தர் தாஜ்மகாலைப் பார்த்தபோது கூறிய கருத்து: “இங்குள்ள சலவைக் கல்துண்டு ஒன்றைப் பிழிய முடியுமானால் அதிலிருந்துகூட அந்த அரசனின் காதலும் சோகமும் சொட்டும். இதன் உள்ளே உள்ள அழகு வேலைப்பாட்டைக் கற்க வேண்டுமானால், ஒவ்வொரு சதுர அங்குலத்திற்கும் ஆறுமாதமாவது தேவைப்படும்‘.

அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளிண்டன் இந்தியாவிற்கு வந்தபோது தாஜ்மஹாலைப் பார்த்து அதிசயித்து கூறிய சொற்கள் இவை. “உலக மக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் தாஜ்மஹாலை பார்த்து ரசித்தவர்கள்.இன்னொரு வகையினர் தாஜ்மஹாலைப் பார்க்காதவர்கள்’.




தாஜ்மஹாலை பார்க்கிறபோது ஒவ்வொரு சமயமும் ஒரு அழகு தோன்றும். அதை சமயமாக்க வேண்டாம் என்பதே பலரின் கருத்து. இது சமய சின்னம் என்ற எண்ணம் மாற வேண்டும்.

மனைவியை கல்யாணத்துக்கு பிறகும் காதலித்த காதலன் ஷாஜஹான். அதற்கு சாட்சியே தலைநிமிர்ந்து நிற்கும் ஏழாவது அதிசயம் யாருக்கும் எட்டாத அதிசயம் இந்தியாவின் இந்த தாஜ்மஹால்..! நிலவொளியின் பொழிவில் அழகு தேவதையாக எழுந்து நிற்கும் அந்த வெண் பளிங்கு மாளிகை ஏன் எழுந்தது எப்படிஎழுந்தது? சற்று சரித்திரத்தின் பின்னே சென்று பார்ப்போம்...

மும்தாஜ் இறந்து சரியாக ஒரு வருடம் கழித்து, வெனிஸ் நகரத்து வெரோனியா, துருக்கி நாட்டு உஸ்தாக் இசா அபாண்டி ஆகிய தலைசிறந்த கட்டடடடக் கலைஞர்களை ஷாஜஹான் அழைத்து வந்தார். இவர்களோடு லாகூரைச் சேர்ந்த அகமத் என்பவரும் சேர்ந்து ஷாஜகானின் கனவை முதலில் காகிதத்தில் வடித்தார்கள்.

அடுத்த கட்டமாக கட்டடக் கலைஞர்கள், சிற்பிகள் என இருபதாயிரம் பேர் வேலைக்கு தேர்வு செய்யப்பட்டு பணிகளைத் தொடங்கினார். ஷாஜஹான் திட்டமிட்ட இருபதாண்டுகள் உழைப்பு! உலகமே வியக்கும் தாஜ்மஹால் என்னும் கலைப் பூ .

1633—ஆம் ஆண்டு தொடங்கி 1653 வரை சுமார் 1,000 யானைகள், 40,000 பணியாளர்கள் உழைப்பில் உருவான தாஜ்மஹாலின் வெளிப்புறக் கதவுகள் மற்றும் சுவர்களில் பதிக்க இந்தியாவைத் தவிர ரஷியா, திபெத், பாரசீகம் என பல இடங்களில் இருந்தும் வைரம், வைடூரியம், முத்து, பவளம் என விதம் விதமாக வரவழைத்து அழகு பார்த்தார் ஷாஜஹான்.

புனித குரானிலிருந்து குறிப்பிட்ட வாசகங்களை தேர்ந்தெடுத்து அவற்றை கல்லறையைச் சுற்றிலும் உள்ள சுவர்களில் பொறிப்பது என்று முடிவு செய்தார். இதற்காக உலகிலேயே மிகத் திறமையான பாரசீக கலைஞர் “அமானாத்கான்’ பெயர் சிபாரிசுச் செய்யப்பட்டது. “நான் எந்த வேலைச் செய்தாலும் அதில் என் கையெழுத்தைப் போடுவேன்’ என்று உறுதியாகக் கூறிய அவருக்கு அனுமதிக் கொடுத்தார் ஷாஜஹான். இன்றைக்கும் தாஜ்மஹாலில் அந்தச் சிற்பியின் கையெழுத்தைக் காணலாம்.

இப்படி அங்குலம் அங்குலமாக பொன் நகையை உருவாக்குவதுபோல் தாஜ்மஹாலைக் கட்டினார் ஷாஜஹான். தாஜ்மஹால் கட்டி முடிக்கப்பட்டு கொஞ்சம் காலம் அதனை முஸ்லிம்கள் மட்டுமே பார்க்க அனுமதிக்கப்பட்டனர்.

பிற்பாடு உலகெங்கிலும் இருந்து பலர் வர அந்தத் தடை தானாகவே நீங்கிப் போனது. இத்தகைய அழகான தாஜ்மஹால் அதன்பிறகு வந்த ஆங்கிலேயர்களின் கண்களை பறிக்காமல் இருக்குமா?


பல ஆங்கில அதிகாரிகள் சுவர்களில் பதிக்கப்பட்ட வைர, வைடூரியங்களை சுரண்டி எடுத்துக் கொண்டு போனார்கள். லார்டு வில்லியம் பெண்டிங் என்பவர் இடித்து விடலாம் என்று கூறினார். இன்னும் பல ஆங்கிலேய அதிகாரிகள் தாஜ்மஹாலை ஒவ்வொரு கல்லாக

பெயர்தெடுத்து, கப்பலில் ஏற்றிக் கொண்டு போய், இங்கிலாந்தில் இறக்கி மீண்டும் கட்டி விடலாம் என்று ஆலோசனை வழங்கினார்.

இன்றைக்கும் இப்படியோர் அற்புதக் கட்டடம் இந்தியாவில் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அப்போது வைஸ்ராயாக இருந்த கர்சன் பிரபு. கலைஞர்களின்பால் மிகுந்த ஆர்வமும், ஆசையும் கொண்டிருந்த அவர், தாஜ்மஹாலை நல்ல

தொல்பொருள் ஆய்வுத்துறை ஆகியவற்றுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

இதைத் தொடர்ந்து "தாஜ்மஹால் பகுதியில் கோவில் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை' என்று மத்திய கலாசார அமைச்சகம் 2015—ஆம் ஆண்டு மே மாதமே நாடாளுமன்ற மக்களவையில் தெரிவித்து இருந்தது.



முறையில் பராமரிக்க ஒரு சட்டமே இயற்றினார்.

அதோடு மட்டுமல்ல, தாஜ்மஹாலில் மும்தாஜ் — ஷாஜஹான் கல்லறைகளுக்கு மத்தியில் மேலே ஒரு அழகான பித்தளை விளக்கு தொங்கிக் கொண்டிருக்கும். இதனைக் கெய்ரோவிலிருந்து வாங்கி, இங்கு தொங்கவிட்டவரே கர்சன் பிரபுதான்.

ஆங்கிலேயர்கள் பாதுகாத்த ஆசியாவின் அழகு கலைப் பொக்கிஷத்திற்கு எதிரான சர்ச்சைகள் என்பது புதிதல்ல. 2015—இல் ஒரு சர்ச்சை உண்டானது. ஆக்ரா மாவட்ட நீதிமன்றத்தில், வழக்குரைஞர்கள் தாக்கல் செய்த மனுவில், ஆக்ராவில், "தேஜோ மஹாலய' என்ற சிவன் கோவில் இருந்தது.

இந்த கோவிலைத்தான், மொகலாய மன்னர் ஷாஜகான், கல்லறையாக மாற்றி, தாஜ் மஹால் கட்டினார். அங்கு, சிவன் கோவில் இருந்ததற்கான ஆதாரங்கள், அடையாளங்கள் இப்போதும் உள்ளன' என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம், இது தொடர்பாக விளக்கம் கேட்டு, மத்திய அரசு, மத்திய கலாசாரத்துறை அமைச்சகம்,

இந்தியா பல்வேறு சமய நம்பிக்கைகள் கொண்ட மக்கள் வாழும் நாடு. இந்திய மக்கள் பிற சமய மக்களின் நம்பிக்கைகளை மதித்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒற்றுமையுடன் வாழ, இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கிறது.

இனம், மதம், மொழி, நாடு கடந்து நேசிக்கப்படும், நம் இந்தியாவின் அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படும் உலக அதிசயத்தை குறுகிய வட்டத்திற்குள் அடைக்காமல் பரந்துபட்ட நமது கலாசார அடையாளமாய் கருத வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமையாய், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறையாய் வாழ்வதே பாரதத்தின் சிறப்பு.

"பிற சமயங்களைப் பற்றி அறிந்து கொண்டால் மட்டும் போதாது. பிற சமயங்களைச் சேர்ந்தவர்களின் சாதனைகளில் நம்மால் பங்கேற்க இயல வேண்டும். அப்போதுதான் சமயங்களிடையே நல்லிணக்கம் உருவாகும்' என்ற காந்தியின் சொற்கள் இங்கு நினைவுகூரத்தக்கது.




# காலனை வென்ற காவியம்

## 'திரையுலகம்' தரும் நினைவுலகம்'!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் புகழ்பாடுவதற்கு இன்று எத்தனையோ இதழ்கள் வெளிவருகின்றன. எம்.ஜி.ஆர் ரசிகர்களும் அபிமானிகளும் அவற்றுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறார்கள்.

புரட்சித்தலைவர் வாழ்ந்த காலத்தில் புகழ் பாடும் இதழாக பீடுநடையிட்டது 'திரையுலகம்' இதழ். நடிகர் திலகத்துக்கு 'மதியொளி' இதழும், மக்கள் திலகத்துக்கு 'திரையுலகம்' இதழும் போட்டிப்போட்டுக் கொண்டு விற்பனையாகிய அந்த கறுப்பு வெள்ளைக் காலகட்டம்தான் தமிழ் திரையுலகின் பொற்காலம்!

போட்டிகளும் தடாலடிகளும் அந்தந்த இதழ்களில் பக்கத்துக்கு பக்கம் பளிச்சிடும்! ஆனால் அதிலும் ஒரு கண்ணியம் காணப்படும். அந்தக்கால ரசிகப் பத்திரிகையான 'திரையுலகம்' பத்திரிகையின் ஆசிரியரான ஜி.கே.துரைராஜ் அவர்கள் ஏற்படுத்திய சாதனைகள் ஏராளம். எம்.ஜி.ஆருடன் அவர் கொண்டிருந்த மிக நெருங்கிய நட்பும், துரைராஜ் மீது எம்.ஜி.ஆர் கொண்டிருந்த அன்பும் அலாதியானது, அளப்பரியது! அந்த நினைவுகளை நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார், திரையுலகம் ஆசிரியர் துரைராஜின் அன்பு மகன் பொன்ராஜ். இனி அவரோடு...

"அப்பாவுக்கும் தலைவருக்கும் உண்டான நட்பு, 1947 ஆம் ஆண்டுக்கு முன்பே தொடங்கியிருந்தது. அப்போது தலைவர் கதாநாயகன ஆகவில்லை! ஆனால் அப்பாவைப் பொருத்தவரை அவர் அப்போதே கதாநாயகன்தான்! காரணம், அவரோடு இருக்கிறவர்களுக்கு இருக்கும் சில வாடிக்கைப் பழக்கங்கள், அதாவது பீடா போடுவது, வெற்றிலை போடுவது போன்ற பழக்கங்கள் எம்.ஜி.ஆருக்கு இல்லை! ஆனால் பீடா கடையில் எம்.ஜி.ஆர் அமர்ந்திருப்பார். இதுதான் அப்பாவை எம்.ஜி.ஆர் பக்கம் ஈர்த்தது என்றால், இதுவும் ஒரு காரணம்தான் என்று அப்பா சொல்லியிருக்கிறார்.

அப்போது எம்.ஜி.ஆரின் தோற்றம் மிக வசீகரமான தோற்றம்! எப்போதுமே அவர் வசீகரமானவர்தான் என்றாலும், அவர் கதாநாயகன் ஆவதற்கு முன்பே அவரைக் கதாநாயகனாக கொண்டாடியவர் அப்பா.

இப்போது சென்னையில் ம.பொ.சி. சிலை இருக்கும் அந்த ஜங்க்சனில், நார்த்போக் சாலையில் இருந்து தேனாம்பேட்டை சாலை திரும்பும் முனையில், ஒரு சேட்டு பீடா கடை நடத்திவந்தார். அப்பா சின்ன வயதிலேயே விட்டைவிட்டு ஓடிவந்துவிட்டார். வாழ்க்கையில் முன்னேறி காட்டுகிறேன் என்ற சபதம்தான்! தாத்தா நல்ல வசதியான வீடு, நிலபுலங்கள் என்று இருந்தார். ஆனால் அப்பா அதெல்லாம் எனக்கு வேண்டாம் என்று தன் காலில் நிற்கும் சபதத்துடன் வந்துவிட்டார்.

அப்போது அவருக்கு 12 அல்லது 13 வயதுதான் இருக்கும். போக் ரோடு பீடா கடையில்தான் வேலையில் இருந்தார். அப்போது திநகரில் தான் பெரும்பாலான பட முதலாளிகள், இயக்குனர்கள் இருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்காக, எம்.ஜி.ஆர். என்.டி.ஆர், சிவாஜி போன்ற பின்னாளில் வளர்ந்து உயர்ந்த நட்சத்திரங்கள் எல்லாம் பட முதலாளிகளைத் தேடிவருவார்கள்.

அப்போது அந்த பீடா கடையில் அவர்கள் வந்து நிற்பதுண்டு.. காரணம் அங்கு பட முதலாளிகளும் வருவார்கள் அவர்களுக்கு வாங்கிச் செல்வோர்களும் வருவார்கள். அப்படி அங்கு காத்து நிற்பவர்களில் ஒருவராக எம்.ஜி.ஆரும் அப்பாவுக்கு பழக்கம் ஆனார்.

ஒருநாள், தொடர்ச்சியாக சில நாட்கள் எம்.ஜி.ஆர் வராதது கண்டு அப்பா வருத்தமானார். அவருக்கு என்னாச்சோ என்று கவலைப்பட்டார். இந்தச் சூழலில்தான் சிவகாசியிலிருந்து அப்பாவைத் தேடிக்கொண்டு சில நண்பர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டு அப்பா யானைக்கவுனிக்குச் சென்றார். அங்குதான் அப்போது எம்.ஜி.ஆரும் அவர் அண்ணனும், அன்னை சத்யபாமா உள்ளிட்ட

# நாயகன்

குடும்பத்தாரும் குடியிருந்தார்கள்.

அப்பா அங்கு சென்ற போது, எம்.ஜி.ஆர் வீட்டில் இல்லை. அண்ணன் சக்கரபாணிதான் இருந்தார். “என்னடா விஷயம்?” என்று கேட்டிருக்கிறார். “எம்.ஜி.ஆரை பார்க்கணும்! நாங்க அவரோட ரசிகர்கள்!” என்று சொல்லியிருக்கிறார் அப்பா. அதைக்கேட்டு சக்கரபாணி அதிர்ச்சியாகிவிட்டார். “ரசிகர்களா? எந்த ஊருடா உங்களுக்கு?”

“சிவகாசி!”

“நல்லா வந்து சேர்ந்தீங்கடா... போய் வேலையை பாருங்கடா!” என்று அனுப்பி விட்டார்.

அப்பாவுக்கு தர்மசங்கடமாக போய்விட்டது. சிறிது நேரம் அங்கேயே நின்றுவிட்டு புறப்பட தயாரானபோது, அவர்கள் அதிர்ஷ்டம் எம்.ஜி.ஆர் அங்கே வந்தார். அப்பாவைப் பார்த்ததும், “என்ன துரை, ஏது இந்தப்பக்கம்?” என்று விசாரித்திருக்கிறார்.

“உங்களைத்தான் பார்க்க வந்தேன். கொஞ்ச நாளாய் நீங்க கடைப்பக்கம் வரலையே! என்ன ஏதுன்னு தெரிஞ் சிக்கிட்டு போகலாம்னு வந்தேன். இவங்க என் நண்பர்கள். உங்க ரசிகர்கள்! சிவகாசியிலிருந்து வந்திருக்கிறார்கள்.” அப்பா சொல்லச் சொல்ல எம்.ஜி.ஆர் நெகிழ்ந்து போய்விட்டார். தனக்கு இப்படி ரசிகர்களா என்று வியந்து போனார். தன்மீது துரைராஜ் மிகவும் அன்பு வைத்திருக்கிறான் என்ற உண்மை அப்போதுதான் எம்.ஜி.ஆருக்கு புரிந்தது.

மூன்று ரூபாய் தந்து அவர்களை வழியனுப்பி வைத்தார் எம்.ஜி.ஆர். அப்போது அது பெரிய பணம்! அப்போது எம்.ஜி.ஆர் பணகஷ்டதில் இருந்த காலம். ஆனால் அப்போது மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். குறிப்பாகத் தன் ரசிகர்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று நினைத்தார் என்பதற்கு இது உதாரணம்!

## கொற்றவன்

அன்று முதல் அப்பாவின்மீது எம்.ஜி.ஆருக்கு பிரியம் ஏற்பட்டது. அப்போதெல்லாம் மோகினி, பைத்தியக்காரன் போன்ற படங்கள்தான் எம்.ஜி.ஆரின் அடையாளங்கள்! அதன்பின்புதான் கதாநாயகனாக வளர்ச்சி அடைந்தார். அப்பாவும் எம்.ஜி.ஆருக்கு நல்ல நண்பனாய், ரசிகனாய் நீடித்து



வந்தார்.

எம்.ஜி.ஆர் வசூல் சக்கரவர்த்தியாக உயர்ந்த நேரம்! அப்போது பீடா கடையிலிருந்து கண்ணதாசன் நடத்திவந்த ‘தென்றல்’ பத்திரிக்கையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் எம்.ஜி.ஆர், அண்ணா, கருணாநிதி போன்ற தலைவர்கள் எல்லாம் ஜெமினி அருகே உள்ள டிரைவின் உட்லன்ஸ் வந்தமர்ந்து உரையாடுவது வழக்கம்!

அப்படி ஒரு சமயம் அவர்கள் பேசும்போது அப்பாவும் அங்கே இருந்தார். அப்போது அண்ணா சொன்னார். "துரைராஜ், நீ ஏன் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கக் கூடாது? நல்லா எழுதறே! உனக்கு எம்.ஜி.ஆர் உதவி செய்வார். அவருக்கும் ஒரு பத்திரிகை தேவை! அதை நீதான் பண்ணலாமே!" என்றார். முதலில் அப்பாவுக்கு தயக்கம் இருந்தாலும் அண்ணா, எம்.ஜி.ஆர் என்ற இரண்டு ஆளுமைகள் முடிவெடுத்ததை நாம் செயல்படுத்தியே ஆகவேண்டும் என்று தீர்மானித்தார். 1962 —ஆம் ஆண்டு 'திரையுலகம்' இதழ் வெளிவந்தது. எம்.ஜி.ஆர் பற்றிய செய்திகள்தான் அதில் பிரதானம்! எம்.ஜி.ஆர் பற்றிய அரிய தகவல் 'திரையுலகம்' பத்திரிகையில் வருவதால் எம்.ஜி.ஆர் ரசிகர்கள் போட்டிப்போட்டுக் கொண்டு பத்திரிகையை வாங்குவார்கள்.

'எங்க வீட்டுப் பிள்ளை' வெற்றிவிழாவின்போது 'திரையுலகம்' கொண்டு வந்த சிறப்பு மலர் பட்டிதொட்டிகளில் எல்லாம் விற்பனையில் சக்கைப்போடு போட்டது. படத்தை மட்டுமல்ல, பத்திரிகையையும் அண்ணா வெகுவாகப் பாராட்டினார். பத்திரிகை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே இருந்தது. பயில்வான் ரங்கநாதன் போன்ற பலர் திரையுலகில் பணிபுரிந்தபடியேதான் திரையுலகில் நுழைந்தார்கள். தான் நடித்த படம் பிரிவியூ போடும்போது அப்பாவைக் கட்டாயம் அழைப்பார் எம்.ஜி.ஆர். அப்படி 'நினைத்ததை முடிப்பவன்' படம் பார்த்தபோது அப்பா அமைதியாக இருந்தார். அதைக் கவனித்த எம்.ஜி.ஆர், "என்ன துரை, ஏன் அமைதியாயிட்டே?" என்று விசாரித்தார்.

"படத்தில் நிறைய இடத்தில் 'லாக்' இருக்குது அண்ணே!" என்றார் அப்பா. "அதையேதான் நானும் நினைச்சேன் துரை!" என்ற எம்.ஜி.ஆர் அப்படத்தில் மீண்டும் ரீஎடிட் செய்யச் சொல்லி, அவரே எடிட்டிங்கில் அமர்ந்தார். படம் வெளிவந்து சூப்பர்ஹிட் ஆனது.

எம்.ஜி.ஆர் தி.மு.க.வில் இருந்து விலகியபின் 'திரையுலகம்' எம்.ஜி.ஆரை மட்டுமே தூக்கி பிடிக்கும் இதழாகவே மாறியது. தி.மு.க தரப்பில் இருந்து திரையுலகுக்கு பல நெருக்கடிகள் வந்தன. ஆனால் எதற்கும் அஞ்சாமல் பத்திரிகை தொடர்ந்து வந்தது.

'உலகம் சுற்றும் வாலிபன்' வந்தபோது படத்தை விளம்பரம் செய்வதில் ஆளும்கட்சி பெரிதும் மும்முரமாக இருந்தது. ஆனால் திரையுலகம்தான் படத்தின் விளம்பர போஸ்ட்டர்களாக கடைக்குக் கடை சென்றது. 'உலகம் சுற்றும் வாலிபன்' முதல் நாளிலேயே பார்க்கப்போய் போலீசில் நான் அடிப்பட்டு வந்தேன்.

அப்பா மூலம் இந்தத் தகவலை கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர், மீண்டும் பத்திரிகையாளர் பார்ப்பதற்கான 'பிரஸ் ஷோ' ஒன்றை ஏற்பாடு செய்தார். பத்திரிகையாளர் தன் குடும்பத்துடன் பார்க்க இந்த ஏற்பாடு! அப்பா தான் இதற்கான ஏற்பாடுகளை முன் நின்று செய்தவர். நான் அந்த பிரிவியூவில் கலந்து கொண்டேன். ஸ்வீட், காரம், ஐஸ்கிரீம், காபி என்று எல்லோருக்கும் ஏகப்பட்ட பலகாரம் வந்தது. இன்றும் அந்தக் காட்சியை மறக்கமுடியவில்லை! எங்களோடு எம்.ஜி.ஆரும் வந்து அந்தக் காட்சியை பார்த்து மகிழ்ந்தார். 'படம் எப்படி?' என்றார்..

நாங்கள் அப்படத்தைப் பார்த்து அசந்து விட்டோம் என்றால், அங்கு வழங்கப்பட்ட பதார்த்தங்களைக் கண்டு மிரண்டே போய்விட்டோம். படத்தில் மட்டுமல்ல, பிரிவியூ காட்சியிலும் எம்.ஜி.ஆர் எங்களையெல்லாம் அசத்திவிட்டார். 'இதயக்கனி படத்தின் போது எம்.ஜி.ஆரின் வண்ணப்படங்கள் அடங்கிய 'இதயக்கனி சிறப்பு மலர்' கொண்டு வந்தது திரையுலகம்.

ஒரு லட்சம் பிரதிகள் பிரிண்ட் ஆகின. பல பேர் சொன்னார்கள். சம்பாதித்த பணம் எல்லாம் துரைராஜ் இதிலேயே முடக்கி விட்டார். தவறு செய்துவிட்டார் என்று பேசினார்கள். ஆனால் அப்பாவுக்கு அசராத நம்பிக்கை, எல்லாம் விற்றுவிடும் என்ற நம்பிக்கை.

'இதயக்கனி சிறப்பிதழ்' இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, என்றெல்லாம் விற்பனை ஆகின. ஒரு லட்சம் பிரதிகளும் விற்பனையாகிய பின்பும், மேலும் இதழ்கள் கேட்டுக் கடிதங்கள் வந்தபடியே இருந்தன. மீண்டும் பத்தாயிரம் பிரதிகள், இருபதாயிரம் பிரதிகள் என்று விற்றுக்கொண்டே இருந்தன. அப்பா 'திரையுலகம்' பத்திரிகையில் சம்பாதித்தே மூன்று கார்கள் வாங்கினார். அப்பா நிறையப் பேர்களை எம்.ஜி.ஆரிடம் அழைத்து சென்று பலன் பெற வைத்திருக்கிறார். தனக்காக எதையும் கேட்டுக்கொள்ள மாட்டார்.

என் மாமா காங்கிரஸ்காரர். என் அத்தையோ எம்.ஜி.ஆரைப் பார்க்கவேண்டும் என்று அப்பாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்கு மாமா கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். இந்நிலையில் ஒருநாள் அத்தையை அழைத்துக்கொண்டு அப்பா எம்.ஜி.ஆரை சந்திக்க கிளம்பினார். மாமாவும் உடன் சென்றார். எம்.ஜி.ஆரை நேரில் பார்த்த உடனேயே மாமாவுக்குள் ஒரு மாற்றம்! மீண்டும் ஊருக்கு திரும்பிய அவர், அன்று முதல் காங்கிரசில் இருந்து விலகி எம்.ஜி.ஆரின் அபிமானியாகவே இருந்தார். என்ன நடந்தது என்றால், அவருக்கே சொல்லத் தெரியவில்லை! 'என்னவோ அவரை பார்த்த உடனேயே பிடித்துவிட்டது!' என்பதுதான் மாமாவின் பதிலாகவே இருந்தது.



1980 —ல் சிவகாசியில் போட்டியிடுவதற்கு துரைராஜ் தான் சரி என்பது எம்.ஜி.ஆரின் தேர்வாக இருந்தது. ஆனால் அப்பாவோ, “அந்த சீட்டை சோ.பாலகிருஷ்ணனுக்கு கொடுங்க!” என்றார். தலைவருக்குக் கோபம் வந்துவிட்டது. “நான் உனக்கு கொடுத்தால் நீ அதை வேறுயாருக்கோ கொடுக்க சொல்றியா?” என்று கடுமையாகக் கடிந்துகொண்டார்.

எம்.ஜி.ஆர் மனதில் சோ. பாலகிருஷ்ணனுக்கு சீட் கொடுக்கவேண்டாம் என்பதற்கு ஒரு காரணம் இருந்தது. அவர் ஒரு பள்ளி ஆசிரியர். அரசாங்கத்தில் ஒரு நிலையான வருமானம். அதை ஏன் அவர் இழக்க வேண்டுமென எம்.ஜி.ஆர் நினைத்தார். ஆனால் வேட்பாளர் பட்டியலில் சோ.பாலகிருஷ்ணனைத்தான் எம்.ஜி.ஆர் அறிவித்தார்.

அப்பாவுக்கு ஆச்சரியம்! ஓடிச் சென்று தலைவரை பார்த்தார். “உன் மனசை காயப்படுத்த விரும்பலே துரை! அதனால் தான் நீ விருப்பப்பட்டதை செஞ்சிருக்கேன். இப்போது சந்தோஷமா உனக்கு?” என்றார். அப்பா உருகிப் போய்விட்டார்.

அப்பாவுக்கும் தலைவருக்கும் உள்ள நெருக்கத்தை உடைக்கச் சிலர் விரும்பினார்கள். ‘துரைராஜ் ஏன் நம்ம சின்னத்தைப் பச்சை குத்திகலே!?’ என்று திரி கிள்ளிப் போட்டார்கள். தலைவர் அப்பாவை அழைத்துக் கேட்டார்.

“பச்சை குத்துவது எனக்கு பிடிக்காது. அதை குத்தித்தான் உங்கள் மீது உள்ள அன்பை நான் காட்டணுமா? என் நெஞ்சைக் கிழிச்சுப் பாருங்க! அதிலே உங்க உருவம்தான் தெரியும்! இப்படி நீங்கள் கேட்டதுக்கு பதிலா என்னை சாகடிச்சிருக்கலாம்!” என்றார் அப்பா. தலைவர் ஓடிவந்து கட்டிபிடித்துக் கொண்டு அழுதார். தலைவர் கண்கலங்கி அழுத அந்த காட்சி மாம்பலம் அலுவலகத்தில் பல பேர்க்கு தெரியும்.

தலைவருக்கும் அப்பாவுக்கும் ஆன நட்பு நாற்பது ஆண்டுகளுக்கு மேலானது. அதைப்போய் சந்தேகம் கொண்டோமா? தனக்கு முதன்முதலாக ரசிகன் என்று சொல்லிக் கொண்டு வந்து நின்றவன் துரைராஜ்தானே என்று நினைத்துப் பார்த்தாரோ என்னவோ, அன்று அப்படி அவர் கண்கலங்கி அழுதுவிட்டார். அப்படிப்பட்ட நெடுங்கால நட்பு நெருங்கிய அவர்களுக்குள் இருந்தது!” என்று சொல்லி அந்த நாட்களை நினைவு கூறும் பொன்ராஜ் தன் தந்தையாருடன் ‘திரையுலகம்’ பத்திரிகை அலுவலகத்தின் குடும்பத்தில் ஒருவராக பணிபுரிந்து இருக்கிறார்.

‘இரட்டை இலைக்குத்தான் என் குடும்பம் என்றும் வாக்களிக்க வேண்டும்! இதுதான் என் தலைவருக்கு என் வாரிசுகள் செய்யும் கடமை!’ என்று ஜி.கே. துரைராஜ் தன் குடும்பத்தாரிடம் சத்தியம் வாங்கிக்கொண்டு தான் காலமாகியிருக்கிறார்.

புரட்சித் தலைவரின் துடிப்பு அடங்கிய அந்த ஆண்டு முதலே ‘திரையுலகம்’ இதழும் தன் துடிப்பை நிறுத்திக் கொண்டு விட்டது. இந்தத் ‘திரையுலகம்’ இதழ், கடைகளில் வேண்டுமானால் இன்று கிடைக்காமல் இருக்கக் கூடும்! அவ்விதழ் தடம் பதித்து விட்டுச் சென்ற நினைவுகளும் பதிவுகளும் அந்தக்கால தமிழ்த் திரையுலக ரசிகர்களின் மனதில் என்றும் மாறா பசுமையுடன் பல வண்ணங்களில் ஜொலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

அந்தப் பளபளப்பான அட்டை இன்றும் ரசிக மனங்களில் பளபளத்துக் கொண்டேதான் இருக்கிறது. ‘திரையுலகம்’ என்றும் அழியாமல் வாழும் ‘நினைவுலகம்!’

# சிட்டுக் குருவியின் பறத்தல்

எனக்கென்ன தெரியும்
ஒரு சிட்டுக் குருவியின் பறத்தலைப் பற்றி?
எங்கிருந்தோ 'விசுக்'கென்று குதித்து
காலத்தின்
ஏக போக விளைச்சலில்
ஒரு விநாடியைக் கொத்தி
உருவி எடுத்துக் கொண்டு பறந்து போகும்.
தாமதித்திருந்தால்
சிறிது அதைப் பற்றி கேட்டிருக்கலாம்.
தாமதிப்பதில்லை அது.
அது அவசரமல்ல.
அது என்னைப் புறக்கணிக்கிறது
என்று அர்த்தமல்ல.
அடுத்த விநாடியை
அது காத்திருக்க வைப்பதில்லை.
அடுத்த விநாடி
பூத்து உதிர்வதற்கு முன்னமேயே
முழுக்க வாழ்தலின்
தீவிரம் அது.
முன் குதிக்கும் துள்ளி சிட்டுக் குருவி
எதிர்பாராதபடி
மறுபடியும்.
சற்றும் தாமதமில்லை அதன் சிலிர்ப்பில்
நான் மனம் பறிகொடுக்க.

**கு.அழகர்சாமி**

# பாதை

பாதை என
தனியாக ஒன்று
எங்குமில்லை..

என் ஒவ்வொரு காலடிக்கும்
முன்பு கைப்பிடி கருங்கற்களை
நானே நிரப்பியபடி செல்கிறேன்

இதற்கு
வெறும் தரையிலேயே
நடந்து விடலாம்தான்

நடக்கின்ற தைரியம் முளைப்பதே
பாதையென கொள்வதில் என்பதனால்
கற்களை பாதையாக்கிய பயணம்

தடம் பதித்து தெரிவிக்கவோ
கம்பள வரவேற்பு ஏற்கவோ அல்ல.
பாதை போட்டு திரிந்தாலாவது
அடைகிற இடம் புலப்படலாம்..

அருகிலிருப்பவரின் பாதைகள்
அக்கரைகளாக அச்சுறுத்துவதில்
இடைவெளி வெறுந்தரைகள்
ஆறாக அரற்றுகிறது

நான் வீசிய ஒவ்வொரு
அங்குல பாதைகள் மட்டுமே
கதை பேசி அழைத்து செல்கிறது
நடு ஆற்றில் விழுந்து விடமாட்டாயென
கைப் பிடித்து..

**சித்ரா**

# காகிதக்கப்பல்

மழை விட்டதறிந்து
சன்னல்களூடே
சந்தித்துக்கொள்கிற
எதிரெதிர்
வீட்டுச்சுட்டிப்பயல்களின்
கண்களில் நிலைத்துவிட்டது
மின்னலின் ஒளி

ஆர்ப்பரித்துத் தெருவுக்கு வரும்
அவர்தம் கைகளில் தவழ்கின்றன
நூற்றுக்கணக்கில்
கப்பல்களை தம்முள்
பதுக்கி வைத்திருக்கும்
எழுதித் தீர்ந்த
நோட்டுப் புத்தகங்கள்

பிஞ்சு விரல்களால் தாள்கள்
கிழிபடுவதிலிருந்து
துவங்குகிறது
காகிதம் தவிர
உதிரி பாகங்கள் எவையுமின்றி
கப்பல்கள்
கட்டும் பணி ஆயிற்று

மழைநீரின் ஓட்டத்தில்
மெல்ல உந்தப்பட்டு நகர்கிறது
மாலுமியொருவன்
செலுத்துவதன்
நிர்பந்தங்களேதுமற்ற
கப்பல்களில்
முதல் கப்பல்

மேலும் நகர்கிறது

சிறுவர்களின் பார்வையிலிருந்து
மறையும்வரை
பயணப்பட்டு
ஈரலித்தலினிமித்தம்
அவிழ்தலில்
மழை நீருடன் தன்னை
காகிதமாகவே சமரசம்
செய்துகொள்வதை நோக்கி.

ப.தியாகு

# மழை, காலம்

அடைந்த வீட்டினுள்
நானும் மழையின் சத்தமும்.
மழை பெருகப் பெருக
வீடு மௌனமாகிறது.
சுவர்களெல்லாம் வேர் விரித்து
வளர்ந்துகொண்டேயிருக்கிறது
போதி மழை.
சத்தம் மழையென பெய்யும்போது
நானும் வீடென நனைகிறேன்.
=========

நான் இருக்குமிடம்
என் உலகம் —மற்றது,
நான் இல்லாத உலகம்.
என் அலுவலக அறைகள்
சுவர்களாலானவை.
சுவர்களுக்குள் சூரியன்
விடிவதுமில்லை மறைவதுமில்லை.
முட்கள் மட்டுமே
நகர்ந்துகொண்டிருக்கின்றன.
வெளியே
நனைந்திருக்கும் சாலைகளில்
மழை என்றும்
பெய்து முடிந்திருக்கிறது.

ச.அனுக்ரஹா

## 'விமர்சனம் பண்ணுங்கோ!!' —கமல்

தடைகள் பல கடந்து மெர்சல் திரைப்படம் தீபாவளியன்று வெளியாகி, நல்ல விமர்சனங்கள் வந்துள்ளன. படத்தில் ஜிஎஸ்டி மற்றும் டிஜிட்டல் இந்தியா போன்ற மத்திய அரசின் திட்டங்களை விமர்சிக்கும் காட்சிகளை நீக்க வேண்டும் என பாஜக தலைவர்கள் கண்டனம் தெரிவிக்கும் நிலையில், நடிகர் கமல்ஹாசன் டுவிட்டரில் மெர்சல் படத்திற்கு ஆதரவாகப் பதிவிட்டுள்ளார். அதில், 'மெர்சலுக்கு சான்றளிக்கப்பட்டுள்ளது. அதை மறு சான்றளிக்க வேண்டாம். எதிர் விமர்சனங்கள் இருந்தாலே இந்தியா ஒளிரும்.' என்று தெரிவித்துள்ளார். அரசியல் பிரவேசத்தில் மிகத் தீவிரமாக இருக்கும் கமலின் திட்டங்கள் விரைவில் தெரியவரும்.



விளையாடுங்க கமல்!

## அதிர்ஷ்டம் என்பது இதுவல்லவோ?

வெள்ளித்திரையில் இருந்து சின்னத்திரைக்கு வருவதுதான் ஹாலிவுட் முதல் கோலிவுட் வரை நடக்கும் நிகழ்வு. ஆனால், தொலைக்காட்சித் தொடரொன்றில் நடித்தவரான பிரியா பவானி சங்கர், வெள்ளித்திரையில் கதாநாயகியாகி இருக்கிறார். சமீபத்தில் வெளியான 'மேயாத மான்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, தற்போது இயக்குனர் பாண்டிராஜ் படத்தில் ஒப்பந்தம் ஆகியுள்ளார் பிரியா பவானி சங்கர். கார்த்தி கதாநாயகனாக நடிக்கவிருக்கும் இப்படத்தில் பவானி நடிக்கிறார். இந்த இரண்டாவது படம் தாயாராவதற்கு முன்பே இவருக்கான வாய்ப்புகள் வந்தவண்ணம் இருக்கின்றன.



சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரை!!

# சங்கமித்ரா!

ஜாக்கிசானின் ‘குங்க்பூ யோகா’வில் நடித்தவரான திஷா பதானி, ‘சங்கமித்ரா’ படத்தின் நாயகியாக ஒப்பந்தமாகி இருக்கிறார். விளம்பரங்களிலும், இந்திப்பட உலகிலும் வளர்ந்து வரும் திஷா, தமிழில் அறிமுகமாவதைப் பெருமையாக நினைப்பதாகக் கூறுகிறார். ‘சங்கமித்ரா’ படத்தின் படப்பிடிப்புக்கான முதற்கட்ட பணிகள், ஹைதராபாத்தில் நடக்கின்றன. இப்படத்தில் ஜெயம் ரவி மற்றும் ஆர்யா நடிக்கிறார்கள். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.



## தமிழில் ‘சங்கமிக்கிற திஷா!’



# நீர்... நிலம்...

## மண்ணும் மனிதனும் சார்ந்த பதிவுகளை

### 37
### மனதில் நிற்கும் மாமல்லபுரம்!

குன்னத்தூர் வந்தடைந்து ஓய்வுக்காக அமர்ந்தோம்.

இங்கே புல்கட்டுடன் சைக்கிளில் வந்த மாணவிகள் இருவர் சிந்தனையைச் கிளறினார்கள். இவ்விரு பெண்களும் பள்ளிச் சீருடையில் இருக்கிறார்கள். வயல்வெளி சென்று தங்கள் வீட்டுக் கால் நடைகளுக்குப் புல் அறுத்து கட்டிக் கொண்டு செல்கிறார்கள்.



இந்தக் காட்சிகள் கிராமத்து வாழ்க்கையில் சாதாரணமாகக் காணக் கிடைக்கும் காட்சிதான்! படிக்கும் வயதிலேயே தங்கள் வீட்டுக்குத் தேவையானவற்றை அவர்கள் செய்து பழகுகிறார்கள்.

ஆனால் நகர்ப்புறத்து பெரும்பாலான மாணவிகள், காலையில் தூங்கி எழுவதே காலதாமதம்தான்! பின் அவசர அவசரமாக பள்ளிக்குக் கிளம்பி ஓடுகிறார்கள்! இவர்களைக் காட்டிலும் கிராமத்து மாணவிகள் தாங்கள் வளரும் சூழலையும் வளர்த்துக் கொண்டு, பின் நகரத்துக்குச் சென்று படித்து, தங்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்கிறார்கள்!

இந்த உண்மையை உணர்த்துவதற்கு அந்த இரண்டு பெண்களும் இந்த வழித்தடத்தில் சான்றுகள்!

சற்றுநேரத்தில் மீண்டும் இருவர் புல் கட்டுடன் சைக்கிளில் வரும் அதே காட்சியைக் கண்டோம். அவர்களை நோக்கிச் சென்று துண்டறிக்கைகள் வழங்கினேன்.

“என்ன அண்ணா இது?” என்றார்கள்.

“படித்துப் பாருங்கள்!” என்றேன்.

அவர்களுக்கு நான் விளக்கிச் சொல்லி அவர்களது நேரத்தை எடுத்துக் கொள்ளவிரும்பவில்லை! அதைச் சொன்னபோது, சிரித்துக்கொண்டே புறப்பட்டனர்.

நாங்களும் நடையைத் தொடர்ந்தோம்.

மதியம் மாமல்லபுரம் சாலைக்குள் திரும்புவதற்கு முன்பாக இந்த நீள்வழிச் சாலையின் இடதுபுறம் ஒரு கருங்கல் மண்டபம் இருக்கிறது. பாழ்பட்ட நிலையில் இருக்கும் இம்மண்டபம் சோழர்கள் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம்.

மாமல்லபுரம் செல்பவர்கள் இங்கே தங்கிச் செல்லும் வண்ணம் இது கட்டப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. இதுபோன்ற எண்ணற்ற சத்திரங்களும், மண்டபங்களும், பழந்தமிழகத்தில் ஏராளமாய் இருந்திருக்கின்றன. ஆனால் அவற்றின் மிச்சங்களாக காணப்படும் இவை, மிகமிக அரிதாகக் காணப்படும் அரிய கலைச் சின்னங்கள். இவற்றை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை மட்டுமல்ல, அந்த ஊர்ப்பகுதி மக்களின் கடமையும் கூட! ஆனால் ஏன் இவற்றை காக்கத் தவறுகின்றனர்?

பெரியவர்கள் தவறவிடுவதை இளைஞர்கள்

# நினைவு...

## கொற்றவன்

37

**பகிர்வுகளாய் முன்வைக்கும் பயணத் தொடர்!**

காத்து நிற்கலாம். நடிகர்களுக்கு ரசிகர்மன்றம் வைத்து மகிழும் இளைஞர்கள், ஏன் நம்நாட்டு கலைச்சின்னங்களையும் பெருமைமிகு அடையாளங்களையும் காப்பதற்காக மன்றம் அமைக்கக் கூடாது?



நண்பர் பழனிச்சாமியிடம் இதுபற்றி சொன்னபோது, “இதைக்கூட ஒரு விழிப்புணர்வு பிரசாரம் செய்யலாம்!” என்றார்.

பழனிச்சாமிக்கு சமூக அக்கறையும், அதுகுறித்த செயல்பாடுகளில் ஆர்வமும் அதிகம்! இப்படியொரு நண்பர் இப்பயணத்தில் எனக்குக் கிடைத்திருப்பது நான் செய்த புண்ணியங்களில் ஒன்று!

நல்லோர் வட்டம்' பாரதி பாலு அவர்கள், ‘இரண்டு பேர் மனம் ஒருமித்து ஒன்றாக பயணிப்பதே ஒரு சாதனைதான்!’ என்பார்.

இதை நண்பரிடம் வெளிப்படையாகச் சொன்னால் முகஸ்துதியாகி விடும்! ஆனால் இதை மறைமுகமாக பழனிச்சாமியிடம் தெரிவித்தபடியேதான் இருக்கிறேன். அவர் மென்மையாய் புன்னகைப்பார்!

பெருந்தலைவர் காமராஜரிடம் ஒரு பழக்கம் உண்டு! தன்னிடம் யாராவது ஒரு செய்தியைச் சொல்கிறார் என்றால் பொறுமையாக அதைச் செவிமடுப்பார். செய்தியைச் சொல்பவர் சாமானியர்தானே என்றெல்லாம் நினைக்கமாட்டார். அரசு அதிகாரிகள் அவரிடம் இப்படி முக்கியமில்லாத ஒன்றுக்கு ஏன்



நேரம்கொடுக்க வேண்டும் என்பார்கள்.

காமராஜர் இதற்கு தரும் விளக்கம் "நம்மிடம் ஒருத்தர் வந்து ஒரு செய்தியைச் சொல்லும்போது அதற்கு காது கொடுக்கக்கூட நேரம் இல்லேன்னா, சக மனுஷனை மதிக்காத மனிதத் தன்னமையற்ற ஆளா போயிடுவோம். நான் தலைவனா இருக்கிறதைவிட சக மனிதனை மதிக்கும் மனிதனாக இருக்கணும்னு நினைக்கிறேன்!" என்பாராம்.

நண்பர் பழனிச்சாமியிடம் அந்தக் குணத்தைக் காணமுடிகிறது. இந்தப் பயணத்தில் பெரும்பாலும் நான்தான் அதிகம் பேசிக்கொண்டிருக்கிறேன். அவர் அமைதியாக செவிமடுத்தபடிதான் பயணத்தைத் தொடர்கிறார். அவர் எழுப்பும் வினாக்கள் பெரும்பாலும் சமுகத்தின் மீதான அக்கறையை வெளிப்படுத்தும்.

பேசிக்கொண்டே மாமல்லபுரம் வந்தோம். பயணத்தில் நாங்கள் இடதுபுறம் திருக்கழுக்குன்றம் சாலையில்தான் திரும்ப வேண்டும் என்றாலும், மாமல்லபுரம் பாதையில் வலதுபுறம் 2 கி.மீ உள் நுழைந்து திரும்பவேண்டும் என முடிவெடுத்தோம்.

மாமல்லபுரம் பலரும் வந்து குவியும் இடம் என்பதால் இங்கே துண்டறிக்கைகள் வழங்கினால், அது பல மாவட்ட மக்களைச் சென்றடையும் என்பதுதான் காரணம்!

மாமல்லபுரத்துக்கு நான் பல தடவை வந்திருக்கிறேன். எப்போது வந்தாலும் இந்தச் சிற்பங்கள் பல்லவர் காலத்துக்கும் அதன்பின்பு வந்த சோழர்காலத்துக்கும் என்னைக் கடத்திக் கொண்டு போய்விடும். பழனிச்சாமியிடம் இந்தத் தகவலைச் சொன்னபோது "அண்ணா, இது பிரமிப்பு இல்லே! மல்டிபிள் பர்சனாலிட்டி ஒரு நோய் இருக்கு. அதோட ஆரம்ப அறிகுறியா இருக்கப்போகுது!" எனக் கிண்டலாகச் சொல்லிச் சிரித்தார்.

"இருக்கட்டுமே சாமி! நம்மை அழகாக்குவதும் ஆற்றல்மிக்கவனாக ஆக்குவதும் இதுபோன்ற கற்பனைதான்!" என்றேன். ஆம்! என்று ஒத்துக்கொண்டார்.

மாமல்லபுரம் வந்து நின்றதுமே பழைய நினைவுகள்தான் மனதில் ஓடியது. கோடம்பாக்கத்திலிருந்து நண்பர்களுடன் சைக்கிளில் வந்து மாமல்லபுரத்தைச் சுற்றிப் பார்த்த நினைவுகள் என்றும் எனக்கு மறக்க முடியாதவை அந்த சைக்கிள் பயணத்தில் நண்பர் இராஜனும் இணைந்திருந்தார். இந்த நடைப்பயனத்திலும் அவர் இருக்கிறார் என்ற மகிழ்ச்சியை நண்பர் பழனியிடம் பகிர்ந்துக் கொண்டேன்.

'அர்ச்சுனன் தவம்' என்னும் மலைப்பாறை யானைச் சிற்பங்களின் தொகுதி முன்னே நின்று வருவோர் போவோர்க்கு துண்டறிக்கைகள் வழங்கினோம். மதியம் சாப்பாட்டு நேரம் தாண்டிவிட்டதால் மேற்கொண்டு இங்கேயுள்ள பஞ்சரதம், கடற்கரைக் கோயில் போன்றவற்றைப் பார்க்காமல் செல்ல முடிவெடுத்தோம்.

பழைய கறுப்பு வெள்ளைப் படங்களான பார்த்திபன் கனவு, கலங்கரை விளக்கம், சர்வர் சுந்தரம், வா ராஜா வா, உள்ளிட்ட ஏராளமான படங்களில் மாமல்லபுரம் இடம் பெற்றிருக்கும்.

'கலங்கரை விளக்கம்' படத்தின் இயக்குனர் திரு.கே.சங்கர் அவர்களைப் பேட்டிகண்ட சமயத்தில் அவர் மாமல்லபுரம் சிற்பங்கள் மீது அலாதி பிரியம் வைத்திருப்பதைச் சொன்னார்.

இப்படத்தில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், 'பொன்னெழில் பூத்தது புதுவானில்' என்ற பாடல் காட்சிக்காகப் பல்லவப் பேரரசர் நரசிம்மவர்மனாகவும், அபிநய சரஸ்வதி சரோஜாதேவி சிவகாமியாகவும் தோன்றுவார்கள்.

இப்படியொரு காட்சி இடம் பெறுவதற்கு, பழம்பெரும் நடிகர் திரு.எஸ்.வி.ரங்காராவ், திரு.ஜெமினி கணேசன், திருமதி.வைஜெயந்தி மாலா போன்ற அற்புத நடிப்புச் செம்மல்கள் நடித்த 'பார்த்திபன் கனவு' படத்தின் மேல் மக்கள்திலகம் எம்.ஜி.ஆருக்கும், இயக்குனர் சங்கருக்கும் இருந்த பிடிப்புதான் காரணம் என்று அவர் என்னிடம் கூறியிருக்கிறார். மாமல்லபுரத்தை வைத்து ஒரு படம் பண்ண வேண்டும் என்று அவர்கள் இருவருக்குமே ஒரு திடமான எண்ணம் இருந்தது. அது 'கலங்கரை விளக்கம்' படம் மூலம் ஓரளவு நிறைவேறியது.

அமரர் கல்கி எழுதிய 'பார்த்திபன்

கனவு' புதினம்தான் திரைப்படமாகியது. ஆனால் மாமல்லபுரத்தை ஒட்டிய ஒரு சரித்திரம் படத்தில், நரசிம்ம பல்லவனாக மக்கள்திலகம் தோன்றி நடிக்க வேண்டும் எனும் ஒரு திட்டமும் இருந்தது என்று திரு. கே.சங்கர் அவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் அது கைகூடாமல் போய்விட்டது.



'கலங்கரை விளக்கம்' படத்தில் 'என்னை மறந்ததேன் தென்றலே...' என்ற ஒரு அற்புதமான, மனதை அள்ளிக்கொள்ளும் பாடல் இருக்கிறது. மாமல்லபுரத்தின் அத்தனை கலைச் சின்னங்களையும் அந்த ஒரே பாடலில் இடம்பெற வைத்து சாதனை படைத்திருப்பார் திரு.சங்கர் அவர்கள்.

அதற்காக அவரது கையைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டு நன்றி சொன்னேன். அவர் சற்றும் அதை எதிர்பார்க்கவில்லை "பார்த்தீங்களா? நான் எப்பவோ எடுத்த அந்தப் பாடல் இன்னைக்கும் ஒரு நன்றியை எடுத்துக்கொண்டு வருது! நம்ம மண்ணின் பெருமையை நாம எடுத்துச் சொல்லாம, வேற யார் எடுத்துச் சொல்லுவாங்க?" என்று நெகிழ்ந்தார்.

சரோஜாதேவியைத் தொடர்ந்து மக்கள்திலகம் செல்வது போல இருக்கும் இப்பாடல் எங்கே ஒலித்தாலும், நின்று அப்பாடலை கேட்டுவிட்டுத்தான் செல்வேன். என்னவோ அப்பாடல் மீது அப்படியொரு ஈர்ப்பு!

நண்பரிடம் இத்தகவலை எல்லாம் பகிர்ந்தபடி, சாப்பாட்டை முடித்துக்கொண்டு மாமல்லபுரத்தை விட்டு வெளியேறும்போது மணி பிற்பகல் 3.30.

இங்கே இடப்புறம் செல்லும்பாதை கல்பாக்கம் அணுமின் நிலையத்துக்கு செல்கிறது.

ஆயிரத்து நானூறு ஆண்டுகளாக தமிழரின் கலைச்சின்னமாக, உலகெங்கும் வந்து குவியும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அற்புதமாக விளங்கும் மாமல்லபுரம் அருகே, 'ஆக்கசக்தி' எனும் பெயரில் ஒரு 'அழிவுச்சக்தியை' எப்படி அமைத்தார்கள்? எப்படித் தமிழகம் அனுமதி அளித்தது என்ற பெரும் கேள்வி எழுந்தது.

நண்பர் பழனிச்சாமி மிகவும் ஆதங்கப்பட்டார். "இதுநாள்வரை நான் கல்பாக்கத்துடன் மாமல்லபுரத்தைச் சேர்த்து யோசிக்கலே அண்ணா! இப்போதுதான் பேராபத்து புரிகிறது" என்றார்.

உலகெங்கும் அணுவுலைகள் மூடப்பட்டுவரும் நிலையில், தமிழகத்தில் இந்தக் கல்பாக்கம் அணுவுலை கடலுக்கு அருகாமையில், கலைப்பெருமைக்கு அருகாமையில், குறிப்பாக மக்கள் பெருந்தொகையில் வாழும் சென்னைக்கு அருகாமையில் துவங்கப்பட்ட மர்மமென்ன?

இது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை ஆள்பவர்கள் எப்படி அனுமதி அளித்தார்கள் என்பதுதான் கேள்விக்குறி.





மாமல்லபுரத்தை தாண்டும்போது குப்பைகள் கொட்டி மூடப்படும் ஒரு குளத்தைக் கண்டோம். மிகவும் வேதனையாக இருக்கிறது. ஒவ்வொரு ஊர்ப் பஞ்சாயத்தும் தங்கள் ஊரில் உள்ள குளங்களைப் பராமரிப்பதைக் கடமையாகவும் உறுதிமொழியாகவும் கொள்ளவேண்டும். இதற்கு மக்கள் முழு ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

திருக்கழுக்குன்றம் பாதையில் நடந்தபோது கொத்திமங்கலம் என்ற ஊரை வந்தடைந்ததும் இருட்டிப் போனது. இங்கே இருந்த 'ஆர்.வி.எஸ் பஞ்சர் கடை'யில் திரு.பாண்டியன், திரு.விஜி ஆகியோர் 'இரவு இங்கேயே தங்கிக்கொள்ளுங்கள்' என்றனர். இரவு உணவுக்கும் இவர்களே ஏற்பாடு செய்தனர்.

இவர்களோடு பேசிக்கொண்டிருக்கும் போது, தான் ஒரு சாராய வியாபாரியாக இருந்ததையும், தன்மேல் நிறைய வழக்குகள் நடந்து வருவதையும் சொன்னார் திரு.பாண்டியன். பட்டதாரியான இவரைக் காவல்துறை திருந்தவிடவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்தார்.

எங்கள் துண்டறிக்கையினை கடைவாசலில் உள்ள பலகையில் ஒட்டிவைப்பதாகவும் தெரிவித்தார்கள்.

இரவு நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள் இந்த நண்பர்கள். நாளைய தினம் போகும் பாதையில் கவனமாக இருங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் காரணம் மட்டும் சொல்ல மறுத்துவிட்டனர்.

இந்திய அளவிலான எனது முந்தைய நடைப்பயணத்தில் எத்தனையோ இன்னல்கள், எதிர்பாராத சங்கடங்கள் இருந்தன. அவற்றையே கடந்துவிட்ட பிறகு, சொந்தத் தமிழ் மண்ணில் சிக்கல் என்ன இருந்து விடப்போகிறது?

இங்குள்ள கோயிலில் உறியடித் திருவிழா நடக்கிறது.

நள்ளிரவுவரை பாட்டும் மக்கள் கூட்டமுமாக கொத்திமங்கலம் 'சத்த'மங்கலமாக இருந்தது.

( நடை தொடரும்)

# புத்தக விமர்சனம்

## ஆண்டாள்– கடவுளைத் தேடிய கவிஞரின் பயணம்

### நூல் ஆசிரியர்: இரா. நரேந்திர குமார்

கவிதைத் தொகுப்பு

**விலை : ரூ. 250**




**வெளியீடு:**

**காவ்யா பதிப்பகம்**

No 16, 2nd Cross Street, Kodambakkam,

சென்னை – 600024, இந்தியா

**க**ண்ணன் என்னும் கருந்தெய்வத்துடன் தன்னை முழுமையாகப் பிணைத்துக் கொண்டு, மற்ற உறவுகளைத் துண்டித்துவிட்ட ஆண்டாளை ஒரு முழுமையான கவிதைப் பரப்பில் வைத்துப் பார்க்கிறது, இரா. நரேந்திரகுமாரின் ‘ஆண்டாள்— கடவுளைத் தேடிய கவிஞனின் பயணம்’ நூல்.

சங்க காலப் பெண் கவிஞர்களின் நீட்சியாகவே ஆண்டாளைப் பார்க்கும் நரேந்திர குமார், ஒரு ஆதிவாசிப் பெண்ணின் குரலையும் ஆண்டாளின் கவிதையில் கேட்கிறார். வில்லி இனத்துக்கும், கண்டன் இனத்துக்கும் இடையில் நடந்த ஊடாட்டத்தில் ஆண்டாள் மணம்புரிவதைத் தவிர்த்துவிட்டாள் என்ற மானுடவியல் பார்வையையும் முன்வைக்கிறார்.

‘கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்தற்கு ஓர் குற்றேவல்/இம்மைப் பிறவி செய்யாதே’ என்ற நாச்சியார் திருமொழி வரியில் ‘குற்றேவல்’ என்ற சொல்லுக்கு ‘ஆணால் செய்ய முடியாத அந்தரங்கக் கைங்கரியம்’ என்ற விளக்கமும் ஆண்டாள் கவிதை எல்லையை மிக நுட்பமாக விரித்துக் கொடுக்கின்றன. மரபுக்குள் நின்று இதைச் சாதித்திருக்கிற ஆண்டாளின் கவிதைக்கான ஆய்வடங்கலாகவே இந்த நூலைக் கொள்ளலாம்.

# அறிவோம் தமிழர்

## விவசாயத் தொழிலாளர்களின் கலகக்குரல்

கீழத்தஞ்சையில் (இன்றைய திருவாரூர், நாகப்பட்டினம்) பண்ணையடிமைகளாக நடத்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்களிடம், ‘உன்னை அடித்தால் திருப்பி அடி, அதனால் என்னவானாலும் பார்த்துக்கொள்ளலாம்’ என்றொரு கலகக் குரல் 1942—ல் தமிழ்நாட்டில் ஒலித்தது. அந்தக் குரல் பி. சீனிவாசராவினுடையது. நிலவுடைமையாளர்கள் தங்கள் நிலத்தில் வேலை செய்த ஆண்களையும் பெண்களையும் எப்படி நடத்தினார்கள் என்ற விவரம் நமக்குத் தெரிந்தால்தான் அவரது கோபக் குரலின் நியாயம் புரியும்.

20—ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அப்போதைய தஞ்சை மாவட்டத்தில் லட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் பண்ணையடிமைகளாக இருந்தனர். அவர்களின் முன்னோர்கள் வாங்கிய கடனுக்கு ‘புரோநோட்’ எழுதிக் கொடுத்துவிட்டு சுகந்தை என்ற பெயருடன் வேலை செய்து வந்தார்கள். நிலவுடைமையாளர் ஒருவரிடம் வேலை செய்யும் பண்ணையாள் அவரிடம் மட்டும்தான் வேலை பார்க்க வேண்டும்; அவரது இடத்தில்தான் குடிசை போட்டுத் தங்கியிருக்க வேண்டும்; வேறொரு இடத்துக்குப் போகக் கூடாது.

அவர்களின் வாழ்க்கை நிலைமை மிகவும் கொடூரமாக இருந்தது. நிலப்பிரபுகள் வீட்டிலிருந்து அதிகாலை 3 மணிக்குக் கொம்பு ஊதியதும் பண்ணையடிமைகள் விழித்துக்கொண்டு நாலரை மணிக்கு ஏர்கட்ட மாட்டை அவிழ்க்க வேண்டும். அதிகாலையில் வயலில் இறங்கும் பண்ணையடிமைகள் காலை 11 மணிக்குக் கரைமேட்டுக்கு வந்து கஞ்சியைக் குடித்துவிட்டு மாடுகளைச் குளிப்பாட்டி வைக்கோல் வைக்க வேண்டும். பிறகு வயல் வேலைகளை இரவு 7 மணி, 8 மணி வரை செய்ய வேண்டும். வேலைக்கு வரும் ஆண்களும் பெண்களும் இருள் சூழ்ந்த பின்னரே வீடு திரும்ப முடியும்.

### சாட்டையடியும் சாணிப்பாலும்

உடல் நிலை சரியில்லை என்றாலோ சொல்லாமல் வேலைக்கு வராமல் இருந்துவிட்டாலோ, பண்ணையடிமைகள் கட்டி வைத்து சாட்டையால் அடிக்கப்படுவார்கள். ஐந்து பிரிகொண்ட சாட்டையில் பிரியை விலக்கிவிட்டு கூரான கூழாங்கல்லைச் சொருகி இருப்பார்கள். சாட்டையில் அடிக்கும்போது ரத்தம் கொட்டும். அந்தச் சாட்டை ஒவ்வொரு முறையும் உடலைப் பதம் பார்க்கும்போது பண்ணையடிமை துடித்துப்போவார்.

சில நிலவுடைமையாளர்கள் மாட்டுச் சாணத்தைக் கரைத்து மாட்டுக்கு மருந்து புகட்டும் மூங்கில் கொட்டத்தில் நிரப்பி சாணிப்பாலைப் பருகிடச் செய்வார்கள். ஒரு காலைத் தூக்கிக்கொண்டு சுடுமணலில் நெடுநேரம் நிற்கும் கொக்குப் பிடித்தல், கால்களுக்குக் கிட்டி போடுதல் போன்ற தண்டனைகளும் வழங்கப்பட்டது. இவை தவிர சில பண்ணையார்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப புதுவிதமான தண்டனைகளையும்கூட வழங்கினார்கள்.

இப்படி வாயிருந்தும் ஊமையாய் இருந்த மக்களிடம்தான் அத்தகைய கலக்குரலை எழுப்பினார் சீனிவாசராவ். விடிந்த பின்தான் ஏர்கட்ட வேண்டும், சூரியன் உதித்த பின்புதான் பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டும், குழந்தைக்குக் கரையேறித்தான் பால் கொடுக்க வேண்டும், உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும் என்றெல்லாம் சீனிவாசராவ் தலைமையில் ‘தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்’ முதலில் வைத்த கோரிக்கைகளைப் பார்த்தாலே நிலைமையை இன்னும் துல்லியமாக அறிந்துகொள்ள முடியும்.

### உண்டுறங்கி ஒன்றாய் வாழ்ந்த தலைவர்

கீழத்தஞ்சையில் நிலப்பிரபுக்களுக்கு எதிராக, பண்ணையடிமை முறைக்கு எதிராக அம்மக்களை விழிப்படையச் செய்து எதிர்த்து நிற்க வழிகாட்டிய முதல் தலைவர் பி.எஸ்.ஆர் என்று அழைக்கப்பட்ட பி. சீனிவாசராவ்தான். அவர் பிறந்தது பிராமணர் குலத்தில். ஆனால், பண்ணையடிமைகளாக இருந்த மக்களைப் போலவே அவர்கள் உண்ட நண்டு,

# பெருமை

## பெ.சண்முகம்

நத்தை, மீன்களையே அவரும் சாப்பிட்டார். அவர்கள் உறங்கிய கிழிந்த சாக்கில்தான் அவரும் படுத்துறங்கினார். அவர்கள் வாழ்ந்த குடிசையிலேயே தங்கி மக்களுடன் உயிரோட்டமான தொடர்பைக் கொண்டிருந்தார். அவர் இன்றளவும் தஞ்சை விவசாயத் தொழிலாளர்களின் மனங்களில் வாழ்ந்துகொண்டிருப்பதன் காரணமும் அதுவே. மக்களிடையே பணியாற்றும் ஒவ்வொரு ஊழியரும் அவரது வாழ்க்கையிலிருந்து கற்றறிய வேண்டிய மி க முக்கியமான பாடம் இது.

பி.எஸ்.ஆர்., 54 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். அதில் 19 ஆண்டுகளைக் கீழத்தஞ்சையில் விவசாய சங்கப் பணிகளுக்காகச் செலவிட்டார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தொடங்கியது அவரது அரசியல் வாழ்க்கை. 1943—ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலப் பிரிவு கேட்டுக்கொண்டதன் பேரில், கீழத்தஞ்சை மாவட்டத்தில் பணியாற்ற வந்தார். பண்ணையடிமைகளாக இருந்த தாழ்த்தப்பட்ட மக்களையும், குத்தகை விவசாயிகளாக இருந்த பிற்படுத்தப்பட்ட மக்களையும் நிலப்பிரபுக்களுக்கு எதிராக வர்க்க அடிப்படையில் ஒன்றுதிரட்டி வெற்றிகண்டார் பி.எஸ்.ஆர். சாதிய ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தையும், பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தையும் இணைத்தது இவரின் சாதனை. 1952—ல் நடந்த இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் தஞ்சை மாவட்டத்திலிருந்த 19 சட்டமன்றத் தொகுதிகளில் 6 தொகுதிகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வென்றது. அந்த வெற்றிக்கு பி.எஸ்.ஆர் கட்டமைத்த விவசாயச் சங்க இயக்கமும் ஒரு காரணம். இன்னும் கீழத்தஞ்சை மாவட்டத்தில் செங்கொடி இயக்கம் வலுவாக இருப்பதற்கும் அவர் போட்ட அடித்தளமே காரணம்.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக, முன்னேற்றத்துக்காக ஆத்மார்த்தமாகப் பாடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் பாராட்டும் பண்பு வளர வேண்டும். மாறாக, புறக்கணிக்கும் போக்கு இருக்கிறதோ என்று தோன்றுகிறது. பி.எஸ்.ஆர் போன்ற நல்ல முன்னுதாரணங்கள் வரலாறாக நம்முன் இருந்தபோதும், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்குத் தாழ்த்தப்பட்ட சாதியை சார்ந்த தலைவர்களால் மட்டும்தான்



பாடுபட முடியும், போராட முடியும் என்ற கருத்து பரப்பப்பட்டுவருகிறது. தாழ்த்தப்பட்டவரின் வலியை அவர்களால் மட்டுமே உணர்வுபூர்வமாக உணர முடியும் என்பவர்களும் இருக்கிறார்கள். இந்தக் கருத்தை 75 ஆண்டுகளுக்கு முன்பே உடைத்து நொறுக்கி, வலியை உணர்ந்தவராக மட்டுமல்லாமல் வலியிலிருந்து விடுபடுவதற்கான வழியையும் அம்மக்களுக்கு காட்டிய மகத்தான தலைவர் பி.சீனிவாசராவ்.



# ஆயுதம்

## அழிப்போம் ஆயுதங்களை

அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீனிடம் ஒரு பத்திரிகையாளர் கேட்டார்:

‘இரண்டாம் உலகப் போரில் முக்கிய ஆயுதமாக அணுகுண்டு இருந்தது. இனி மூன்றாம் உலகப் போர் மூண்டால் மனிதர்கள் எந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி போரிடுவார்கள்?’




இந்தக் கேள்வி காதுகளைத் துளைத்தவுடன், முகத்தின் தோலெல்லாம் சோகத்தில் சுருங்க, ஐன்ஸ்டீன் சொன்னார்:

‘போரிடுவதா? அதற்கு மனிதர்களே இருக்க மாட்டார்கள். தற்போதைய அணு ஆயுதங்களை ஆட்சியாளர்கள் பயன்படுத்தத் தொடங்கினால், மனிதர்கள், விலங்குகள் மட்டுமல்ல; புல் — பூண்டுகள் கூட அழிந்துவிடும். அதன்பின் சில லட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு ஏதாவது ஒருவகை மனித இனம் தோன்றினால், அவர்கள் கற்கால மனிதர்களைப் போன்று கல், வில், வேல், அம்புகளோடு போரிடலாம்‘. அய்ய்யோ!

ஐன்ஸ்டீனின் இந்த அச்சத்தை —இந்த அபாயத்தை அதிகரிக்கிறது வட கொரிய அதிபர் கிம் — ஜங் — வுன்னின் அறிவிப்பு!

‘ஜப்பானை கடலுக்குள் மூழ்கடிப்போம்; அமெரிக்காவை எரித்து சாம்பல் மேடாக்குவோம்‘ என்று அவர் அறிவித்திருப்பது உலகின் அடிவயிற்றைப் புரட்டி எடுத்துக்கொண்டிருக்கிறது.

ஐ.நா. சபையின் எதிர்ப்பையும், உலக நாடுகளின் கண்டனத்தையும் மீறி, வட கொரியா ஏற்கெனவே ஐந்து முறை அணுஆயுதப் பரிசோதனை மேற்கொண்டது.

அண்மையில், கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணைகளை ஒரே நாளில் அடுத்தடுத்து மூன்று முறை செலுத்திப் பரிசோதித்தது.

அமெரிக்கா, இன்றைய தேதிவரை உற்பத்தி செய்துவைத்துள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 1,750 முதல் 6,970 வரை என்கிறார்கள்.

70—களில் பாகிஸ்தானை ஊட்டி வளர்த்து இந்தியாவுக்கு எதிராக மோத விட்டதும் அமெரிக்காதான். இப்பொழுதும் பாகிஸ்தான் வசம் 120 முதல் 130 வரையிலான அணு ஆயுதங்கள் உள்ளன. தற்போது நேட்டோ ஒப்பந்தப்படி, அமெரிக்கா, பெல்ஜியத்துக்கு 10 —20 அணு ஆயுதங்களை வழங்கியிருக்கிறது.

ஜெர்மனிக்கு 20, துருக்கிக்கு 60 என அணு ஆயுதங்களைத் தானம் வழங்கியுள்ளது.

இத்தாலிக்கு 10 தான் கொடுத்துள்ளேன் என்று அமெரிக்கா சொன்னாலும், 50 அணு ஆயுதங்களை கொடுத்துள்ளது என்கின்றன அந்நாட்டுப் பத்திரிகைகள்.



# செய்யோம்!

பாலு மணிவண்ணன்

அதேபோல, நெதர்லாந்துக்கும், 10 முதல் 20 அணு ஆயுதங்களைக் கொடுத்து ‘கோயில் மாடு’ மாதிரி வளர்த்து வருகிறது அமெரிக்கா.

அமெரிக்காதான் இப்படியென்றால், ரஷியாவும் தற்போது அணு ஆயுதங்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பெலாரசுக்கு 81, கஜகிஸ்தானுக்கு 1,400, உக்ரைனுக்கு 50 என அணு ஆயுதங்களை ரஷியா அனுப்பி வைத்துள்ளது.

மற்றொரு கம்யூனிச நாடான சீனா மிகவும் கமுக்கமாக 260 அணு ஆயுதங்களை அடைகாத்து வருவதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு அணு ஆயுதங்கள் போதாதென்று பிரிட்டனும் 150 முதல் 215 வரையிலான அணு ஆயுதங்களை வைத்துள்ளதாம்!


பிரான்ஸும் 290 முதல் 300 வரையிலான அணு ஆயுதங்களை வைத்துள்ளது! பாகிஸ்தான் அணு விஞ்ஞானிகளின் ஒத்துழைப்புடன், ஈரானும் 100 அணு ஆயுதம் தயாரித்து வைத்திருப்பதாக உலக நாடுகள் கைகாட்டுகின்றன.


இப்படி, பூமியின் தலைக்கு மேலே, இன்றைய தேதி வரை தொங்கிக் கொண்டிருக்கும் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை 10,144.

இந்நிலையில், ‘காந்தி தேசமான’ நமது இந்தியாவும் 110 முதல் 120 அணு ஆயுதங்களை தயாரித்து வைத்துள்ளது!

சக நாடுகளுடன் நல்லிணக்கமும், அமைதியும் ஏற்படுத்தி நாட்டில் வளமும் வளர்ச்சியும் ஏற்படுத்துவதற்கு பதிலாக, பட்ஜெட்டில் பாதிப்பணத்தை ஆயுதங்கள் செய்வதற்கும், வாங்குவதற்குமே செலவழிக்கிறார்கள், பல ஆட்சியாளர்கள்!

உலக நாடுகளின் ஆட்சியாளர்கள், ஆயுதமே பலம் என்று நம்புகிறார்கள்!







அசோகரும், கூட ஆதிக்க எல்லையை அதிகரிக்கத்தானே கலிங்கத்தின் மீது போர் தொடுத்தார்! நம் சேர, சோழ, பாண்டியர்களும் ஆதிக்கத்தை விரிவுபடுத்தித் தானே, கங்கைகொண்டான், கடாரம் வென்றான் என்றெல்லாம் பெயர்பெற்றார்கள்!

ஹிட்லரும், முசோலினியும் இரண்டாம் உலகப் போருக்கு வித்திட்டது, தமது ஆட்சி எல்லையை அதிகரிக்கத்தானே! தற்போது சீனா, இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தை ஆக்கிரமிக்க முயல்வதும், தென் சீனக் கடலில் ஜப்பான், வியத்நாமை விழுங்க முயல்வதும் அதற்கு உதாரணங்கள் அல்லவா?

ஆட்சியாளர்களின் அதிகாரப் பசிக்கு உணவாக விளங்கும் ஆயுதங்களை அழித்து ஒழிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்!




ஆரம்ப காலத்தில் இலங்கைத் தமிழ் மக்கள், தம் உரிமைக்காக போராடியபோது அதை அடக்குவதற்காக, சிங்கள ஆட்சியாளர்கள் என்னவெல்லாம் செய்தார்கள்? மியான்மரில் ஆங்சாங் — சூ — கி, ஆட்சியாளர்களின் ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்தபோது என்ன நடந்தது?

இந்தோனேஷியாவில் சுகர்னோவை எதிர்த்த கம்யூனிஸ்ட்டுகள் எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள்? கிழக்கு பாகிஸ்தானில் முஜிபுர் ரஹ்மான் ஜனநாயக உரிமை கேட்டு எழுந்தபோது, பாகிஸ்தான் அதிபர் எவ்வளவு அடக்குமுறையை ஏவினார்?

மற்றும் சில ஆட்சியாளர்கள் தனது ஆட்சியின் எல்லையை அதிகரிக்கும் வகையில், அண்டை நாடுகளுடன் போர் தொடுப்பார்கள். கிறிஸ்துவுக்கு முன்பிருந்த ரோமானிய சாம்ராஜ்ய காலத்திலிருந்து அதுதானே நடக்கிறது! கிரேக்க சாம்ராஜ்யம் அப்படித்தானே விரிவடைந்தது!

மௌரியப் பேரரசு அப்படித்தானே உருவானது!

அழிவுக்கு வழிவகுக்கும் அணு ஆயுதங்களுக்கு எதிராக, ஏன் அனைத்து வகை ஆயுதங்களுக்கும் எதிராகவும் உலக மக்கள் அனைவரும் ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டும்!

இன்றைக்கு எழுப்பாவிடில், நாளைக்கு குரல் எழுப்ப, நாம் இருக்க மாட்டோம்!


லண்டனில்
பிரம்மாண்டமாய்
தாயக
மக்களின்
கண்ணாடி
தரமான
பல்பொருள்
அங்காடி
Indian Shopping Made Easy
English & Tropical Foods
அனைத்து
இலங்கை இந்திய
உணவு வகைகளும்
Veena's
77-79, High Street, Barkingside. Essex IG6 2AF - Tel: 0208 550 2700
www.veenas.com



சிறுகதை

# "உன் கண்ணில் நீர் வழிந்தால்"...

சாந்தி நாதன்

இரவு மணி ஒன்பதரை இருக்கும். வரவேற்பறையில் அமர்ந்து மடிகணினியில் ஸ்வேதாவும் சத்யனும் தங்கள் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்க, படுக்கை அறையில் சுலோச்சனா நிகில், ஸ்ரேயாவை தூங்க வைக்கும் முயற்சியில் இருந்தாள்.

"இரண்டு கதை சொல்லியாச்சு. இன்னும் உங்களுக்குத் தூக்கம் வரலையா? நாளைக்கு பள்ளிக்கூடம் போகவேண்டாமா?" கேட்கும் சுலோச்சனாவை ஏறிட்ட நிகில், "பாட்டி இன்னும் பத்து நாளில் நான், அப்பா, அம்மா, ஸ்ரேயா ஊருக்குப் போறோமே, நீங்க எப்படி தனியா இருப்பீங்க? ஏன் நீங்க எங்க கூட வரலை?" என்றான்.

'அங்க ரொம்ப குளிரா இருக்குமாம். வயசானவளுக்கு அங்கெல்லாம் ஒத்துக்காதாம். அதான்!"

"அப்போ, அங்க தாத்தா பாட்டியே இருக்கமாட்டாளா?" என்ற அண்ணனைத் தொடர்ந்து ஸ்ரேயா, "அங்க எங்க இரண்டு பேரையும் யார் பார்த்துப்பா? யார் சாதம் பண்ணுவா"... கவலை தணிக்கும் குரலில் கேட்கும் ஸ்ரேயாவை வருடியவளாய், "அம்மா உங்க கூட இருப்பா. அப்பா மட்டும் தான் ஆபீஸ் போவா. நான் தினமும் உங்களோட போனில் பேசுவேன். நீங்களும் எனக்கு இங்க சொல்ற மாதிரி உங்க பள்ளிக்கூடத்தைப் பத்தி, ஊரைப் பத்தி எல்லாம் சொல்லலாம். இப்ப சுவாமியை வேண்டிண்டு தூங்கணும்." என்றாள் சுலோச்சனா.

"பேசாம நாம இதே மாதிரி இங்கேயே சேர்ந்து இருக்கலாமில்லையா?" என்ற நிகிலை மறுத்து, "அப்படியெல்லாம் சொல்லக்கூடாது கண்ணா! அப்பாவுக்கு அங்க நல்ல வேலை கிடைச்சிருக்கு. அங்க உங்களையெல்லாம் நிறைய இடத்துக்குக் கூட்டிண்டு போவார். எனக்கு நீங்க அந்த ஊர் போட்டோ எல்லாம் அனுப்பலாம். இப்ப பாட்டி சொல்லித் தந்த மாதிரி கண்ணை மூடி சுவாமியை ஒரு நிமிடம் வேண்டிண்டு தூங்கணும் சரியா?" என்றாள் சுலோச்சனா.

சிறிது நேரத்தில் இருவரும் தூங்கிவிட, அறையை விட்டு வெளியே வந்த சுலோச்சனாவை புன்னகையுடன் எதிர் கொண்டான் சத்யன்.

"குழந்தைங்க வாய்விட்டு நினைக்கறதைச் சொல்லிடறாங்க. ஆனா எங்களுக்கு சொல்லவும் தெரியலை! உங்களை விட்டு இருக்கப் போற நாட்களை நினைச்சு கவலைப்படாமலும் இருக்க முடியலை" சத்யன் சொல்ல,

"ஆமாம்மா! கடந்த பத்து வருடமா இந்த வீடு, குழந்தைங்க எல்லாத்தையும் உங்ககிட்ட ஒப்படைச்சிட்டு நாங்க இரண்டு பேரும் கவலையே இல்லாம அலுவலகம், மாலைக் கல்லூரி பரிட்சைன்னு ஓராண்டு இருந்தோம். தாயன்பையே உணராத எங்க இரண்டு பேருக்கும் அம்மாவா... எங்க குழந்தைகளுக்கு நல்ல பாட்டியா இருந்து எவ்வளவு அழகா ஒன்னொன்னையும் நீங்க கவனிச்சு செஞ்சியிருக்கீங்க? நீங்க இல்லாட்டா இந்த மாதிரி நாங்க வாழ்க்கையில முன்னுக்கு வந்திருக்க முடியுமா? சொல்லுங்க" குரல் கம்ம பேசும் ஸ்வேதாவை கண்ணீர் மல்க ஏறிட்டாள் சுலோச்சனா.

“உங்க இரண்டு பேரையும் பார்த்து எம்மனசெல்லாம் எப்படி பூரிச்சுப் போறது தெரியுமா? முன்னே பின்னே தெரியாத உங்க வீட்டுக்கு அனாதையா வந்து நின்ன என்னை நம்பி, வீட்டில் இடம் கொடுத்து, தாய்க்கும் மேலே பரிவுகாட்டி ஆதரிச்ச உங்களையும் உங்க குழந்தைகளையும் நான் பாத்துக்கிட்டது ஒரு பெரிய விசயமா எனக்குத் தோணலை. இப்ப மட்டும் என்ன? வேலை கிடைத்து வெளிநாடு போவதற்கு முன்பு என்னை ஒரு நல்ல முதியோர் இல்லத்தில் விட்டுட்டு தானே போகப் போறீங்க? உங்க இரண்டு பேரோட உயர்ந்த மனசும் குழந்தைங்க காட்டற மாசுமருவில்லாத அன்பும், வாழ்க்கையில எனக்குக் கிடைச்ச பெரிய பாக்கியமா நான் நினைக்கிறேன்….” சற்றே நிறுத்தியவள், “சரி, ரொம்ப நேரமாறது. போய் தூங்குங்க.’ என்று தன் அறைக்குச் சென்றாள் சுலோச்சனா.



தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தவள் கண்களில் பழைய நிகழ்வுகள் நிழற்படமாய் விரிந்தன. மளிகைக் கடை கணக்கனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனது சொற்ப வருவாயில் சிக்கனமாகவும் கௌரவமாகவும் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தவள், திருமணமாகி சில வருடங்களுக்குப் பிறகு பிறந்த மகனைப் பார்த்து பூரித்துப் போனாள். ஒரே குழந்தை என்று பெற்றோர் இருவரும் அளவுக்கு மீறி செல்லம் கொடுத்து அவனது ஆசைகளுக்கெல்லாம் அடி பணிந்து நிறைவேற்றி வந்ததில், ஒரு தத்தாரியாக வளர்ந்தான் மகன் சந்துரு. பள்ளிக்கூடம் போகாமல், வேண்டாத தீயப்பழக்கங்களுக்கு ஆளான மகனைப் பற்றிய கவலையே சுலோச்சனாவின் கணவருக்கு எமனாகி, திடீரென்று அவர் இறந்துவிட, நிலை குலைந்தவள் வயிற்றுப் பிழைப்புக்காக, கூப்பிடும் வீடுகளுக்குச் சென்று சமையல் செய்வது, வடாம் போடுவது என்று பிழைப்புக்கு வழி தேடிக் கொண்டாள். கூடவே பள்ளிப் படிப்பையே முடிக்காத மகனுக்கு தெரிந்தவர்களிடம் கெஞ்சி ஒரு தொழிற்சாலையில் வேலை வாங்கித் தந்தாள். தன்னைக் காப்பாற்றுவான் மகன் என்ற நம்பிக்கை சிறிதும் இல்லாதவிடினும், அவன் பிழைப்பைப் பார்த்துக் கொண்டால் போதும் என்று நாட்களை ஓட்டி வந்தவளுக்கு அதிர்ச்சி தருவது போல் ஒருநாள் ஒரு பெண்ணோடு வந்து நின்றான் சந்துரு.

‘இவளை நான் கல்யாணம் பண்ணிண்டு கூட்டிண்டு வந்திருக்கேன். இனி இவ இங்கதான் இருப்பா’ அறிமுகமே சுலோச்சனாவிற்கும் மருமகள் அருணாவுக்கும் பரஸ்பர வெறுப்பை அறிவிப்பதாகத் தான் அமைந்தது. அவளது அளவுக்கு மீறிய தளுக்கும் குலுக்கும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களை முகம்சுளிக்க வைத்ததாலும், சந்துரு தேன் குடித்த நரியாய் அவளைச் சுற்றியே வந்தான்.

மகன் வீட்டில் இல்லாத சமயம் யார் யாரோ அருணாவைத் தேடி வருவதும், அவளும் அவர்களோடு குழைந்து நெளிவதும், அக்கம்பக்கத்தினர் வாய்க்கு அவலாகி சுலோச்சனாவிடமும் முறையிடத் துவங்கினார்கள்.

ஒருநாள் இந்த அவலம் சுலோச்சனாவின்

கண்களில் பட்டுவிட, மருமகளை தட்டிக் கேட்டதன் விளைவு, மாலை சந்துரு வீடு வந்ததும் பூகம்பமாக வெடித்தது. மனைவியின் நீலிக் கண்ணீரில் நெகிழ்ந்து, பெற்றவளை வாய்க்கு வந்தபடி திட்டியது மட்டுமல்ல, கை நீட்டி அடித்தும் விட்டான். அன்று இரவே இனி இவர்களோடு இருக்க வேண்டாம் என்று தீர்மானித்த சுலோச்சனா, தன் சொற்ப உடமைகளுடன் அந்த ஊரைவிட்டே பயணப்பட்டுவிட்டாள்.

அறியா வயதில்



பெற்றோர்களை ஒரு விபத்தில் பறிகொடுத்த சத்யனை உறவினர்கள் ஆதரிக்க மனமின்றி ஓர் அனாதை விடுதியில் சேர்த்துவிட்டு கைகழுவி விட்டனர். தொட்டில் குழந்தையாய் காப்பகத்தில் நுழைந்த ஸ்வேதாவும், அந்த இல்லத்தினால் பேர் சூட்டப்பட்டு, வளர்க்கப்பட்டாள். தங்களது ஒத்த நிலையே இருவரையும் நண்பர்களாக்கி சிறிது நாட்களில் காதலர்களாகவும் மாற்றியது. பள்ளிப் படிப்போடு வெளியேறி தன் சுய முயற்சியால் இருவரும் வேலை தேடிக்கொண்டு கூடவே தங்கள் கல்வித் தகுதியை மேம்படுத்தும் விதமாக மாலைக் கல்லூரிகளுக்குச் செல்லத் துவங்கினர்.

நண்பர்கள் உதவியால் திருமணம் செய்து கொண்டு இல்லத்தைத் துவங்கிய அவர்கள் வாழ்வில் வசந்தமாக ஸ்வேதா கருவுற்றாள். தொடர்ந்த அலுவலகப் பணிகள், படிப்பு, உடல் நலிவு என ஸ்வேதா துவண்டுவிட, முடிந்தவரை அவளுக்கு உதவி புரிந்தாலும் சத்தியனால் நிலைமையை சமாளிக்க இயலவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் தான் ஒருநாள், அவர்கள் வீட்டு வாயிலில், 'எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா' எனக் கேட்டுக் கொண்டு சுலோச்சனா வர, எங்களுக்கு உதவிக்கு ஆள் தேவைதான். ஆனால் இப்போதைக்கு சம்பளமெல்லாம் அதிகம் தர முடியாது அம்மா' என சத்யன் தயங்காமல் பதிலளித்தான்.

'எனக்கு பணமெல்லாம் வேண்டாம். இருவேளை உணவும் இருக்க இடமும் இருந்தால் போதும்' என்று சுலோச்சனா பதிலளிக்க, அன்றிலிருந்து அவர்களது தாய், தாதி, சமயத்தில் நல்ல அறிவுரை கூறும் ஆசான் என மாறி விட்டாள் சுலோச்சனா. 'ஈங்கிவளை யாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்' விதமாக குடும்பப் பொறுப்பை முழுமையாக ஏற்று அடுத்தடுத்து பிறந்த நிகில், ஸ்ரேயாவின் அன்புப் பாட்டியாக பொறுப்பாக செயல்பட்டு வந்தாள். அவளது ஒத்துழைப்பும் இருவரது விடாமுயற்சியும் ஒருங்கிணைந்து இன்று சத்யனும் அவன் விரும்பியபடியே அயல்நாட்டில் வேலை கிடைத்து இன்னும் இருவாரத்தில் அவர்கள் கிளம்பப் போகின்றனர்.

இரவு நீண்ட நேரத்துக்குப் பின் தூங்கியதன் விளைவாக காலை தாமதமாக எழுந்து வேலைகளை பரபரப்பாக செய்துகொண்டிருந்தாள் சுலோச்சனா.

"அம்மா, சாயங்காலம் நாங்க சீக்கிரம் வந்துடுவோம். நீங்க தயாராக இருங்க. உங்களுக்காக பார்த்திருக்கிற இல்லத்தைப் போய் பார்த்துட்டு உங்களுக்கு பிடிச்சிருக்குன்னு சொன்னாதான் நாங்க பணம் கட்டுவோம். சரியா?" சொல்லிக் கொண்டே இருவரும் கிளம்பினர்.

வேலைகளை முடித்துக் கொண்டு வழக்கம்போல் கோவிலுக்குக் கிளம்பினாள் சுலோச்சனா. கூடவே பாத்திரம் தேய்க்கும் அன்னம்மா பேசிக் கொண்டே வந்தாள். 'எப்படித்தான் அந்த குழந்தைங்க உன்னை விட்டுட்டு இருக்கப் போவுதோ தெரியலை. புருஷன் பெண்சாதி குழந்தைங்க எல்லாமே நல்ல மனசுக்காரங்க. ஏன் நீ மட்டும் என்னவாம்? நான் உள்ளே நுழையும் போது "காபி டிபன் சாப்பிட்டுட்டு வேலை பண்ணுன்னு எவ்வளவு அன்பா சொல்லுவே. நீங்க எல்லாம் கிளம்பிட்டா எனக்கும் கஷ்டம்தான்... சரி என் வீடு வந்துடுத்து நான் வரேன்' விடைபெற்றாள் அன்னம்மாள்.

சொன்ன மாதிரி மாலை சீக்கிரம் வீடு வந்த சத்யன் தம்பதியரை, "அப்பா, பாட்டி ரொம்ப வருத்தமா இருக்காங்.க எங்க கூட கொஞ்சமா தான் பேசினாங்க" கிசுகிசுக்கும் குரலில் நிகில் கூற,

தலையாட்டி அவனை ஆமோதித்தாள் ஸ்ரேயா.

"அம்மா இன்னும் நீங்க ரெடியாகலையா? உடம்பு ஏதும் சரியில்லையா?" பதறிக் கேட்கும் சத்யனைப் பார்த்து, "அதெல்லாம் ஒண்ணுமில்லைப்பா. உங்க இரண்டு பேருக்கும் குடிக்க என்ன வேணும்? டீயா, காப்பியா, சொல்லுங்க. அதுக்கப்புறம் நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்...." சுலோச்சனா முடிப்பதற்குள், "அம்மா, நீங்க உட்காருங்க. நான் போய் நம்ம எல்லாருக்கும் ஜூஸ் கொண்டு வரேன்"



ஸ்வேதா சொன்ன மாதிரியே ஜூஸ் நிரம்பிய கோப்பைகளுடன் வந்து குழந்தைகளுக்கும் தங்கள் மூவருக்கும் மேசையில் வைத்தாள்.

ஜூஸ் குடித்த பின் அங்கு நிலவிய மௌனத்தை சுலோச்சனாதான் கலைத்தாள். "உங்க வீட்டுக்கு நான் வேலைக்கு வரும்போது நான் யாருமில்லாத அனாதைன்னு சொன்னேன் இல்லையா? அது நிஜமல்ல. எனக்கு ஒரு பையன் இருக்கான்...." தொடர்ந்து தன் கடந்த காலக் கதையைக் கூற இருவரும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

"இவ்வளவு நாளைக்கு அப்புறம் நான் ஏன் இதை இப்ப சொல்றேன்னு உங்களுக்குத் தோணும். இன்னைக்கு கோயில் வாசல்ல என் பையனை ஒரு பிச்சைகாரனா, கண்ணில்லாதவனா நான் பார்த்த பாவத்தை சொல்லித்தானே ஆகணும்? நான் பயந்தமாதிரியே அவன் பெண்டாட்டி வேற யாரோடையோ போயிட்டா. விடாக்குடியும், போதை மாத்திரைகளும் சாப்பிட்டு இவனுக்கு வேலையும், கண்பார்வையும் கொஞ்சம் கொஞ்சமா போயிடுத்து, எப்படியோ திருட்டு ரயில் ஏறி இந்த ஊருக்கு வந்திருக்கான், இன்னிக்கு நம்ம கோயில்ல அன்னதானம்னு யாரோ சொல்லி இவனும் அங்க வந்திருக்கான், நடந்த தள்ளுமுள்ளுவில் இவனை யாரோ கிழே தள்ளிவிட 'அம்மா,ன்னு கூவிண்டு கிழே விழும்போது, கோயிலுக்குள் நான் நுழைய, இவனைப் பார்த்து பதறிப் போயிட்டேன். மெதுவா அவனைக் கூட்டிண்டு வந்து நான் யார்னு சொன்னதும் கதறிண்டே நடந்ததையெல்லாம் சொன்னான். 'பெத்த வயிறு' இல்லையா? அன்னம்மா வீட்டில் அவனை உட்கார்த்தி வச்சிட்டு இங்கேயிருந்து சாப்பாட்டை எடுத்துண்டு போய் கொடுத்துட்டு வந்தேன். அதனால நீங்க சொன்னமாதிரி என்னால சாயங்காலம் வேலையெல்லாம் முடிக்க முடியலை..." சுலோச்சனா கம்மிய குரலில் சொல்லி முடித்தாள்.

"ஏதோ கதையில் வர மாதிரி தான் உங்க வாழ்க்கை சம்பவங்களும் இருக்கு. இப்பவும் என்னைக் கேட்டா நீங்க உங்க மகனோடவே அந்த இல்லத்தில் சேர்ந்துடலாம்னு தான் தோணுது. எங்களுக்கும் உங்களை தனியா விட்டுட்டுப் போறோமேங்கற குறை இருக்காது இல்லையா? நாளைக்குப் போய் இல்லத்தைப் பார்த்துட்டு ஆகவேண்டிய காரியங்களைப் பார்க்கலாம். இப்ப போய் உங்க மகனை இங்க கூட்டிண்டு வரலாம். கிளம்புங்க" என்றான் சத்யன்.

"இல்லையப்பா. அது சரிவராது. அதுக்கு பதிலா எனக்கு கொஞ்சம் பணம் கொடுத்தா அன்னம்மா வீட்டுப் பக்கத்தில் ஒரு சின்ன போர்ஷன் காலியா இருக்காம். அதுக்கு அட்வான்ஸ் கொடுத்துட்டு எம்மகனோட அங்க இருந்துக்கிறேன். நீங்க ஊருக்குப் போறவரை வேலையும் செஞ்சி குடுத்துடுவேன். கொஞ்சம் தட்டுமுட்டுச் சாமான்கள் இங்கிருந்து எடுத்துண்டு போயி, எங்க இரண்டு பேருக்கும் சாப்பாடு பண்றது ஒண்ணும்

சிரமமில்லை”

“எதுக்கு நீங்க இப்படியெல்லாம் கஷ்டம் படணும்? இதுவரைக்கும் நீங்க எங்ககிட்ட பெரிசா



சம்பளம்னு ஒண்ணும் வாங்கிக்கலை. அதனால உங்க இரண்டு பேருக்கும் இல்லத்துக்குப் பணம் கற்றது ஒண்ணும் எனக்கு கஷ்டமில்லை. அங்க போய் கொஞ்சம் காலூன்றிய பிறகு ஸ்வேதாவும் ஏதாவது வேலைக்குப் போவா. அதனால தொடர்ந்து உங்களுக்கு பணம் அனுப்புறதுல எந்த சிரமமும் இருக்காது… ஸ்வேதா, அம்மாவுக்கு நீயும் சொல்லேன்” என்றான் சத்யன்.

“ஆமாம்மா. அவர் சொல்றதுதான் நல்ல பிளான். நாளைக்குப் போய்ப் பார்த்துட்டு வந்துடலாம். இப்ப போய் உங்க மகனைக் கூட்டிண்டு வரலாம். கிளம்புங்க” என்றாள்.

“அவனுக்கு அன்னம்மாவிடம் பணம் கொடுத்து ராத்திரிக்கு ஏதாவது வாங்கித் தர சொல்லியிருக்கேன். அவ புருஷன் அவனைப் பார்த்துப்பான். நாளைக் காலையில் நான் போய் அந்த வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்தா போதும். அப்புறம் சிறுகச்சிறுக சந்துருவை அந்த சூழ்நிலைக்கு பழக்கிடலாம். நானும் சமையல் வேலைக்குப் போயோ, இல்லை வீட்டில் சமைச்சு கொடுத்தோ எங்க இரண்டுபேர் வயிற்றுப் பாட்டுக்கு வழிபார்த்துடுவேன்….”

“இன்னும் எதுக்காக இந்த வயசில நீங்க உழைக்கணும்? நான் இதுக்கு ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன்” கோபமான குரலில் சத்யன் கூறினான்.

“இத பாருப்பா. பெறாத பிள்ளையான நீ எப்படியெல்லாம் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்திருக்கேன்னு கண்கூடப் பார்த்தவ நான். அதனால பெத்த பிள்ளைக்கும் சொகுசு வாழ்க்கையை பழக்காம கண்ணில்லாவிடினும் கையை வைச்சுப் பிழைக்கற மாதிரி ஏதாவது வழி தேடணும்னு எனக்குத் தோணுது. முடிஞ்சா ஏதாவது வைத்தியம் பார்த்து அவனுக்கு பார்வை கிடைக்குமான்னு பார்க்கணும். அதுவரைக்கும் என்னால அவனை உழைச்சுக் காப்பாத்த முடியும். நீங்க அதுக்கு எனக்கு தேவையானதை செஞ்சி தருவீங்கன்னு நம்பறேன்” உறுதியான குரலில் சுலோச்சனா பதில் கூற, சத்யன், ஸ்வேதா ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மௌனம் காத்தனர்.

“நாளையிலிருந்து நான் ஆபீஸ் போக வேண்டாம். குழந்தைகளும் இந்த வாரத்துக்குப் பிறகு ஸ்கூல் போகலை. அதனால நீங்க இங்கேயே சமைச்சு உங்களுக்கும் மகனுக்கும் எடுத்துண்டு போயிருங்க. வீட்டுக்குத் தேவையான பாத்திரம் பண்டங்களும் இங்கிருந்தே நீங்க எடுத்துக்கலாம். இன்னும் எங்களால என்ன உதவி எல்லாம் தேவையோ கேளுங்க. நாங்களும் உங்க குழந்தைங்கதான்’ என்றாள் ஸ்வேதா.

“ஆமாம்மா நானே சந்துருவை ஊருக்குப் போறதுக்கு முன்னாடி கண் டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போறேன். இந்த மாதிரி ஒரு அன்பான அம்மாவைப் பெற்ற அவர் ரொம்ப அதிர்ஷ்டம் செஞ்சிருக்கணும்! இனிமேலாவது உங்க அருமை தெரிஞ்சு அவர் நடத்துக்க ஆண்டவன் கருணை காட்டுவார்னு நினைக்கிறேன்! என்றான் சத்யன்.

அன்பே வடிவான அவர்களைக் கடவுளைப் போல் பார்த்தாள் சுலோச்சனா.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

*editor@ithamil.com*



# வாசிப்பில்

## வாழ்வை வளமாக்கும் வாசிப்பு

அன்றாட வாழ்வில் உடல்நலம் காக்க இன்றியமையாத பயிற்சியாக நடை இருப்பதுபோல் உளநலம் பேண உதவும் ஒரு பயிற்சியாக நாம் வைத்துக்கொள்ள வேண்டியது, வாசிப்பு.

'பணிபெறுதலுக்கான அளவோடு முடிந்துவிடுகிறது, படிப்பு' என்பது மூடத்தனம். சுவாசிக்கும் காலம் வரை சுகமாய் வாழ, வாசிப்பே உயர்துணை; அதுவே உயிர்த்துணையும்.

அதுபோல், மாலையில் இயலாவிடினும் இரவில்! 'உணவு முடித்தபின் நல்லுறக்கம் வாய்க்க மெல்லிய நடை தேவை' என்று சொல்கிறார்கள். அது உடலுக்கு; அதுபோல் மனதுக்கும் மெல்லிய வாசிப்பு இதந்தரும்.

பலப்பல எண்ணங்கள், ஏக்கங்கள் எல்லாம் வந்து அழுத்த, நல்லுறக்கமின்றித் தவிக்கும் கணங்களில், மெல்லிய தென்றல் போன்ற உரைநடை நூல்கள் பெரிதும் உதவிடும். தனிமைக்குத் துணையாகும்




காலையும் மாலையும் கைகள் வீசிக் காலார நடப்பது உடலுக்கு எவ்வளவு சுகமோ, அவ்வளவு சுகம், மனதுக்குப் பிடித்த ஒரு புத்தகத்தை எடுத்து வைத்து மனங்குளிர வாசிப்பது.

அருளுணர்வை, அல்லது தன்னம்பிக்கை தரும் மந்திரம் போன்ற நல்ல தொடர்களைத் தரும் உயர்ந்த புத்தகங்களில் இருந்து நெஞ்சம் ஏற்றுக் கொள்ளும் அளவுக்குக் கொஞ்சமாய்ப் படித்தால் கூடப் போதும்.

வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகிறதோ இல்லையோ, வாய் விட்டு வாசித்தால் மனத்தைப் பீடித்திருக்கும் மௌன அழுத்தங்கள் தானே விடைபெற்றுப்போகும்.

மௌனவாசிப்போ, மகத்தான சுகானுபவம். எந்தவொரு நூலும் தன்னலங் கருதா உன்னதத்தோழன்.

எத்தனை முறை எடுத்துப் படித்தாலும் முதல்முறை போலவே, ஈர்க்கும் புத்தகம், இனிய காதல்இணை; தடுமாறும் கணங்களில் தடம் மாறிவிடாமல் தாங்கி நெறிப்படுத்தும் நூல், நல்லாசான்; எந்த நிலையிலும் இன்னுயிர்க்கு, இன்னல் வாராமல் காப்பது தெய்வநூல்!

இப்படி எல்லா நிலைகளிலும் மனிதர்கட்குக் கூட வரும் ஞானப் பெட்டகங்கள் நூல்கள்; நெறியின் புறங்கொண்டு நிறுத்தி மனிதமனங்களை மாசுபடுத்தும் தீயசக்திகளை ஒட்டவிடாமல் துரத்துகின்ற தூய தேவதைகள்!

எழுதியவரையும், எடுத்து வாசிப்பவரையும்



# வசிப்பு


கிருங்கை சேதுபதி

நேருற நிறுத்திச் சீருற ஆக்குவது வாசிப்பு. வாசிப்பு என்பது, வாழ்வை மேன்மையாக்கும் தவம்.

வரிகளாய் விரியும் வாசகங்களின் உள்ளே, வாழ்க்கை அனுபவங்கள் பதிவான அழகை ஒன்றி வாசிப்பது, ஒருவகை தியானம்; நின்று சிந்திப்பது ஆழ்ந்த தியானம்; அனுபவத்தில் செயல்படுத்தும்போது, அது யோகம். இந்நிலை தொடர்ந்து வரவர, தத்தம் நிலையில், தொலைநோக்குத் திறனாகிய தீர்க்கதரிசனப் பார்வை புலப்படும்.

நாட்பட நாட்படக் கூர்பெறும் இத்திறத்தினால், தனிநபர்க்கும், சமுதாயத்திற்கும் நன்மையே பெருகும். அத்தகைய தனிநபர்களே, சமுதாயம் போற்றும் சான்றோர்களாக என்றென்றும் வரலாற்றில் வாழ்கிறார்கள்.

வாசல் இல்லாத வீடும் வாசிப்பு இல்லாத வாழ்நாளும் பயனற்றவை என்பதை அனுபவித்தவர்கள் உணர்வார்கள். அத்தகு அனுபவம் வாய்க்கப் பெறாதவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் பல்வேறு அல்லல்களுக்கு ஆட்பட்டுத் தவிப்பதைக் காண்கிறோம்.




நலம் வேண்டி மருத்துவர்களை நாடுகிறவர்களின் உடற்கூறுகள்தாம் பெரும்பாலும் பரிசோதனைகளுக்கு ஆட்படுகின்றனவேயன்றி, உள்ளம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதேயில்லை. பல சமயங்களில் இனம்புரியாத மன அழுத்தங்களே, உடல்நலம் கெடுக்கும் காரணிகளாகவும் ஆகிவிடுகின்றன.

சின்னச் சின்ன உடல்சார் சிக்கல்கள்கூட, பென்னம் பெரிய மனக்கவலைகளை வளர்த்து நம்மை நோயாளிகளாக்கி விடக்கூடியவை. அவற்றில் இருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ள உதவும் கவசங்கள், புத்தகங்கள்.

பிறர் அனுபவங்களையும் தன்னனுபவமாக்கித் தரக்கூடியது வாசிப்பு. பயன்படுத்தாத கத்தி, துருப்பிடிப்பதுபோலத்தான் பயன்பாடில்லாத புத்தியும். வரம்பு மீறிப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், கருவிகள் பழுதாகிவிடுகின்றன; அவைபோல், பயன்படுத்தாதவையும்.

அந்த வரிசையில் உடல் உறுப்புகளும் அடங்கும்; அதில், உள்ளத்திற்கும் இடம் உண்டு.

உள்ளும் தொழில் புரிவதால் அது 'உள்ளம்'. 'உள்ளத்தனையது உயர்வு' என்கிறது வள்ளுவம்; அதற்கு முன்னொட்டாய் 'மாந்தர்க்கு' என்று தனித்தும் உணர்த்திவிடுகிறது.

இன்னும் நுட்பமாய் விளங்கிக் கொள்ள, நம்மை நீர்நிலையின் முன் கொண்டுபோய் நிறுத்துகிறார் வள்ளுவர். நீரின் மட்டமும், மேல் மலர்ந்த மலர்களின் உயரமும் சமம். கரை உயர்ந்த நீர்நிலையில் கால் பங்குதான் நீர்.

ஒருநாள் இரவில் பெய்த பெருமழையில் கரை தொட்டு நிறைகிறது குளம். அதனளவு உயர்ந்து சிரிக்கின்றன, அல்லியும், தாமரையும். 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்' என்று விளக்கிக் காட்டுகிறார் வள்ளுவர்.

மலர்களைக் கைகாட்டிய வள்ளுவர் மானுடத்தை நோக்கி, மௌனமாக வினாத் தொடுக்கிறார்: 'உடல் உயரம் வளர்ந்த அளவிற்கேனும் உள்ளம் உயரவேண்டாமா?'

எத்தனை பெரிய பள்ளத்தில் அழுத்தப்பட்டுக் கிடந்தாலும் வெள்ளத்தின் பெருக்கைப்போல் மேவிவரும் கவிப் பெருக்கையும், கலைப்பெருக்கையும் உள்வாங்கிக் கொண்டால் உயரலாம் என்பதுதான் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மை.

இங்கே இன்னொரு உண்மையையும் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. தத்தம் துறைசார்ந்த அறிவிலும் சிந்தனையிலும் மட்டுமே, ஒருவர் உயர்ந்திருந்தால் போதாது. பல்துறைசார் அறிவும் பக்கபலமாக, தத்தம் துறைசார் அறிவும் மிக்கு உயர்வதே வளர்ச்சி.

இன்றைக்கு அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த ஊடகங்கள் அசுர வளர்ச்சி பெற்றிருக்கின்றன. வாசிப்பில் இருந்து, படிப்பிற்கும், படிப்பில் இருந்து பெறும் படிப்பினை கற்றலுக்கும் உள்ளத்தை உயர்த்திக் கொண்டு வளர்வது ஒவ்வொரு மனிதர்க்கும் உரிய கடமை!

கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பார் என் தந்தையின் தோழர் ஒருவர். அவர் பண்டிதர் அல்லர்; ஆனால், எந்தப் பண்டிதரோடும் தர்க்கம் பண்ணக்கூடிய அளவிற்குக் கம்பனைக் கற்றவர்; வள்ளுவரை உள்வாங்கியவர்; காளமேகம்போல் அவ்வப்போது கவிபாடவும் வல்லவர்; கிடைத்தவற்றைப்படித்துப் பெற்றவற்றில் இருந்து தன்னறிவைத் தமிழறிவாக வளர்த்துக் கொண்டவர்.

அவ்வாறு தான் கண்டதையெல்லாம் கற்றுக் கவிபாடினார் கண்ணதாசன். 'கண்டதைச் சொல்லுகிறேன் — உங்கள் கதையைச் சொல்லுகிறேன்' என்று பாடிக் கதையும் எழுதிநிலைநின்றார் ஜெயகாந்தன்.

இவர்கள் எல்லாம் பள்ளிக் கல்விகூட முழுமையாக முடிக்காதவர்கள். ஆனால் இவர்களது எழுத்துக்கள் இல்லாமல் பள்ளி தொடங்கி, பல்கலைக்கழகங்கள் வரையிலான எந்தப் பாடப்புத்தகங்களும் உருவாவதில்லை.

'கண்டது கற்றுப் பண்டிதன் ஆகலாம்' என்று படித்து அவ்வாறே பழகுகிற நாம், கற்கிறபோது இன்னும் வளரத்தொடங்குகிறோம்.

படிப்பது வேறு; கற்பது வேறு. உதட்டளவில் நிகழும் வாசிப்பு மனதில் படியும்படி தொடர்வது படிப்பு; மனதில் படியும்படியாகப் படிக்கும் பழக்கம் வழக்கமாகி, அதன்வழி, வாழ்க்கையின் அங்கமாக வளர்வது கற்றல்; அத்தகையதே கல்வி.

இப்போது 'கண்டது கற்கப் பண்டிதனாகலாம்' என்கிற பழமொழி புதுமொழியாகத் தெரிகிறது. 'கண்ணில் கண்டது (எல்லாம் எடுத்துக்) கற்கிற ஒருவன் பண்டிதன் ஆகலாம்' என்பது பழமொழி தரும் கருத்து.

'கண்டு அது கற்கப் பண்டிதன் ஆகலாம்' என்கிறபோது அது புதுமொழி. அதாவது, கண்ணில் காணக் கிடைக்கிற அனைத்தையும் கண்டு புத்தக எல்லைகள் கடந்த எந்த உண்மையையும் எந்த முறையிலும் கண்டு — அதில் தனக்கு எது தேவை எனத் தேடிக் கண்டு, அது கற்றால் பண்டிதன்; பண்டிதன் என்றால், வெறும்பண்டிதத்தனத்தை மட்டும் அது குறிக்காது; தத்தம் துறையில் தகுதிசால் அறிஞர் என்பதையும் பெற்றுத்தரும் ஒரு சொல். 'கற்றிலன் ஆயினும் கேட்க' என்றும் கட்டளையிடுகிறார் வள்ளுவர்.

'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு'
என்றும் சாடுகிறார்.

உலக அனுபவங்களை யெல்லாம் உள்வாங்கி, உலகம் உய்ய உயர்வழி காட்டிய வள்ளுவரின் வாசிப்புப் பயிற்சி, கற்றல் தவமாகிக் கற்பிக்கும் ஆசிரியர்கட்கெல்லாம் மேலான பேராசானாக உயர்த்தியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மருத்துவர், பொறியாளர், பொருளியல் வல்லுநர், அரசியலாளர், அறிவியலாளர், ஆன்மிக, தத்துவப் பேராளர், இவர்களோடு எழுதப் படிக்கத் தெரிந்த, தெரியாத எல்லார்க்கும் 'எழுத்தறிவிக்கும் இறைவனாக' நிலை நிறுத்தியிருக்கிறதே!

அந்தவழி வந்து தத்தம் சொந்தத்துறைகளில் கால்பதித்துச் சரித்திரம் படைத்தவர்கள் எல்லாரும் வள்ளுவரின் சந்ததியர்தாமே

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள்!!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# 13. சத்ருக்னன் வரலாறு

பாபாக்கினி நதிக்கரையில் பல்லவ சைனியத்தின் பாசறையில் ரிஷபக்கொடி கம்பீரமாகப் பறந்த கூடாரத்தின் உள்ளே மகேந்திர சக்கரவர்த்தி வீற்றிருந்தார். அவருக்கெதிரே சக்கரவர்த்தியின் அந்தரங்க ஒற்றனாகிய சத்ருக்னன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் வெகு தூரம் பிரயாணம் செய்து வந்தவனாகக் காணப்பட்டான். உடம்பெல்லாம் சொட்டச் சொட்ட வியர்த்திருந்தது. எட்டு மாதத்திற்கு முன்னால் அவனைப் பார்த்ததற்கு இப்போது அடையாளம் கூடக் கண்டுபிடிக்க முடியாதபடி உருவம் மாறிப்போயிருந்தது.



சக்கரவர்த்தி, சத்ருக்னனை உற்றுப் பார்த்துவிட்டு, "யார் சத்ருக்னனா?" என்று கேட்டார்.

"அடியேன்தான், பல்லவேந்திரா!"

"ரொம்பவும் உருவம் மாறிப் போயிருக்கிறாய்."

"ஆமாம், பிரபு! சக்கரவர்த்தியின் சேவையில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாலும் என் தேகம் புஷ்டியடைகிறது!"

"இல்லை; மெலிந்திருக்கிறாய் என்று சொன்னேன். எட்டு மாதத்துக்கு முன்பு உன்னிடம் ஏதோ முக்கியமான காரியத்தை ஒப்படைத்ததாக ஞாபகம். என்ன காரியம் என்று நினைவிருக்கிறதா?" என்று மகேந்திரர் கேட்டார்.

சத்ருக்னன், "நன்றாக நினைவிருக்கிறது, பிரபு! வேறு நினைவே எனக்குக் கிடையாது!" என்றான்.

"மறந்தது நான்தான்; கொஞ்சம் ஞாபகப்படுத்து, பார்க்கலாம்!" என்றார் சக்கரவர்த்தி.

"பிக்ஷுவைப் பின் தொடரச் சொன்னீர்கள்."

"ஓஹோ! அப்புறம்?"

"ஆயனரைக் கவனிப்பதற்கு ஆள் போடச் சொன்னீர்கள்."

"அவ்வளவுதானா?"

"இன்னும் ஒரு கடினமான வேலையும் கொடுத்தீர்கள், பிரபு! குமார சக்கரவர்த்தியின் போக்குவரவுகளைக் கவனித்து வரும்படி கட்டளையிட்டீர்கள்!"

"ஆம்! ஆம்! ஞாபகத்துக்கு வருகிறது"

"ஏதேனும் முக்கியமான தகவல் கிடைத்தால், நம்பிக்கையான ஆள் மூலம் செய்தி அனுப்பச் சொன்னீர்கள். மிக முக்கியமான செய்தியாயிருந்தால் என்னையே நேரில் வரச் சொன்னீர்கள்."

"அப்படியானால், மிக முக்கியமான செய்தி இப்போது கொண்டு வந்திருக்கிறாய் போலிருக்கிறது."

"ஆம், பல்லவேந்திரா! வேறு யாரிடமும் அனுப்ப முடியாத செய்தி; அதனால்தான் நானே வந்தேன்."




“ஒவ்வொன்றாகச் சொல், பார்க்கலாம்!”

சத்ருக்னன் நாகநந்தியைத் தான் பின்தொடர்ந்தது பற்றி முதலில் சொன்னான். அந்த வரலாறு பின் வருமாறு:

நாகநந்தி பரஞ்சோதியிடம் ஓலை கொடுத்து அவனை நாகார்ஜுன மலைக்குப் போகும்படி அனுப்பிய பிற்பாடு, தெற்கே கிளம்பிப் போனார். சத்ருக்னனும் அவரைப் பின் தொடர்ந்து போனான். கெடில நதிக்கரையில் அடர்ந்த காடும் சிறிய குன்றுகளும் சூழ்ந்த ஓர் இடத்தில் கட்டியிருந்த புத்த விஹாரத்தை அடைந்து சில தினங்கள் தங்கினார். அங்கே இருந்த புத்த பிக்ஷுக்கள் சிலருக்கு ஏதேதோ செய்தி சொல்லி நாலாபுறமும் அனுப்பினார். அவர்களில் ஒருவர் உறையூருக்கும் இன்னொருவர் கங்கராஜ்யத்தின் தலைநகரான தலைக்காட்டுக்கும் சென்றதாகத் தெரிந்தது.

பிறகு, நாகநந்தி மறுபடியும் தெற்கு நோக்கிப் பிரயாணமானார். கொள்ளிடத்தையும் காவேரியையும் கடந்து நாகப்பட்டினம் சென்றார். அங்கேயிருந்து மதுரைக்குப் பிரயாணமானார். மதுரைக்கு நாகநந்தியும் சத்ருக்னனும் போன சமயம் மாறவர்ம பாண்டியன் கடும் நோய்வாய்ப்பட்டு ‘இன்றைக்கோ நாளைக்கோ’ என்றிருந்தான். அடுத்தபடி பட்டத்துக்கு வரவேண்டிய இளம் பாண்டியனுடைய கட்டளையினால் அயலூர்க்காரர் எல்லாரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

நாகநந்தியும் சத்ருக்னனும் ஒரே சிறையில் இருக்கும்படி நேர்ந்தது. அங்கே பிக்ஷுவுடன் சிநேகம் செய்து கொண்டான். இவர்கள் சிறையில் இருக்கும் போதே மாறவர்மன் காலமாகி



சடையவர்மன் சிம்மாசனம் ஏறினான். பின்னர் இவர்களுக்கு விடுதலை கிடைத்தது. நாகநந்தி புதிய பாண்டியனைச் சந்தித்தார். அவர்களுக்குள் பல தினங்கள் பேச்சுவார்த்தை நடந்தது. இதற்கிடையில் மாமல்லருக்குப் பெண் கொடுக்கும் விஷயமாகக் காஞ்சிக்குப் போன தூதர்கள் திரும்பி வந்தார்கள். மறுபடியும் சில நாள் நாகநந்திக்கும் சடையவர்மனுக்கும் சம்பாஷணை நடந்த



பிறகு, பாண்டியன் நாடெங்கும் படை திரட்டும்படி கட்டளை பிறப்பித்தான்.

நாகநந்தி பிறகு மதுரையிலிருந்து கிளம்பி வடக்கு நோக்கிப்பிரயாணமானார்.சத்ருக்னனும்அவரோடு புறப்பட்டான். வழியெல்லாம் புத்த பிக்ஷு பெரும் சிந்தனையில் ஆழ்ந்தவராய்க் காணப்பட்டார். காவேரியையும் கொள்ளிடத்தையும் தாண்டி அவர்கள் கெடில நதிக்கரையில் இருந்த புத்த விஹாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள்ளாகச் சத்ருக்னனுக்குப் புத்த பிக்ஷு தன்னை ஒற்றன் என்று தெரிந்து கொண்டிருக்கிறார் என்ற சந்தேகம் உண்டாகியிருந்தது. அச்சமயம் அந்தப் புத்த விஹாரத்தில் ஏற்கெனவே காஞ்சி இராஜ விஹாரத்தில் இருந்த இளம் பிக்ஷு இருந்தான். அந்த இளம் பிக்ஷு சத்ருக்னனை வெறித்து வெறித்துப் பார்த்ததிலிருந்து சத்ருக்னனுடைய சந்தேகம் உறுதிப்பட்டது. எனவே, அன்று இளம் பிக்ஷு சத்ருக்னனுக்கு அளித்த உணவை அவன் உடனே சாப்பிடாமல் நதியின் வெள்ளத்தில் கொஞ்சம் போட்டுப் பார்த்தான். அதைச் சாப்பிட்ட மீன்கள் உடனே நீலநிறமாக மாறிச் செத்துத் தண்ணீரில் மிதந்ததைக் கண்டான். அன்று இரவு நாகநந்திக்கும் இளம் பிக்ஷுவுக்கும் தெரியாதபடி அந்தப் புத்த விஹாரத்தையும் அதை அடுத்திருந்த குன்றுகளையும் சுற்றிப் பார்த்தான்.

குன்றுகளில் குடைந்திருந்த இரகசியக் குகைகளுக்குள் பலவகைப் போர்க் கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். குன்றுகளைச் சுற்றி வந்தபோது ஓர் இடத்தில் கேட்டவுடனே இருதயம் நின்று போகும்படியான அவ்வளவு பயங்கரமான சீறல் சத்தத்தைக் கேட்டான். ஆயிரம் நாக சர்ப்பங்கள் சீறுவது போன்ற அந்தச் சத்தம் எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க அவன் ஆனமட்டும் முயன்றும் முடியவில்லை.

மறுநாள் உதயத்தில் புத்த பிக்ஷு இந்த இரகசிய புத்த விஹாரத்திலிருந்து புறப்பட்டு, சமுத்திரம்போல் அலைமோதிக் கொண்டிருந்த திருப்பாற்கடல் என்னும் ஏரிக்கரை வழியாக வடக்கு நோக்கிச் சென்றார். அவர் அறியாதபடி அவரைப் பின் தொடர்ந்து சத்ருக்னனும் சென்றான். கடைசியில் ஆயனரின் அரண்ய வீட்டை நாகநந்தி அடிகள் அடைந்தார்.

தான் இல்லாதபோது ஆயனரைக் கவனித்துக் கொள்ளுவதற்காகக் குண்டோ தரன் என்பவனைச் சத்ருக்னன் விட்டுவிட்டுப் போயிருந்தான். அவன் ஆயனரிடம் சிற்பக் கலையும் சித்திரக் கலையும் கற்கும் சீடனாக அமர்ந்து ஆயனர் வீட்டிலே இருந்து வந்தான். குண்டோ ரதன் விசேஷமாகச் செய்தி ஒன்றும் சொல்லவில்லை. சாரதி கண்ணபிரானும் அவன் மனைவி கமலியும் சில முறை அங்கு வந்துவிட்டுப் போனதாக மட்டும் தெரிவித்தான்.

காஞ்சியில்,நரசிம்மவர்மரின்போக்குவரவுகளைக்

கவனித்து வரும்படி, கண்ணபிரானுடைய தந்தையைச் சத்ருக்னன் ஏற்படுத்தியிருந்தான்.



நரசிம்மவர்மர் சக்கரவர்த்தியின் கட்டளையைப் பரிபூரணமாக நிறைவேற்றி வைத்ததாகத் தெரிய வந்தது. சென்ற எட்டு மாதத்தில் காஞ்சியை விட்டு மாமல்லர் வெளியே போகவேயில்லை. காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்வதிலேயே பெரும்பாலும் காலத்தைக் கழித்து வந்தாரென்று தெரிந்தது.

மேற்கூறிய விதம் சத்ருக்னன் தான் அறிந்து வந்த வரலாற்றையெல்லாம் கூறி முடித்த பிறகு, சக்கரவர்த்தி, "சத்ருக்னா! என்னுடைய கட்டளையை மிக நன்றாக நிறைவேற்றியிருக்கிறாய். செய்தி இவ்வளவுதானா? உன் முகத்தைப் பார்த்தால் இன்னும் ஏதோ முக்கிய சமாசாரம் இருப்பது போல் தோன்றுகிறதே!" என்று கூறினார்.

"ஆம் பிரபு! சில ஓலைகள் கிடைத்தன அவற்றைத் தங்களைத் தவிர யாரும் பார்க்கக் கூடாதென்று நேரில் கொண்டு வந்தேன்."

"ஓலையா? என்ன ஓலை?" என்று சக்கரவர்த்தி வியப்புடன் கேட்டுக்கொண்டே கரத்தை நீட்டினார்.

"பல்லவேந்திரா! ஒருவேளை நான் செய்தது குற்றமாயிருந்தால் மன்னிக்க வேண்டும்..." சக்கரவர்த்தி துள்ளி எழுந்து, "முட்டாளே! துர்விநீதனுக்குப் புலிகேசி அனுப்பிய ஓலையைத் தடுத்து நிறுத்தி விட்டாயா?" என்று கோப கர்ஜனை செய்தார்.

"இல்லை, பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும் நான் சொல்லும் ஓலை யுத்தத்தைப் பற்றியதே அல்ல!"

"நல்லவேளை! எங்கே அப்படி ஏதாவது அசட்டுத்தனமாய்க் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாயோ என்று பயந்து போனேன். பின்னே எந்த ஓலையைச் சொல்லுகிறாய்?"

"பல்லவேந்திரா! நான் கொண்டு வந்திருப்பது காதல் ஓலை!"

'ஆ!' என்ற வியப்பொலியுடன் சக்கரவர்த்தி தமது பீடத்தில் அமர்ந்தார். அவருடைய புருவங்கள் நெறித்தன. நெற்றியில் சுருக்கங்கள் காணப்பட்டன.

"எங்கே? எடு, ஓலையைப் பார்க்கலாம்" என்றார்.

சத்ருக்னன் தலையிலிருந்து முண்டாசை எடுத்தான், அதற்குள்ளேயிருந்த ஓலைச் சுருள்கள் எட்டையும் எடுத்துத் தயக்கத்துடன் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான். மகேந்திரர் ஓலைகளை வாங்கிக் கொண்டார். சற்று நேரம் ஓலைகளைக் கையிலே வைத்துக்கொண்டு சிந்தனை செய்தார்.

பிறகு "சத்ருக்னா! இராஜ்யம் ஆளுவதைப் போல் கொடுமையான காரியம் வேறொன்றும் இல்லை. இராஜ்யத்தின் நன்மைக்காக நான் இந்த நீசத்தனமான காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது! மாமல்லனுடைய குழந்தை உள்ளத்தைக் கீறிப் பார்க்கும் பயங்கரமான பாவத்தைச் செய்யப் போகிறேன்" என்றார்.

(சபதம் தொடரும்)




## பாரம்பரிய மருத்துவம்: சீனா வழிகாட்டுகிறது !

பாரம்பரிய மருத்துவத்துக்கு எதிர்ப்பாகவும் ஆதரவாகவும் நேரெதிராக இரு தரப்புகளின் விவாதங்களும் சூடாக நிகழ்ந்துகொண்டிக்கின்றன. இந்தத் தருணத்தில் சீனாவில் பாரம்பரிய மருத்துவத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைப் பற்றிப் பார்ப்பது நம் புரிதலைத் தெளிவுபடுத்திக்கொள்ள உதவும்.

அதே காலகட்டத்தில் வியட்நாம் போரினால் ஏராளமான போர்வீரர்கள் மலேரியா காய்ச்சலில் இறந்து போனார்கள். அப்போது சீனாவின் ராணுவத் துறை மலேரியாவைக் கட்டுப்படுத்த தன் பாதுகாப்புத்துறையின் கீழ் ஆய்வை முடுக்கிவிட்டது. பெரும்பாலான மக்கள், மலேரியாவால் காய்ச்சல், குளிர் ஜுரம் வந்தாலே பாரம்பரிய சீன மருந்துக் கஷாயத்தில் பலன் பெற்றதை உன்னிப்பாகக் கவனித்த அரசு, பாரம்பரிய சீன மருத்துவத்தை ஆய்வு செய்யச் சொல்லி அறிவியலாளர்களை



1965—70—களில் உலகெங்கும் இருந்த மிகக் கடுமையான தொற்று மலேரியா. குறிப்பாக, சீனா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளிலும் கொத்துக் கொத்தாக மக்கள் செத்து மடிந்துகொண்டிருந்தனர். மலேரியாவுக்கு அப்போதிருந்த ஒரே மருந்து கொய்னைன் என்பதுதான். கொய்னா மரத்தின் வேர்ப்பட்டைதான் அது. அதைத்தான் சீன மக்கள் பயன்படுத்திவந்தார்கள். ஆனால், பிற்பாடு கொய்னைனுக்கு எதிராக மலேரியா கிருமி எதிர்ப்புத்தன்மையை வளர்த்துக்கொண்டதால் கொய்னைனும்கூட வேலை செய்யாமல் போய்விட்டது.

முடுக்கிவிட்டது. நவீன மருத்துவர்களுக்கும் நவீன ஆய்வாளர்களுக்கும் சீன மருத்துவத்தில் 2 ஆண்டு காலப் பயிற்சியை சீன அரசு கட்டாயமாக்கியது. அதேபோல், பாரம்பரிய சீன மருத்துவர்களுக்கும், அடிப்படை நவீன அறிவியல் கற்றுக்கொடுக்கப்பட்டது. இச்சூழலில்தான், மருந்தியல் பட்டதாரியான யூயூ டு என்ற பெண் ‘மலேரியா கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி’க்கு அதிகாரியாக வருகிறார்.

### கூட்டு முயற்சி

மலேரியாவுக்காக மக்கள் அதிகமாக




# கு. சிவராமன்

எடுத்துக்கொள்ளும் மூலிகைக் கஷாயங்களை எல்லாம் யூயூவின் குழு சேகரித்தது. கி.மு. 700—லிருந்து கி.பி. 1000 வரையிலான பல நூறு சீன மருத்துவ நூல்களில் உள்ள தகவல்களை வைத்து அந்தக் கஷாயங்களில் எவை பயன் தரக்கூடியவை என்று சீனப் பாரம்பரிய மருத்துவர்களுடன் கலந்தாலோசித்து, சில மருந்துகளைத் தேர்ந்தெடுத்தார்கள். தேர்ந்தெடுத்த கஷாயங்களை, பாரம்பரிய சீன மருத்துவத் துறை, மருந்தியல் துறை, நவீன மருத்துவர்கள் துறை ஆகிய மூன்று துறையினரும் கூட்டாக இணைந்து




1970—களிலிருந்து ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். 1990 வரை இந்த ஆய்வுகள் நீடிக்கின்றன. இந்த ஆய்வில் 'க்யுங்ஹோ' (னிவீஸீரீ—லீணீஷீ) என்கிற தாவரத்துக்கு 'எண்: 190' என்று மறைமுகப் பெயர் இடுகிறார்கள். இதன் கஷாயம் பெரிய அளவில் பயன்படக்கூடியது என்று அவர்கள் கண்டறிகிறார்கள். அதன் மூலம் பலர் குணமடைவதையும் கண்கூடாகப் பார்க்கவும் செய்கிறார்கள்.

ஆனால், சாறு எடுத்து அதில் உள்ள சத்துக்களை அறிவியல் முறையில் பிரித்தெடுத்தால் வேலை செய்யவில்லை. 'கஷாயமாக வேலை செய்யும்போது ஏன் நவீன மருத்துவமாக வேலை செய்யவில்லை?' என்ற கேள்வியுடன் பாரம்பரிய சீன மருத்துவர்களிடம் திரும்பவும் செல்கிறார்கள். 'இதர கஷாயங்களைத் தண்ணீரில் கொதிக்க வைத்துத் தயாரிக்க வேண்டும்; ஆனால் இதைத் தண்ணீரில் ஊற வைத்து, அலசி, அதைப் பிழிந்து எடுக்க வேண்டும்,' என்று சீன மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்தக் கஷாயத்தைச் சூடு செய்தால், அந்தத் தாவர வேதிப்பொருள் வலுவிழக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு பாரம்பரிய சீன மருத்துவத்தில் எப்படி தயாரித்தார்களோ அதே முறையில் ஊறவைத்து அந்த வேதிப்பொருளைப் பிரித்தெடுக்கிறார்கள். அந்த தாவர வேதிப்பொருள் (எண்:190) மலேரியாவுக்கு எதிராக 100% எதிர்ப்பைத் தருவதைக் கண்டறிகிறார்கள்.

அடுத்து நோயாளிகளிடம் பரிசோதனை செய்ய வேண்டும். ஆனால், அப்படிக் கண்டறியப்பட்ட சத்து சில நச்சுத்தன்மைகளையும் தருவதை ஆய்வாளர்கள் கண்டறிகிறார்கள். யூயூவுக்கு இது பெரும் கவலையையும் பின்னடைவையும்




தருகிறது. அடுத்த மழைப் பருவத்துக்குள் (மலேரியா அப்போதுதான் வரும்) நச்சு இருக்கிறதா இல்லையா என்பதை ஆய்ந்தறிய வேண்டும். யூயூவின் குழு, 'இத்தனை ஆயிரம் ஆண்டு காலம் பயன்பட்ட பொருள் எப்படி நச்சைத் தரும்? நாமே இந்த மருந்தை எடுத்துக்கொண்டு சோதித்துக்கொள்ளலாம்' என முடிவு செய்து அவரும் அவரோடு பணியாற்றிய விஞ்ஞானிகளுமே அம்மருந்தை எடுத்துக்கொண்டார்கள்.

மருந்து எடுக்கும் முன்னர் அவர்கள் உடல் நிலை, ரத்தத்தின் பல்வேறு அளவுகள், உடலின் நொதிகள் போன்றவை குறிப்பெடுக்கப்படுகின்றன. 'எண் 190' மருந்தை எடுத்துக்கொண்ட பின்னர், என்ன மாற்றம் ஏற்படுகிறது என்பதைப் பதிவுசெய்தனர். தங்களையே சோதனைக் களமாக்கி, அந்த ஆய்வு முடிவில் அந்த மருந்து 100% பாதுகாப்பு என்பது திட்டவட்டமாக அறியப்படுகிறது.

பின்னர், முதல்கட்டமாக 20 மலேரியா நோயாளிகளுக்கு அந்த மருந்து கொடுக்கப்படுகிறது. 100% பயன் இருப்பதை அறிந்துகொண்ட பின் ஆய்வறிக்கையை உலக அரங்கில் வெளியிடுகிறார்கள். அந்த மருந்துக்கு அர்டிமிசினின் (Artemisinin) எனும் பெயர் இடப்படுகிறது. அதன்பின் 2.5 கோடி ஆப்பிரிக்க, சீன மக்களை அந்த மருந்து உயிர் பிழைக்க வைத்தது.

### நோபல் பரிசைப் பெற்றுத்தந்த மருந்து

இதில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் இந்த இருபது வருட ஆராய்ச்சியில், ஒரு பக்கம் சீனப் பாரம்பரிய மருத்துவர்கள் மலேரியாவுக்கு க்யுங்ஹோவைக் கஷாயமாக மக்களுக்குக் கொடுத்துக்கொண்டுவந்தார்கள்; இன்னொரு பக்கம் நவீன மருத்துவர்கள், சீனப் பாரம்பரிய மருத்துவர்கள், மருந்தியல் ஆய்வாளர்களின் கூட்டு ஆய்வும் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்தது. இந்த ஆராய்ச்சி நடந்துகொண்டிருந்தபோது 'இது நச்சுத்தன்மையைக் கொடுக்கும், பலனளிக்காது' என்றும் பல சர்ச்சைகள் எழுந்தன. அவற்றையெல்லாம் தாண்டி சீன அரசின் அணுகுமுறையாலும், ஆராய்ச்சியாளர்களின் கூட்டு முயற்சியாலும் 'அர்டிமிசினின்' கண்டறியப்பட்டு உலகுக்குக் கிடைத்தது. அந்த மருந்து, 2015—ன் நோபல் பரிசை யூயூவுக்குப் பெற்றுத்தந்தது.

### மா சேதுங்கும் பாரம்பரிய மருத்துவமும்

புதிய சீனாவைப் படைத்த மா சேதுங் இப்படிச் சொல்கிறார்: "எனக்குப் பழமைவாதத்தின் மீது நம்பிக்கை கிடையாது. புதிய சீனாவை பழமையின் பிடியிலிருந்து வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதுதான் எங்களின் முதல் வாதமே. ஆனால், சீனாவில் பெருவாரியான மக்கள் இந்தப் பாரம்பரிய மருந்தால் குணமடைந்துவருவதாலும், என் மக்களுக்கு இத்துறையில் அதீத நம்பிக்கை இருப்பதாலும் இந்தச் சீனப் பாரம்பரிய மருத்துவத்துக்கு என் அரசு முன்னுரிமை கொடுத்து அதைப் பயன்பாட்டுக்கும் ஆய்வுக்கும் எடுத்துக்கொள்ளும்."





> The difference between Western medicine and traditional Chinese medicine is we tend to treat the condition. Chinese (medicine) treats the whole animal.

அன்று அவர் எடுத்த முடிவுதான் மருத்துவத் துறையில் சீனாவுக்கு நோபல் பரிசைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது; உலகின் முக்கியமான பாரம்பரிய மருத்துவமாக சீன மருத்துவத்தை இன்று அறிய வைத்திருக்கிறது.

இங்கும் நிலவேம்புக் கஷாயம் உள்ளிட்ட எளிய மருந்துகள், சித்த, ஆயுர்வேத மருந்துகளில் ஏராளமாய் உள்ளன. அர்டிமிசினின் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தை விட மருத்துவ ஆய்வு முறைகள் தற்போது பல மடங்கு உச்சத்தில் உள்ளன.

நாம் என்ன செய்யப்போகிறோம்? இப்படியே, ‘பாரம்பரிய மருந்துகளே பலனளிக்காது; நச்சுத்தன்மை கொடுக்கக் கூடும்’ என்று குறை மட்டும் சொல்லிக்கொண்டிருக்கப் போகிறோமா அல்லது யூயூ டுவை முன்னோடியாகக் கொண்டு அத்தனை மருத்துவத் துறையினரும் ஆய்வறிஞர்களும் கூட்டாகப் பணியாற்றப்போகிறோமா என்பதே நம் முன்னாள் தற்போது உள்ள கேள்வி.

*சித்த மருத்துவர், சித்த மருத்துவ நூல்களின் ஆசிரியர்,*






# கதைகளில்

### கதை சொல்லும் குழந்தைகள்.

காலங்காலமாக நம்முடனேயே உலவும் கதைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட கதைகளைச் சொல்லும் கதை சொல்லிகள் என்று நமது குழந்தைகளை நாம் கொண்டாட வேண்டும்.

ஓர் இசைக் கலைஞனின் சங்கீத மனோபாவத்தையும் ஓர் ஓவியக் கலைஞனின் வர்ண மனோபாவத்தையும் ஒரு கவிஞனின் சாஹித்ய மனோபாவத்தையும் ஒன்றாகக் கலந்த கற்பனைத் திறன்களைக் கொண்டவர்கள் குழந்தைகள்.

குழந்தைகளிடம் கதைகள் சொல்லும்போது




அந்த கதைகளுக்கான முடிவுகளை சொல்லும்படி அவர்களிடமே கேளுங்கள். சாதாரணமான கற்பனைக் கதைகளுக்கு அவர்களின் கவனிப்புத் திறனும் கற்பனைத் திறனும் ஒருசேர அவர்கள் சிறந்த முடிவுகளையும் வினோதமான திருப்பங்களையும் சொல்வார்கள்.

குடும்பத்திலுள்ள மூத்தோர், தங்களது அனுபவ அறிவையும் கற்பனைகளையும் கலந்துக் குழந்தைகளுக்குக் கதைகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

கதை சொல்லிகள் எனும் நமது குழந்தைகளை ஒரு நெருக்கடியான வாழ்வியலுக்கு உட்படுத்துவதிலேயே நாம் தீவிரமாக இருக்கிறோம்.

அதிகமாகபணம்வசூலிக்கும்பள்ளிதரமானபள்ளி என்ற நமது குருட்டு நம்பிக்கைக்கு குழந்தைகளைத் தாரைவார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர்களின் படைப்பாற்றலுக்கு வலு சேர்க்கும் கல்வி முறையில் கவனம் செலுத்தவில்லை.

வயிற்றுக்காகக் கற்றல், அவசியத் தேவைகளுக்காகப் படித்தல் இவை நமது கதை மரபை மரணமடையச் செய்துவிட்டன. இவற்றையெல்லாம் கடந்து நமது குழந்தைகளின் படைப்பாற்றல் பற்றி நாம் யோசிக்க வேண்டும்.

ஒரு கதைக்கான திருப்புமுனைகளை விளக்கிவிட்டு கதைக்கான சாவியை கடலில் தூக்கிப் போட்டாலும் தேடிக் கண்டுபிடித்து அதனைத் திறக்க ஆரம்பித்து கதை எனும் கம்பளத்தை விரித்துவிடுவார்கள் நமது குழந்தைகள். எனவே நமது குழந்தைகளுடன் உறவாட கதைச் சொல்லிகளாக நாம் மாற வேண்டும்.

இன்றைய உங்களின் அலுவல்களை முடித்துவிட்டு வீட்டிற்குப் போனதும் உங்கள் குழந்தையிடம் ஒரு சாதாரணமான பாட்டி வடை சுட்டக் கதையைச் சொல்லி அந்த நரிக்கும் காகத்திற்கும் வேறு ஏதாவது ஒரு முடிவைச் சொல்லிச் சொல்லி கேட்டுப்பாருங்கள். கற்பனைகள் விதவிதமாக பிறக்கும்.


# வளரும் குணநலம்

## வியாகுலன்

இலக்கிய மேதைகள் என நாம் எண்ணங்கொண்டிருக்கும் நம் இலக்கியவாதிகளே குழந்தை இலக்கியம் குறித்து பேசியதோ பதிவு செய்ததோ இல்லாத ஓர் இலக்கிய சூழல்தான் இங்கு நிலவுகிறது.

எனவே நமது படைப்பாளிகளை ஒருங்கிணைத்து குழந்தைகளுக்கான இலக்கியம்,

அவர்களின் கதைகளில் தினந்தோறும் பாட்டி வடை சுட்டு காகம் தூக்கிப் போனாலும் பாட்டியும் காகமும் நரியுமுடனுமான இரவை குழந்தைகள் நேசித்தார்கள். கதைக்குள் இருக்கிற தந்திரங்களை அவர்கள் அறிந்தார்களில்லை.






இசை, ஓவியம், பாடல்கள் என்ற வகைமைகள் குறித்து கருத்தரங்கங்கள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை நமது அரசு பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் நிகழ்த்த வேண்டும்.

கதைகள் கேட்டு வளர்ந்த குழந்தைகளின் மன வலிமை வேறு மாதிரியானது. அது ஒரு பாரம்பரியம். அற்புதமான மூதாதையர்களும், பெற்றோரும் வாய்த்த பாரம்பரியம். அவர்கள் கதை சொல்கிற நேரத்தைக் குழந்தைகள் அறிந்திருந்தார்கள். அந்த நேரத்திற்காகக் காத்துக்கிடந்தார்கள்.

பின்பு, கதைகள் என்ன உணர்த்தின குழந்தைகளுக்கு? தாயை, தகப்பனை, தாத்தாவை, பாட்டியை, சகோதரனை, சகோதரியை, நண்பனை, ஆசிரியரை, வெட்டுக்கிளியை, காகத்தை, யானையை, நரியை, பூச்சிகளை, தட்டான்களை, இரவுகளை, சூரியனை, நிலவை, பேருந்தை, புகைவண்டியை, ஆகாய விமானத்தை இப்படி ஒவ்வொன்றாய் பரவசமாக முதன் முறையாக உணர்ந்தார்கள்.

மீண்டும் மீண்டும் கதை கேட்டாலும் ஒவ்வொரு முறையும் முதன் முறை போலவே உணர்ந்தார்கள்.




குழந்தைகளே கதைகளாக மாறி உறங்கிப் போனார்கள். அந்த உறக்கம் முக்கியமானது. அதுதான் அவர்களின் மனம். அது அவர்களின் ஆழ்ந்த உறக்கத்தில் அவர்களோடு நெருக்கமாக உறவாடும்.

உறக்கத்தில் அவர்கள் சிரிப்பார்கள். அழுவார்கள். பேசுவார்கள். பயம் கொள்வார்கள். மனம் அவர்களுள் உருவாகிறது. அவர்களாக உருமாறுகிறது. அந்த உருமாற்றமே காலம்பூராவும் அவர்களோடு வருகிறது.

நம் குழந்தைகளிடம் கதைகள் கேட்க வேண்டும். அவர்களின் ஓவியங்களைப் பார்க்க வேண்டும். புதிய விதமான அவர்களின் கேள்விகளுக்கு, சந்தேகங்களுக்கு அவர்களுக்குப் பிடித்தமான புன்சிரிப்போடு பதில்கள் தர வேண்டும். நமது நேரத்தை ஒதுக்கி அவர்களோடு ஒட்டி உறவாட ஒதுக்க வேண்டும். குழந்தைகளைக்காட்டிலும் முக்கிய வேலை எதுவுமில்லை.

கதை, விளையாட்டு, ஓவியம், நுண்கலைகள் இவற்றின் மூலம் குழந்தைகளுக்கு அறிவியல், கணிதம், சுற்றுச்சூழல், வரலாறு, புவியியல், விண்வெளி ஆய்வு போன்றவற்றை எளிதில் புரிந்துகொள்ளும் மனோபாவத்தையும் பாடத்திட்டங்களில் ஆர்வத்தையும் உருவாக்கிட முடியும்.

இதிகாசங்கள், தொல்கதைகள், நாட்டுப்புறக் கதைகள், அறிவியல் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் இவற்றிலெல்லாம் ஒரு நுட்பமான ஈடுபாட்டைக் குழந்தைகள் கண்டடைய வழிவகை செய்ய வேண்டும்.

அவர்களின் இயல்பை சிதைக்கும் பாடத்திட்டத்தின் தேவையற்ற வரலாறுகள், வயதிற்கு மீறிய பாடத் திணிப்புகள் இவற்றிலிருந்து நம் பிள்ளைகளுக்கு விடுதலை கொடுக்க வேண்டும்.

குழந்தைகள் என்னவாக உருவாக வேண்டும். அவர்களிடம் என்ன திறமை இருக்கிறது. அவர்களின் திறமையும் ஆர்வமும் எந்தப் புத்தகத்தில் புதைந்திருக்கிறது என்பதை ஓர் ஆசிரியர் கண்டறிய வேண்டும். இல்லையெனில் கதை சொல்லிகளுக்கு வழிவிட வேண்டும்.


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# தமிழ் 2017

நற்றமிழரின் நாடித்துடிப்பு


## January




## February




## March




## April



## May



## June



## July



## August



## September



## October



## November

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |
| | | | | | | |

## December

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |




அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा